CASSA



தெற்கு
ஆசியர்களுக்கு
சேவை செய்யும்
முகவர் சபை

# அகதிப்பெண்
# களுக்கான
# சட்டக் கல்வி

கருவித்
தொகுதி

2020

வெளியிட்டவர்:
தெற்கு ஆசியர்களுக்கு சேவை செய்யும் முகவர் சபை (CASSA)
5200 Finch Ave E. Unit No.301A
Scarborough, Ontario M1S
4Z5தொலைபேசி எண்: (416) 932-1359
இணையதளம்: www.cassa.on.ca

முதலில் வெளியிடப்பட்டது: ஜூன் 1, 2020

© பதிப்புரிமை 2020 சேவை முகவர் கவுன்சில் தெற்கு ஆசியர்கள்.அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த வெளியீட்டின் எந்தப்பகுதியும் தெற்காசியர்களுக்கு சேவை செய்யும் முகவர் கவுன்சிலின்எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்த வகையிலும் எந்த வகையிலும்இனப்பெருக்கம் செய்யவோ, கடத்தவோ, படியெடுக்கவோ,மீட்டெடுக்கும் முறையிலோ சேமிக்கவோ அல்லது எந்த வகையிலும்எந்த மொழியிலோ மொழிபெயர்க்கவோ கூடாது. இது தெற்காசியர்களுக்குசேவை செய்யும் ஏஜென்சிகளின் கவுன்சிலின் முன்அனுமதியின்றி வர்த்தகம் மூலமாகவோ அல்லது விற்கவோ,கடன் கொடுக்கவோ, பணியமர்த்தவோ அல்லது வேறுவிதமாகவிநியோகிக்கவோ கூடாது என்ற புரிதலுடன் விநியோகிக்கப்படுகிறது.

Dமறுப்பு: ஒன்ராறியோவின் சட்ட அறக்கட்டளையால் நிதி ரீதியாக ஆதரிக்கப்படும் அதே வேளையில், தெற்காசியர்களுக்கு சேவை செய்யும் முகவர் சபை அனைத்து உள்ளடக்கங்களுக்கும் மட்டுமே பொறுப்பாகும்.

# ஒப்புதல்கள்

டொரண்டோ மற்றும் லண்டன், ஒன்ராறியோவில் பல நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் முன்னெடுக்கும் முயற்சிகளை தெற்கு ஆசியர்களுக்கு சேவை செய்யும் முகவர் சபை (Council of Agencies Serving South Asians - CASSA) அங்கீகரிக்க விரும்புகிறது. அவர்களின் உள்ளீடு, வழிகாட்டல், வளப் பங்கீடு மற்றும் கருவித் தொகுப்பு உள்ளடக்கத்தை சரிபார்த்தல் இல்லாமல் இந்த கருவித் தொகுப்பானது உருவாக்கம் பெற்றிராது. ஆலோசனைகள், கணக்கெடுப்பு செயற்பாடுகள், குழு விவாதங்களின் போதான உதவிகள் என திட்டக் காலம் முழுவதும் எங்களுக்காக நேரத்தை செலவிட்ட உங்கள் அனைவரையும் நாங்கள்  பாராட்டுகின்றோம்.

விசேடமாக எங்கள் பங்காளர்களின் உதவிகளை நாங்கள் அங்கீகரிக்க விரும்புகின்றோம். அவர்கள் ஆலோசனைகள் வழங்க மாத்திரம் அல்லாமல், தகவல் சேகரிப்பு மற்றும் தகவல் பரப்பல் கட்டத்தில் பங்கேற்பாளர் சேர்ப்பு மற்றும் மொழிபெயர்ப்பு சேவைகளுக்காகவும் தங்களின் நேரத்தை செலவிட்டு எங்களுக்கு உதவினார்கள்.

நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் கீழே அகர வரிசைப்படி பட்டியலிடப்பட்டுள்ளனர்.

CASSA-வின் பங்காளர்கள்

- டொராண்டோவில் உள்ள அரபு சமூக நிலையம் - Arab Community Centre in Toronto (ACCT)
- வெவ்வேறு கலாசார கற்றல் நிலையம் - Cross Cultural Learner Centre (CCLC)
- குடியமர்வு சேவைகள்  உதவி மற்றும் குடும்ப ஆதரவு சேவைகள் - Settlement Assistance and Family Support Services (SAFSS)
- ஒன்ராறியோவின் தெற்காசிய சட்ட நிலையம் - South Asian Legal Clinic of Ontario (SALCO)

சேவை வழங்குநர்கள்:

- சமூக சட்டக் கல்வி ஒன்ராறியோ - Community Legal Education Ontario (CLEO)
- FCJ அகதி நிலையம் - FCJ Refugee Centre
- புலம்பெயர்ந்தோருக்கு உதவும் ஒன்ராறியோ முகவர்கள் சபை - Ontario Council of Agencies Serving Immigrants (OCASI)
- பஞ்சாபி சமூக சுகாதார சேவைகள் - Punjabi Community Health Services (PCHS)
- தென்மேற்கு ஒன்ராறியோவின் YMCA - YMCA of Southwestern Ontario

சட்ட வல்லுநர்கள்:

- செரில் ஹரிஸ் (சட்டத்தரணி மற்றும் வழக்குரைஞர்) -  Cheryl Harris (Barrister and Solicitor)
- சீன மற்றும் தென்கிழக்கு ஆசிய சட்ட நிலையம் - The Chinese & Southeast Asian Legal Clinic
- எட் கொரிகன் சட்ட அலுவலகம் - The Ed Corrigan Law Office
- குடும்ப சட்ட தகவல் மையம் லண்டன்  - Family Law Information Centre in London

**இந்த கருவித்தொகுப்பிற்காக ஆய்வுகள், வரைபு, தொகுப்பு மற்றும் இறுதி செய்தல் பணிகளில் உதவிய எமது ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களே, நீங்கள்  CASSA-வின் விலைமதிப்பற்ற வளங்களாக உள்ளீர்கள்.  உங்களுடன் இணைந்து பணியாற்றுவதில் பெருமிதம் கொள்கிறோம்.**

*இந்த திட்டத்திற்கு நிதியுதவியும் ஒத்துழைப்பும் வழங்கிய ஒன்ராறியோவின் சட்ட அறக்கட்டளைக்கு (Law Foundation of Ontario-LFO) எமது விசேட நன்றிகளும் பாராட்டுக்களும்.*

# அறிமுகம்

CASSA-இனுடைய "அகதிப் பெண்களுக்கான சட்டக் கல்வி" எனும் கருவித்தொகுப்பானது (toolkit), கனடாவில் தமக்குள்ள உரிமைகள், பொறுப்புக்கள் பற்றி அவர்கள் விளங்கிக்கொள்ள உதவுவதன் மூலமும் தமக்காக வாதாடுவதற்குத் தேவையான தகவல்களை வழங்குவதன் மூலமும் அகதிப்பெண்கள் ஏனைய சமுதாயங்களுடன் தம்மை ஒருங்கிணைத்துக்கொள்வதில் இருக்கும் பல்வேறு தடைகளை நீக்குவதை இலக்காகக் கொண்டுள்ளது. அவர்களது சொந்த மொழியில் சட்டம் சார்ந்த தகவல்கள் கிடைப்பது குறைவாயிருத்தல், கிடைக்கக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்கள், சேவைகள் தொடர்பான விழிப்புணர்வு குறைவாயிருத்தல், தமதும் தமது குடும்பத்தினதும் நல்வாழ்வுக்குத் தேவையான அறிவுபூர்வமான முடிவுகளை எடுப்பதற்கு வேண்டிய தகவல்கள் குறைவாய்க் கிடைத்தல் ஆகியனவே மிகவும் பிரச்சினைக்குரிய தடைகளாகும்.

மொழித்தடை, குடும்பத்திலிருந்து பிரிந்து தனித்திருத்தல், பாதுகாப்பற்ற பணிச்சூழல், நிச்சயமற்ற குடிவரவு நிலை போன்ற காரணங்களால் சுரண்டலுக்கும் பாலியல் ரீதியான, பால்நிலையை அடிப்படையாகக்கொண்ட வன்முறைக்கும் இனப்பெருக்க சுகாதார இடர்களுக்கும் ஒடுக்குமுறைக்கும் வறுமைக்கும் உள்ளாபவர்களாக அகதிப்பெண்களே உள்ளனர் என்கிற அடிப்படையில் இக் கருவித்தொகுப்பு குறிப்பாக அகதிப் பெண்களை தனது இலக்காகக்கொள்கின்றது. இக் கருவித்தொகுப்பின் நோக்கத்திற்காக, அகதிகள் சாசனத்தின் அடிப்படையிலானவர்கள், பாதுகாக்கப்பட்டவர்கள், அகதி நிலை கோருபவர்கள் ஆகியோர் அகதிப்பெண்கள் எனும் தொகுதிக்குள் உள்ளடக்கப்படுகிறார்கள். இத் துணைக்குழுக்கள் ஒவ்வொன்றினதும் தனித்துவம் தேவையான இடங்களில் இக் கருவித்தொகுப்பிலே விரிவாகக் கூறப்படும்.

அகதிப்பெண்கள் தொடர்பான அக்கறைக்கும் அவர்களது நலனுக்குமான பல்வேறு விடயங்கள் தொடர்பில் அகதிப்பெண்களுக்குப் பொருந்தக்கூடிய உரிமைகள், பொறுப்புக்கள் ஆகியன பற்றி இக்கருவித்தொகுப்பு ஆவணப்படுத்தியுள்ளது. சட்ட உதவி, குடும்பச் சட்டம், சிறுவர் உரிமைகளும் சலுகைகளும், குடிவரவுச் சட்டம், வேலைவாய்ப்பு, சுகாதாரம், கல்வி, வீட்டுவசதி, நிதி போன்ற விடயங்களை இது உள்ளடக்குகிறது. டொரான்டோ, லண்டன், ஒன்டாரியோ ஆகிய இடங்களில் இருக்கக்கூடிய பல உதவிக்குழுக்களதும் நிறுவனங்களதும் பட்டியலையும் இது கொண்டுள்ளது. மேலதிக உதவிக்கும் துணைக்கும் அவர்கள் இவற்றை அணுகலாம்.

ஒன்டாரியோவெங்கும் உள்ள அகதிப்பெண்கள் இக் கருவித்தொகுப்பினைப் பெறவும் பயன்படுத்தவும் கூடியதாயிருக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம். இதனால் அவர்களுக்கு தமது உரிமைகள், கடமைகள் பற்றிய விழிப்புணர்வு அதிகரிப்பதுடன் பாரபட்சங்களால் பாதிக்கப்படல், சுரண்டல், ஒடுக்குமுறை, துஷ்பிரயோகம் போன்றவற்றுக்கு உள்ளாகும் வாய்ப்பு குறைவடையும். சமூகத்திலிருந்து தனிமைப்பட்டிருக்கும் தமது நிலையிலிருந்து வெளியே வந்து, தமக்காகவும் தமது உரிமைகளுக்காகவும் தாமே வாதிடும் இயலுகையைப் பெற்றுக்கொண்டு கனேடியச் சமூகத்தோடு ஒருங்கிணைவதற்குத் தேவையான வளங்களை இக் கருவித்தொகுப்பு அகதிப்பெண்களுக்கு வழங்குவதையும் நாம் காண்கிறோம். தமதும் தமது பிள்ளைகளதும் வாழ்க்கையுடன் தொடர்புடைய முடிவுகளை எடுக்கும் செயற்பாடுகளில் தாம் இரண்டாந்தரப் பங்காளர்களாக இருப்பதாய் அகதிப்பெண்கள் உணர்கின்ற நிலையை இல்லாமலாக்குவதே இதன் இறுதி இலக்காகும்.

சட்ட உதவியையோ தகவல்களையோ பெற முயலும்போது அகதிப்பெண்கள் முகம்கொடுக்கவேண்டியிருக்கின்ற மொழித்தடையை நீக்கும் ஒரு முயற்சியாக இக் கருவித்தொகுப்பு நான்கு வெவ்வேறு மொழிகளில் கிடைக்கிறது. ஆங்கிலம், அரபு, தமிழ், உருது ஆகிய மொழிகளில் இக் கருவித்தொகுப்பு கிடைக்கிறது.

**இக்கருவித் தொகுப்பானது சட்ட அறிவுறுத்தலோ சட்ட ஆலோசனை தரும் ஆவணமோ அல்ல. எளிமையாகச் சொன்னால், இது அகதிப்பெண்கள் தமது பிரச்சினைகளை அடையாளம் காணவும் பொருத்தமான உதவிகளை நாடவும் உதவும் சட்டம் சார்ந்த தகவல்கள் ஆகும். இக் கருவித்தொகுதியானது எந்தவொரு முகவரது/ நிறுவனத்தினது கொள்கைக்கோ சேவைக்கோ பரிந்துரைப்பு வழிமுறைகளுக்கோ மாற்றாக அமையாது. சட்ட ஆலோசனைகளுக்கு சட்ட வல்லுநர் ஒருவரையே கலந்தாலோசிக்கவேண்டும்.**

# பொருளடக்கம்


07 **உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் சாசனம்**

09 **ஒன்டாரியோ மனித உரிமைகள் குறியீடு**

11 **சட்ட உதவி**
- சட்ட உதவி சான்றிதழ்கள்
- இலவச சட்ட உதவி மற்றும் ஆலோசனையை எங்கு பெற்றுக்கொள்வது?

15 **குடும்ப சட்டம்**
- திருமணம்
- விவாகரத்து/மணமுறிவு
- பொறுப்புக் காவல்
- குடும்ப வன்முறை மற்றும் துஷ்பிரயோகம்

23 **சிறுவர் உரிமைகள் மற்றும் நலன்கள்**
- கூட்டாட்சி சட்டம் மற்றும் குழந்தை பாதுகாப்பு
- குழந்தைகள் உதவி சங்கம் (CAS)
- குழந்தை நலன்கள்

27 **குடிவரவு**
- அகதி குடும்ப மீள் இணைவு
- அனுசரணை முறிவு
- மனிதநேயம் மற்றும் கருணை அடிப்படையிலான விண்ணப்பங்கள் (H&C):எவ்வாறு விண்ணப்பிப்பது?நாடு கடத்தல் விடயங்கள்: நீங்கள் தெரிந்திருக்க வேண்டியவை

31 **வேலைவாய்ப்பு**
- ஒன்டாரியோவில் வேலைவாய்ப்பிற்கான சட்டப்பூர்வ வயது
- தொழில் உரிமைகள்
- தொழில்வாய்ப்பிலும் உங்கள் உரிமைகளிலும் பாகுபாடு நிகழ சாத்தியமான பரப்புக்கள்
- உங்கள் உரிமைகள் மீறப்பட்டால் அல்லது நீங்கள் பாகுபாட்டை எதிர்கொண்டால் என்ன செய்வது?
- கனடாவில் தொழில் தகுதி
- அரசாங்கத்தால் உங்களுக்கு கிடைக்கும் வருமான உதவி
- குடிவரவு நிலை, பணி அனுமதி அல்லது சமூக காப்பீட்டு எண் இல்லாமல் பணத்தாள்களைப் பெற்று வேலை செய்தல்

**37** **சுகாதார பராமரிப்பு**
- சுகாதார காப்பீட்டு செயன்முறைகளும் திட்டங்களும்
- ஒரு நோயாளராக உங்கள் பொறுப்புகளை அறிந்து கொள்ளுங்கள்
- ஒரு நோயாளராக உங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளுங்கள்

**43** **கல்வி**
- கல்விச் சட்டம்
- உங்கள் குழந்தையை பாடசாலையில் சேர்ப்பதற்கு தேவையான ஆவணங்கள்
- பாடசாலை சூழல்
- இரண்டாம் நிலைக்குப் பிந்தைய கல்வி
- அரச நிதி உதவி
- இரண்டாம் நிலை மற்றும் பிந்தைய இரண்டாம் நிலை பட்டத்திற்கான அங்கீகாரம்
- இணைப்புத் திட்டங்கள்

**49** **வீட்டுவசதி**
- வீடமைப்பு வீட்டுவசதி தொடர்பான ஒன்டாரியோ மனித உரிமைகள் நெறிமுறை
- குடியிருப்பு வாடகை சட்டத்தின் படி (RTA) குடியிருப்பாளருக்குள்ள உரிமைகள்
- வாடகைக்கு எடுக்கும் போது நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது
- வெளியேற்றம்
- உங்கள் வீட்டு உரிமையாளருடன் தகராறுகளைத் தீர்த்துக்கொள்வது
- வீட்டுவசதி தொடர்பாக கிடைக்கக்கூடிய உதவிகள்
- வாடகை மற்றும் பாவனைக் கட்டணங்களுக்கு கிடைக்கும் உதவிகள்

**55** **நிதி**
- வங்கி
- கடன் மதிப்பெண்கள்
- வரிகள்

**59** **வளங்கள்**

# உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் சாசனம்

கனேடிய உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் சாசனம் குடியேற்ற நிலையைப் பொருட்படுத்தாமல் அனைவரின் அடிப்படை உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை (சில விதிவிலக்குகளுடன்*) உறுதிப்படுத்துகிறது.

உரிமை என்பது நீங்கள் தார்மீக ரீதியாக அல்லது சட்டப்பூர்வமாக பெறக்கூடிய ஒன்று. உங்கள் குடியேற்ற நிலையைப் பொருட்படுத்தாமல், சாசனத்தின் படி உங்களுக்கு உரிமைகள் உள்ளன.

ஒரு அகதியாக, உங்களுக்கும் உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கும் பொருந்தும் உரிமைகள் இதில் தரப்பட்டுள்ளன, ஆனால், இவற்றுடன் மாத்திரம் அவை மட்டுப்படுபவை அல்ல:




* சில விதிவிலக்குகளாவன:
- வாக்குரிமை - கனேடிய குடிமக்களுக்கு மாத்திரம் பொருந்தும்.
- நீங்கள் எப்போது வேண்டுமானாலும், நீங்கள் விரும்பும் போது கனடாவில் நுழைவதற்கும் இருப்பதற்கும் வெளியேறுவதற்குமான உரிமை - கனேடிய குடிமக்களுக்கு மாத்திரம் பொருந்தும்.

மற்றவர்களின் உரிமைகளை நீங்கள் எதிர்மறையாக பாதிக்காத வரை, குறுக்கீடு அல்லது கட்டுப்பாடு இல்லாமல் சுதந்திரமாக செயற்படுவதற்கும் பேசுவதற்கும் சிந்திப்பதற்குமான உரிமை

கனடாவில் வசிக்கும் அனைவருக்கும் குடியுரிமை மற்றும் குடியேற்ற நிலையைப் பொருட்படுத்தாமல் இந்த அடிப்படை சுதந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன:
- மதத்தை தெரிவு செய்வதற்கான உரிமை
- எண்ணங்கள், நம்பிக்கைகள், கருத்துக்கள் மற்றும் வெளிப்பாடுகளுக்கான சுதந்திரம்
- பொதுவெளியில் அமைதியாக ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம்
- சங்கங்கள் மற்றும் குழுக்களை உருவாக்குவதற்கான சுதந்திரம்

விதிவிலக்குகள் உடனான, அனைத்து உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் விரிவான பட்டியலைப் பார்வையிட கனேடிய அரசாங்கத்தின் இணையத்தளத்தில் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் கனேடிய சாசனத்தைப் பார்க்கவும். இணையத்தளத்திற்குள் பிரவேசிக்க https://www.canada.ca/en.html, பின்னர் கலாச்சாரம், வரலாறு மற்றும் விளையாட்டு → கனேடிய அடையாளம் மற்றும் சமூகம் → மனித உரிமைகள் என்பதைக் கிளிக் செய்க.



# ஒன்டாரியோ மனித உரிமைகள் நெறிமுறை

ஒவ்வொரு மாகாணமும் மத்திய அரசின் (கூட்டாட்சி) சட்டங்களுக்கு மேலதிகமாக அதன் சொந்த சட்டங்களையும் ஒழுங்குமுறைகளையும் கொண்டுள்ளது. ஒன்டாரியோ மனித உரிமைகள் நெறிமுறை (OHRC, The Code) என்பது ஒன்டாரியோ மாகாணத்தில் இடம்பெறும் மனித உரிமைகள் சார்ந்த பிரச்சினைகள், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றுக்குப் பொருந்தும். OHRC என்பது ஒரு மாகாணச் சட்டமாகும், இது பாதுகாக்கப்பட்ட சமூகப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட அடிப்படையில் எந்த பாகுபாடும் இல்லாமல் அனைவருக்கும் சம உரிமைகளையும் வாய்ப்புகளையும் நிறுவுகிறது. அனைத்து ஒன்டாரியோ சட்டங்களும் ஒரு நெறிமுறையைப் பின்பற்ற வேண்டும்.

## பாதுகாக்கப்பட்ட அடிப்படையில்

- குடியுரிமை (கடவுச்சீட்டு)
- பாலின அடையாளமும் வெளிப்பாடும்
- திருமண நிலை (தனிநபர் உட்பட)
- பொது உதவி பெறுதல் (வீட்டுவசதிகளில் மட்டும்)
- இயலாமை/ அங்கவீனம்
- இன தோற்றம்
- பாலியல் நோக்குநிலை
- குடும்ப நிலை (உ.ம். குழந்தைகளைப் பெற்றிருத்தல்)
- பாலியல் (கர்ப்பம் மற்றும் தாய்ப்பால் வழங்கல் உட்பட)
- பிறந்த இடம்
- குற்றங்களின் பதிவு (வேலைவாய்ப்பில் மட்டும்)
- வயது
- நம்பிக்கை
- வம்சாவளி, நிறம், இனம்

## பாதுகாக்கப்பட்ட சமூகப் பகுதிகள்




குடிவரவும் அகதி அந்தஸ்தும் இந்நெறிமுறையின் கீழ் பாதுகாக்கப்பட்ட அடிப்படைகள் இல்லை என்றாலும், ஒரு சாசனத்தின் படியான அகதி, பாதுகாக்கப்பட்ட நபர் அல்லது அகதி உரிமைகோருபவர் என்ற முறையில், உங்கள் குடியுரிமை நிலையின் அடிப்படையில் உங்களுக்கு பாகுபாடு காட்ட முடியாது.  இது அனைத்து சமூக பகுதிகளுக்கும் பொருந்தும். உதாரணத்திற்கு, அகதி எனும் உங்கள் குடியேற்ற நிலையின் அடிப்படையில் மட்டுமே உங்களுக்கு வீட்டுவசதியை மறுக்க முடியாது. அவ்வாறு மறுக்கப்பட்டால், குடியுரிமை, இன தோற்றம், பிறந்த இடம் போன்ற பல காரணங்களுக்காக மனித உரிமை மீறப்பட்டதாக மனித உரிமை மீறல் கோரிக்கையை நீங்கள் தாக்கல் செய்யலாம்.

*விதிவிலக்கு: வேலைவாய்ப்பைப் பொறுத்தவரை, கனேடிய குடியுரிமை அல்லது நிரந்தர வதிவிட நிலை என்பது வேலை நிலைக்கு ஒரு முக்கிய அளவுகோலாக இருக்கக்கூடும், இந்த விடயத்தில், இது மனித உரிமை மீறலாகக் கருதப்படுவதில்லை.*

நெறிமுறையின் கீழ் ஒரு செயல் பாகுபாடற்றதாகக் கருதப்படுவதற்கு, முறைப்பாட்டைத் தாக்கல் செய்யும் நபர் அதனை நிரூபிக்க வேண்டும்:

- இது பாதுகாக்கப்பட்ட அடிப்படையுடன் தொடர்புடையது (உ.ம். குடியுரிமை).
- இந்தச் செயல் பாதுகாக்கப்பட்ட சமூகப் பகுதியில் அவர்களை பாதித்தது (உ.ம். வீட்டுவசதி அல்லது வேலை தேடும் போது).
- பாதுகாக்கப்பட்ட அடிப்படைகள் என இங்கே குறிப்பிடப்படுபவையே பாகுபாட்டுச் சட்டம் இயற்றப்படக் காரணமாக அமைந்தன. (உ.ம். குடியுரிமை நிலையின் அடிப்படையில் வீட்டுவசதி வழங்க மறுப்பது).

உங்கள் மனித உரிமைகள் மீறப்பட்டிருந்தால், மற்ற தரப்பிடமிருந்து எந்தவொரு பதில் தாக்குதலுக்கும் அஞ்சாமல் ஒன்டாரியோவின் மனித உரிமைகள் தீர்ப்பாயத்தில் (The Tribunal) முறைப்பாடுசெய்ய உங்களுக்கு உரிமை உண்டு. ஒருவரின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதா என்று தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது.

உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தீர்ப்பாயத்தில் ஒரு விண்ணப்பத்தை தாக்கல் செய்ய மனித உரிமைகள் சட்ட உதவி மையம் (The Legal Support Centre) உங்களுக்கு உதவும். சட்ட உதவி மையத்தால் வழங்கப்படும் சேவைகளில் ஆலோசனை, ஆதரவு மற்றும் சட்ட பிரதிநிதித்துவம் ஆகியவை அடங்கும் என்பதுடன், அவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

# சட்ட உதவி




## சட்ட உதவி சான்றிதழ்கள்

### சட்ட உதவி சான்றிதழ் என்றால் என்ன?

இது, தனியார் வழக்கறிஞர் ஒருவர் குறிப்பிட்ட சில மணித்தியாலங்களுக்கு உங்களுக்கு சேவை வழங்குவார் எனவும் உங்களுக்கு செலவில்லாமல் கட்டணத்தை அரசாங்கம் செலுத்தும் எனவும் உறுதிப்படுத்தும் ஒரு பற்றுச்சீட்டு ஆகும். ஒன்டாரியோவில் உள்ள குறைந்த வருமானம் பெறும் வதிவாளர்களுக்கு Legal Aid Ontario (LAO)- வினால் இந்த சான்றிதழ் வழங்கப்படுகிறது. *குறிப்பு: அனைத்து வழக்கறிஞர்களும் சட்ட உதவி சான்றிதழ்களை ஏற்க மாட்டார்கள். சேவைகளைப் பெறுவதற்கு முன்பு நீங்கள் இதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.*

### சட்ட உதவி சான்றிதழைப் பெறுவதற்கான தகுதி

ஒன்டாரியோவில் சட்ட உதவிக்கு தகுதி பெற:

- நீங்கள் ஒன்டாரியோவில் வசிக்க வேண்டும்.
- குடும்ப சட்டம், குற்றவியல் சட்டம், குடிவரவு மற்றும் அகதிகள் சட்டம் போன்ற சேவைகளை LAO வழங்கும் பரப்புகளுக்குள் உங்கள் சட்டப் பிரச்சினை வர வேண்டும்.
- உணவு, வீட்டுவசதி போன்ற அடிப்படைகளுக்கு நீங்கள் பணம் செலுத்திய பிறகு உங்களிடம் சிறிதளவே பணம் எஞ்சியிருக்கவேண்டும். அல்லது, பணமே இல்லாதிருக்கவேண்டும்.
- சமூக உதவி பெறுபவர்கள் பொதுவாக சட்ட உதவிக்கு தகுதி பெறுவார்கள். உங்களின் வங்கிக் கணக்கில் பணம் சேமிக்கப்பட்டிருந்தாலும், சொந்தமாக வீடு இருந்தாலும் சட்ட உதவிக்கு நீங்கள் தகுதி பெறலாம்.

உங்கள் மொத்த குடும்ப வருமானம் இந்த விளக்கப்படத்தில் உள்ள தொகையை விட அதிகமாக இருந்தால், நீங்கள் சட்ட உதவி சான்றிதழுக்கு தகுதி பெற முடியாமற்போகலாம். *(LAO ஆல் அறிவிக்கப்பட்ட சமீபத்திய விபரம். புதுப்பிக்கப்பட்ட விபரங்களுக்கு LAO வலைத்தளத்தைப் பார்க்கவும்).*

| உங்கள் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5+ |
|---|---|---|---|---|---|
| குடும்பத்தின் மொத்த வருமானம் | $18,795 | $32,131 | $39,352 | $45,289 | $50,803 |
| குடும்ப துஷ்பிரயோக வழக்குகளுக்கு | $22,720 | $32,131 | $39,352 | $45,440 | $50,803 |

சில சந்தர்ப்பங்களில், உங்கள் மொத்த வருமானம் தகுதியான வரம்புகளை விட அதிகமாக இருந்தாலும், உங்கள் சட்ட செலவுகளுக்கு LAO உங்களுக்கு உதவ முடியும். அதன் ஒரு பகுதியையோ அல்லது அத்தொகை முழுவதையுமோ மாதாந்த தவணைகளில் திருப்பித் தருமாறு அவர்கள் உங்களிடம் கேட்கக்கூடும். ஒவ்வொரு மாதமும் நீங்கள் செலுத்த வேண்டிய தொகை உங்கள் மொத்த குடும்ப வருமானத்தைப் பொறுத்தது. இது பங்களிப்பு ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது. (LAO ஆல் அறிவிக்கப்பட்ட சமீபத்திய விபரம். புதுப்பிக்கப்பட்ட விபரங்களுக்கு LAO வலைத்தளத்தைப் பார்க்கவும்).

| உங்கள் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை | 1 | 2 | 3 | 4 | 5+ |
|---|---|---|---|---|---|
| குடும்பத்தின் மொத்த வருமானம் | $15,320 - $17,731 | $26,504 - $31,917 | $30,213 - $37,194 | $34,139 - $42,726 | $37,894 - $48,173 |
| மாதாந்த பங்களிப்பு | $50 | $50 | $75 | $75 | $115 |

**சட்ட உதவி சான்றிதழுக்கு விண்ணப்பித்தல்**
திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை நீங்கள் LAO-வை தொடர்புகொள்ளலாம். ஒன்டாரியோவில் 1-800-668-8258 எனும் இலவச அழைப்பு இலக்கத்தின் மூலமும் டொரன்டோவில்  (416) 979-1446 எனும் இலக்கத்தின் மூலமும் அவர்களைத் தொடர்புகொள்ளலாம். காலை 9 முதல் 10 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் அழைப்பு மேற்கொண்டால் விரைவான பதிலைப் பெறும் வாய்ப்புள்ளது. நீங்கள் 200 வெவ்வேறு மொழிகளில் சேவைகளைப் பெறலாம்.

LAO உங்களிடம் கேட்பவை:
1. உங்கள் வீட்டின் மொத்த வருமானம் என்ன?
2. உங்கள் தற்போதைய வருமானத்தின் அஞ்சல் அல்லது தொலைநகல் ஆதாரம்:
    a. வருமானவரி அறிக்கைகள்
    b. வங்கி அறிக்கைகள்
    c. சொத்துரிமை விபரங்கள்

# இலவச சட்ட உதவியையும் ஆலோசனையையும் எங்கே பெறுவது?

**சட்ட உதவி சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ளும் சட்ட நிறுவனங்களதும் வழக்கறிஞர்களதும் அலுவலகங்கள்.** சட்ட உதவி சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ளும் வழக்கறிஞரைக் கண்டுபிடிக்க:
1. LAO வலைத்தளத்திற்குச் சென்று, Services→ Finding the right legal aid lawyer எனும் பகுதியை சொடுக்கவும். நீங்கள் வசிக்கும் பகுதி, உங்களுக்கு உதவி தேவைப்படும் சட்டப் பரப்பு, உங்கள் மொழியைப் பேசும் வழக்கறிஞர் போன்ற விபரங்களை நீங்கள் தேர்ந்தெடுக்க முடியும்; அல்லது.
2. ஒன்டாரியோவின் சட்ட சங்கத்தின் (Law Society of Ontario's -LSO)  சட்ட சங்க பரிந்துரை சேவை (Law Society Referral Service) வலைத்தளத்திற்குச் செல்லுங்கள் அல்லது நீங்கள் அவர்களை 1-855-947-5255 என்ற எண்ணில் அழைக்கலாம். சட்ட சங்க பரிந்துரை சேவை  உங்களை ஒரு வழக்கறிஞருடன் அல்லது ஒரு சட்ட துணை உதவியாளருடன் இணைக்கிறது. இந்த இணையச் சேவை (ஒன்டாரியோவில் வசிப்பவர்களுக்கு மட்டுமே கிடைக்கிறது) உங்கள் பகுதியில் உள்ள வழக்கறிஞர்களின் பெயர்களை உங்களுக்கு வழங்கும். அவர்கள் உங்களுடன் சுமார் 30 நிமிடங்கள் பேசலாம். இணையம் வழியான கோரிக்கை, பரிந்துரை, 30 நிமிட ஆலோசனை என்பவை அனைத்தும் இலவசம். உங்கள் மொழியைப் பேசும் ஒரு வழக்கறிஞரை நீங்கள் கேட்கலாம் அல்லது ஒரு மொழிபெயர்ப்பாளரையோ அல்லது சட்ட உதவி சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ளும் வழக்கறிஞரையோ அல்லது இருவரையுமோ கோரலாம்.

# சட்ட உதவி

**சமூக சட்ட உதவி நிலையங்கள் *(Community Legal Clinics)*** (உங்களுக்கு அருகிலுள்ள சமூக சட்ட உதவி நிலையங்களின் பட்டியலுக்கு, உங்கள் அஞ்சல் குறியீட்டை இங்கே உள்ளிடவும்: *https://www.legalaid.on.ca/legal-clinics/*)

சமூக சட்ட உதவி நிலையங்களில் வழக்கறிஞர்கள், சமூக சட்ட பணியாளர்கள், சட்ட மாணவர்கள் பணியாற்றுகின்றனர். அவர்களின் சேவைகள் தனிப்பட்டவை என்பதுடன் இரகசியம் பேணப்படுபவை. உங்களுடைய வருமானமும் சொத்து மதிப்பும் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு கீழ் இருந்தால், இலவச சேவையை வழங்குகின்றார்கள் (சட்ட உதவி சான்றிதழ் தேவையில்லை). அந்த நிலையம் சேவையாற்றும் சமூகத்தின் ஒரு பகுதியாக நீங்கள் இருக்க வேண்டும். அங்குள்ள சட்டக் குழு உங்களுக்கு தகவல்கள், ஆலோசனை மற்றும் பிரதிநிதித்துவத்தை வழங்க முடியும். அவற்றில் பின்வருவன அடங்கும்:




ஒன்டாரியோவின் தெற்காசிய சட்ட உதவி நிலையம் (South Asian Legal Clinic of Ontario - SALCO) அல்லது சீன மற்றும் தென்கிழக்கு ஆசிய சட்ட உதவி நிலையம் ( Chinese and Southeast Asian Legal Clinic - CSALC) போன்ற சில நிலையங்கள் குறிப்பிட்ட சமூகங்களுக்கு சட்ட உதவி வழங்குவதில் நிபுணத்துவம் பெற்றவை. அவர்களின் மொழி அறிவு, கலாசார திறன், சமூகங்களின் அமைப்பு ரீதியான பிரச்சினைகள் பற்றிய அறிவு என்பன அவர்களின் சேவை வழங்களிலும் உங்கள் பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஏனைய நிலையங்கள் அகதிகள் சட்டஉதவி நிலையங்கள் போன்ற சட்டத்தின் குறிப்பிட்ட துறைகளில் நிபுணத்துவம் பெற்றவை.

அகதிகள் சட்ட உதவி நிலையங்கள் உங்களுக்கு பின்வரும் சேவைகளை வழங்க முடியும்:

- **அடிப்படை உரிமை கோரல் படிவத்திற்கு உதவுதல் (Basis of Claim Form)**
  உங்களின் உரிமை கோரல் படிவத்தை பூர்த்தி செய்வதற்காக ஒரு வழக்கறிஞர் தனது 7 மணி நேர சேவையை உங்களுக்கு வழங்குவதற்கான கட்டணத்திற்கு ஒரு சான்றிதழை LAO உங்களுக்கு வழங்கக்கூடும். உங்கள் அகதிகள் பாதுகாப்பு கோரிக்கையை அகதிகள் பாதுகாப்பு பிரிவுக்கு (RPD) முன்வைப்பதே படிவத்தின் நோக்கம். சான்றிதழ் சில செலவுகளையும் செலுத்தும், எடுத்துக்காட்டு: ஒரு மொழிபெயர்ப்பாளர் சேவை வழங்கும் நேரத்தின் குறிப்பிட்ட அளவு.
- **அகதிகள் பாதுகாப்பு விசாரணையில் உதவி**
  உங்களின் சட்ட உதவி சான்றிதழ் அகதி விசாரணையின் போது உங்களுக்காக பிரதிநிதித்துவம் செய்யும் வழங்கறிஞருக்கான கட்டணத்தை செலுத்தக்கூடும். பூர்த்தி செய்யப்பட்ட உங்களின் அடிப்படை உரிமை கோரல் படிவத்தை (Basis of Claim Form)அவர்கள் கண்டிருந்தால், உங்களின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படக்கூடும் என நம்பினால் மாத்திரமே விசாரணைக்கான சான்றிதழ் வழங்கப்படும்.
  - உங்கள் விசாரணையின் போது நீங்கள் ஒரு மொழிபெயர்ப்பாளரைக் வைத்திருக்கலாம். ஆனால், சில நேரங்களில் நீங்கள் ஒருவரை நியமிக்க வேண்டியிருக்கும். உங்கள் உள்ளூர் சமூக மையத்தின் மூலம் நீங்கள் ஒரு மொழிபெயர்ப்பாளரைத் தேடலாம் அல்லது நம்பகமான குடும்ப உறுப்பினர், நண்பரின் உதவியைப் பெறலாம்.
- **அகதிகள் மேன்முறையீட்டு பிரிவில் உதவி**
  உங்களின் மேன்முறையீடு வெற்றியளிக்கக்கூடும் என அவர்கள் நம்பினால், மேன்முறையீட்டைத் தாக்கல் செய்யும் பொருட்டு ஒரு வழக்கறிஞரின் உதவியைப் பெறுவதற்கு அவரது கட்டணத்தை செலுத்துவதற்கான சட்ட உதவி சான்றிதழ் ஒன்றை LAO உங்களுக்கு வழங்கக்கூடும்.
- **மனிதாபிமானம், இரக்கம் ஆகியவற்றின் அடிப்படையிலான விண்ணப்பங்கள் (Humanitarian and Compassionate - H&C), அவற்றை சமர்ப்பித்தல் போன்றவற்றுக்கு ஒரு**
  வழக்கறிஞரின் 16 மணித்தியால சேவை நேரத்தை உங்களுக்கு வழங்குவதற்கான கட்டணத்தை செலுத்துவதாய் உங்களின் சட்ட உதவி சான்றிதழ் இருக்கக்கூடும். விண்ணப்பிக்க தேவையான செயலாக்க கட்டணத்தை சான்றிதழ் உள்ளடக்காது. கனேடிய குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை நிறுவனத்துக்கு (IRCC) உங்கள் கோப்பினை சமர்ப்பிப்பதற்கான கட்டணங்களை உங்கள் சொந்த பணத்திலிருந்து செலுத்த வேண்டும்.

(ஒன்டாரியோவில் உள்ள துறைசார் சிறப்பு உதவி நிலையங்களின் பட்டியலுக்கு, நீங்கள் இந்த இணைப்பிற்கு செல்லலாம்: https://www.legalaid.on.ca/specialty-clinics/).

## சுயாதீன நிறுவனங்கள்

- **ஒன்டாரியோ இலவச சட்ட சேவை (Pro Bono Ontario):** ஒன்டாரியோவில் வசிக்கும், சட்ட சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களுக்கு இலவச சட்ட சேவைகளை வழங்கும் தன்னார்வலர்களுடன் இணைப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் ஒரு நிறுவனம் இது. அவர்களின் இலவச சட்ட ஆலோசனைக்கு அவர்களின் 1-855-255-7256 எனும் இலக்கத்திற்கு அழையுங்கள். அல்லது அவர்களின் probonoontario.org எனும் வலைத்தளத்திற்கு செல்லுங்கள்.
- **ஜஸ்டிஸ்நெட் (JusticeNet):** சட்ட உதவியை அணுக முடியாத அளவிற்கு வருமானம் உள்ளவர்கள், நிலையான/தரமான சட்ட உதவியைப் பெற முடியாதவர்களுக்கு சட்ட நிபுணத்துவத்தை வழங்கும் ஒரு இலாப நோக்கற்ற நிறுவனம் இது. என்றாலும் அவர்களின் சேவை இலவசமானதல்ல. கழிவு விலையில் வழங்குகின்றார்கள். அவர்களை (416) 479-0551 எனும் இலக்கத்தில் அல்லது 1-866-919-3219 எனும் இலவச அழைப்பு இலக்கத்தில் தொடர்புகொள்ள முடியும். அல்லது justicenet.ca எனும் அவர்களின் வலைத்தளத்திற்குள் பிரவேசியுங்கள்.

*சட்ட உதவி அல்லது ஆலோசனையை எங்கு பெறுவது என்பது பற்றிய கூடுதல் தகவலுக்கு, வளங்கள் பகுதியைப் பார்க்கவும்*



# குடும்ப சட்டம்

குடும்ப சட்டம் என்பது குடும்பத்தின் இயக்கங்கள் தொடர்பான எல்லாவற்றையும் கையாளும் சட்டமாகும். சாசனத்தின் படியான ஒரு அகதி, பாதுகாக்கப்பட்ட நபர் அல்லது அகதி அந்தஸ்து கோரியுள்ள பெண் என்ற வகையில், குடும்ப சட்டத்தின் கீழ் கனேடிய குடிமக்களுக்கு உள்ள அதே உரிமைகளும் பொறுப்புகளும் உங்களுக்கும் உண்டு. உங்கள் குடியேற்ற நிலை எதுவாயிருப்பினும் நீங்கள் குடும்ப நீதிமன்றத்திற்கு செல்ல முடியும்.


## குடும்ப சட்டத்தின் கீழ் உள்ள வெவ்வேறு பகுதிகள்:




## திருமணம்

### திருமண வயது

- ஒன்டாரியோவில் திருமணம் செய்து கொள்வதற்கான சட்டப்பூர்வமான வயது 18.
- நீங்கள் 16 அல்லது 17 வயதிலும் திருமணம் செய்துகொள்ள முடியும். ஆனால், அதற்கு பெற்றோர் / பாதுகாவலர்கள் இருவரிடமிருந்தும் எழுத்துமூலமான ஒப்புதல் தேவைப்படும்.



### திருமணம் செய்வதற்கு முன்னதாக தேவைப்படும் விண்ணப்பங்களும் ஆவணங்களும்

- கனடா, ஒன்டாரியோவில் திருமணம் செய்வதானால் நீங்கள் திருமண உரிமத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.
    - திருமண உரிமத்திற்கு விண்ணப்பிக்க உங்களுக்கு தேவைப்படுவன:
        - அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அடையாள ஆவணங்கள் இரண்டை வைத்திருக்க வேண்டும். அவற்றில் ஒன்றிலாவது உங்கள் புகைப்படம் இருக்க வேண்டும். அவை கனடாவினாலோ அல்லது நீங்கள் பிறந்த நாட்டினாலோ வழங்கப்பட்டதாய் இருக்க வேண்டும்.
        - Service Ontario இணையத்தளத்தில் Government→ Identification and certificates→ Getting Married பகுதியின் கீழ் உள்ள திருமண உரிம விண்ணப்பப் படிவத்தை நிரப்பிக்கொள்ளுங்கள்.
        - கட்டணத்தை செலுத்துங்கள்.
        - நீங்கள் முன்பே திருமணம் செய்தவராக இருந்தால், விவாகரத்து பெற்றதற்கான அத்தாட்சிப் பத்திரத்தை வைத்திருங்கள்.
- உரிமம் 90 நாட்களுக்கு செல்லுபடியாகும். அந்த 90 நாட்களுக்குள் உங்கள் திருமண நாள் முடிவு செய்யப்படாவிட்டால், அந்த உரிமம் காலாவதியாகும். அத்துடன், நீங்கள் திருமணம் செய்ய புதிய உரிமத்திற்கு விண்ணப்பிக்க வேண்டியிருக்கும்.

*திருமண உரிம விண்ணப்ப படிவம் ஆங்கிலத்திலும் பிரஞ்சு மொழியிலும் மட்டுமே கிடைக்கிறது.*

### கட்டாயத் திருமணம்

- கனடாவின் அனைத்து பகுதிகளிலும் ஒன்டாரியோவிலும் கட்டாயத் திருமணம் சட்டவிரோதமானது.
- சிவில் திருமண சட்டத்தில் (Civil Marriage Act) திருமணமாகும் நபர் அதற்கான சுதந்திரமான ஒப்புதலை வழங்க வேண்டும் என கட்டளையிடப்பட்டுள்ளது.

- நீங்கள் திருமணத்திற்கு கட்டாயப்படுத்தப்படுவதாக ஐயமுற்றால், உதவி பெற்றுக்கொள்ளக்கூடிய வழிகள்:
    - பாதிக்கப்பட்டவருக்கான 24 மணித்தியால உதவி எண் (Victim’s Support Line): 1-888-579-2888 அல்லது (416) 314-2447. இவர்களால் உங்களுக்கு உடனடி உதவியை வழங்கக்கூடியதாயிருக்கும்.
    - Network of Agencies Against Forced Marriages (NAAFM) -இல் அங்கத்துவம் பெற்ற ஏதேனுமொரு நிறுவனம். இவர்கள் உங்கள் பாதுகாப்பையும் திருமணத்தை சுதந்திரமாக தேர்ந்தெடுக்கும் உங்கள் உரிமையையும் காக்கும் திட்டங்களை உருவாக்க உங்களுக்கு உதவுவார்கள்.
    - மேலே உள்ள எந்தவொரு வழிமுறையினையும் உங்களால் பயன்படுத்த முடியாவிட்டால், உங்கள் பாதுகாப்பு ஆபத்தில் இருந்தால், நீங்கள் உதவிக்கு காவல்துறையைத் தொடர்புகொள்ள வேண்டும்.

### கனேடிய குடிமக்கள் அல்லாதவர்கள் கனடாவில் திருமணம் செய்தல்

- துணைவர்களில் ஒருவரோ அல்லது இருவருமோ கனடாவில் குடியுரிமையைப் பெற்றிருக்காவிட்டாலும் திருமணம் நடப்பது சாத்தியமானது. அத்துடன், கனேடிய சட்டத்தின் கீழ் அத்திருமணம் செல்லுபடியானதாகக் கருதப்படும்.

### கனடாவிற்கு வெளியில் செய்யப்பட்ட திருமணமும் கனடாவில் அது செல்லுபடியாதலும் அங்கீகரிக்கப்படுதலும்

- திருமணம் தொடர்பான கனேடிய சட்டங்களையும் திருமணம் நடைபெறும் நாட்டின் சட்டங்களையும் பின்பற்றும் வரை வெளிநாட்டுத் திருமணங்கள் கனடாவில் அங்கீகரிக்கப்படும்.
- நீங்கள் இரத்த சொந்தத்தில் அல்லது தத்தெடுப்பு உறவுமுறையிலான நெருங்கிய சொந்தத்தில் திருமணம் செய்தால் (எடுத்துக்காட்டு: பெற்றோரின் பெற்றோர்-பேரப்பிள்ளை, பெற்றோர்-பிள்ளை, சகோதரன்-சகோதரி) அல்லது ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டவரைத் திருமணம் செய்தால் உங்களுடைய திருமணம் கனடாவில் அங்கீகரிக்கப்பட மாட்டாது அல்லது செல்லுபடியற்றதாகும்.

புதிய நாடொன்றுக்கு செல்வது, கலாசாரத் தடைகளை எதிர்கொள்வது, வெளிநாடுகளின் நடைமுறைகளைப் புரிந்துகொள்வது என்பன குடும்பங்களுக்கு மன அழுத்தங்களை ஏற்படுத்தும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இது குடும்ப இயக்கங்கள், சட்டபூர்வமான திருமணங்கள் அல்லது பொதுவழக்கு உறவுகளைப் (common-law relationships) பாதிக்கும். நீங்களும் உங்கள் துணையும் விவாகரத்தை தவிர்க்க விரும்பினால், பிணக்குத் தீர்க்கும் முகவர் நிறுவனங்களின் ஆதரவைப் பெறுவதோடு, திருமண உளவள ஆலோசனையையும் பெறுவது சிறந்ததாக இருக்கும். உளவள ஆலோசனை சேவையை எங்கு பெறுவது, அது எந்த மொழியில் உள்ளது என்பதை அறிந்துகொள்ள "வளங்கள்" பிரிவை (resources section) பார்வையிடவும்.

## விவாகரத்து/மணமுறிவு

சில சூழ்நிலைகளில், விவாகரத்து பெறுவதுதான் சிறந்த பொருத்தமான தெரிவு என துணைவர்களுள் ஒருவரோ அல்லது இருவருமோ தீர்மானிக்கிறார்கள். சிலவேளை அவர்களின் குழந்தைகளும் அவ்வாறே தீர்மானிக்கிறார்கள். நீங்கள் கனடாவில் 12 மாதங்களுக்கும் அதிகமாக வசிப்பவராக இருந்தால், கனடாவில் திருமணம் செய்திருக்காவிட்டாலும், உங்கள் துணைவரை விவாகரத்து செய்யும் உரிமை உங்களுக்கு உள்ளது. சாசனத்தின் படியான அகதிகள், பாதுகாக்கப்பட்ட நபர்கள், அகதிகள் உரிமை கோருபவர்கள் அனைவருக்கும் இது பொருந்தும்.

கனடாவில் உங்கள் துணைவரை விவாகரத்து செய்வதற்கு:

- கனேடிய சட்டத்தின் கீழ், நீங்கள் சட்டப்பூர்வமாக திருமணம் முடித்தவராக இருக்க வேண்டும்.
    - நீங்கள் வேறெந்த நாட்டில் திருமணம் செய்திருந்தாலும், அந்நாட்டினாலும் கனடாவினாலும் திருமணம் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். உத்தியோகபூர்வ அரச ஆவணங்கள் இன்றி சமய சம்பிரதாயங்கள் மூலம் நடைபெறும் திருமணங்கள் கனடாவில் செல்லுபடியற்றதாகக் கருதப்படும்.
- நீங்களும் உங்கள் துணைவரும் 12 அல்லது அதற்கும் மேற்பட்ட மாதங்கள் கனடாவில் வசித்திருக்க வேண்டும்.

# குடும்ப சட்டம்


- நீங்களும் உங்கள் துணைவரும் 12 அல்லது அதற்கும் மேற்பட்ட மாதங்கள் பிரிந்து வாழ்ந்திருக்க வேண்டும்.
    - திருமணத்துக்குப் புறம்பான உறவு, உடல் அல்லது உளரீதியான கொடுமைகள் இடம்பெற்றிருந்தால் இந்த 12 மாத பிரிந்து வாழும் காலத்திற்கான விதிவிலக்குகள் அங்கு பொருந்தும்.
    - ஒன்டாரியோவில் நீங்கள் வசிப்பதும், உங்கள் துணைவரிடமிருந்து பிரிந்து வாழ்தலும் அதே 12 மாத கால எல்லைக்குள் நடைபெறலாம், அதற்கென தனியாக இன்னொரு 12 மாதங்கள் தேவையில்லை.
    - நீங்கள் பிரிந்துவிட்டீர்கள் என்று நீங்களோ அல்லது உங்கள் துணைவரோ தீர்மானிக்கும் தருணத்தில் தான் உங்கள் 12 மாத பிரிந்து வாழும் காலம் தொடங்குகிறது. பிரிந்து வாழ்வதை அறிவிக்க சட்டப்பூர்வ ஆவணங்கள் தேவையில்லை. எவ்வாறாயினும், குழந்தைக் காப்பு, சொத்து தொடர்பான முக்கியமான குடும்ப சட்டத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தால், நீங்கள் தீர்மானித்ததை பிரிந்து வாழும் ஒப்பந்தமாக ஆவணப்படுத்தியிருக்க வேண்டும். துணைவர்களால் குழந்தைக்களுக்கான காப்பு, உதவி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, அதனை நீதிபதி அங்கீகரித்திருக்காவிட்டால் நீதிமன்றம் விவாகரத்து வழங்காது. அவ்விதிமுறைகளோடு இணங்குவதில் சிக்கல் இருந்தால், நீங்கள் ஒரு நடுவரின் * உதவியை அல்லது சட்ட நிபுணரின் உதவியை நாடலாம்.

* "நடுவர்" என்பவர் ஒரு உடன்பாட்டை எட்டுவதற்கு பிணக்கில் உள்ள இரு தரப்பினருக்கும் உதவுவதை நோக்கமாகக் கொண்டவராக இருக்க வேண்டும். பாதுகாப்பு பிரச்சினைகள் ஏதும் இல்லாவிட்டால் (எடுத்துக்காட்டு: குடும்ப வன்முறை) நீதிமன்றத்தின் தலையீடு இல்லாமல், குடும்ப சட்ட தகவல் மையங்கள் ( Family Law Information Centres -FLIC), சட்ட உதவி நிலையங்கள் ஆகியவற்றின் நடுவர் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். FLIC, சட்ட உதவி நிலையங்கள் ஆகியவற்றின் தொடர்புகளுக்கு "வளங்கள்" பகுதியை பார்வையிடலாம்.

உங்கள் துணைவரை வேறொரு நாட்டில் விவாகரத்து செய்யலாம். ஆனால், கனடாவில் அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால்:

- விவாகரத்து அந்நாட்டு சட்டப்படி செல்லுபடியானதாக இருக்க வேண்டும்.
- நீங்களும் உங்கள் துணைவரும் விவாகரத்திற்கு விண்ணப்பிப்பதற்கு முன்னதாக அந்நாட்டில் 12 அல்லது அதற்கும் மேற்பட்ட மாதங்கள் வசித்திருக்க வேண்டும்.

### விவாகரத்தோ அல்லது துணைவரிடமிருந்து பிரிந்து வாழ்வதோ உங்கள் குடிவரவு நிலையை எவ்வாறு பாதிக்கும்?




* ஒரு சாசனத்தின் படியான அகதி அல்லது பாதுகாக்கப்பட்ட நபர் என்ற முறையில், துணைவருடனான உங்கள் உறவு முடிந்துவிட்டதென்ற காரணத்திற்காக உங்களை கனடாவிலிருந்து வெளியேற்றவோ நாடு கடத்தவோ முடியாது. நீங்கள் அகதி அந்தஸ்து கோரும் ஒருவராக இருந்தால், உங்கள் அகதி கோரிக்கை தொடர்பான விசாரணைக்கு முன்னர் உங்கள் உறவு முடிவடைந்தால், உங்கள் கோரிக்கையை நீங்கள் தனியாகப் பிரிக்க முடியும். அகதி அந்தஸ்து கோரலில் தோல்வியுற்றால், நீங்கள் மனிதாபிமானம் மற்றும் இரக்கத்தின் அடிப்படையில் நிரந்தர வதிவிடத்திற்கு விண்ணப்பிக்கலாம். மனிதாபிமானம் மற்றும் இரக்க நிலை (Humanitarian and Compassionate (H&C)) விண்ணப்பங்கள் தொடர்பான கூடுதல் தகவல்களுக்கு குடிவரவு பிரிவைப் பார்த்து, உடனடியாக சட்ட உதவியைப் பெறவும். *

## காப்புப் பொறுப்பு (CUSTODY)

கல்வி, மதம், சுகாதாரம், வளர்ப்பு போன்ற முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகாரத்தை 'காப்புப் பொறுப்பு' (Custody) வழங்கும். இதன் பொருள், குழந்தையின் உடைமைகள் அல்லது உரிமைகள் உங்களுடையது என்பதல்ல. அவர்கள் சார்பாக நீங்கள் முடிவுகளை எடுக்க மட்டுமே முடியும். காப்புப் பொறுப்பு உத்தரவில் நீதிமன்றம் எதனையும் வெளிப்படையாகக் கூறியிருக்காவிட்டால், மற்ற பெற்றோருக்கு குழந்தையைப் பார்க்கவும் தொடர்புகொள்ளவும் உரிமை உண்டு.

## வெவ்வேறு வகையான காப்புப் பொறுப்புகள் உள்ளன:



| தனித்த பொறுப்பு | பிளவுற்ற பொறுப்பு | கூட்டுப் பொறுப்பு | பகிரப்பட்ட பொறுப்பு |
|---|---|---|---|
| குழந்தையை பராமரிக்கும் சட்டப்பூர்வ உரிமையும் பொறுப்பும் பெற்றோரில் ஒருவருக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருக்கும். முடிவுகளை எடுக்கும் பொறுப்பு அவரிடம் இருக்கும். பெரும்பாலான நேரங்களில், தனித்த காப்புப் பொறுப்புக் கொண்ட பெற்றவருடன் குழந்தை வசிக்கும். | ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட குழந்தைகளின் காப்புப் பொறுப்பு பெற்றோர் இருவரிடமும் இருக்கும். 60 வீதத்திற்கும் அதிகமான சந்தர்ப்பங்களில், ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட குழந்தைகள் ஒவ்வொரு பெற்றோருடனும் வசிப்பர். | இரண்டு பெற்றோருக்கும் சமமான குழந்தை பராமரிப்பு பொறுப்புகள், தீர்மானங்களை மேற்கொள்ளும் பொறுப்புகள் இருக்கும். குழந்தை ஒவ்வொரு பெற்றோருடனும் சமமாக நேரத்தை செலவிடலாம் அல்லது பெரும்பாலும் ஒரு பெற்றோருடன் வாழலாம். | இரு பெற்றோரும் தங்கள் குழந்தை தொடர்பான சமமான பொறுப்புகளை பகிர்ந்துகொள்வார்கள். குழந்தை ஒவ்வொரு பெற்றோரிடமும் சமமான நேரத்தைச் செலவிடும். |

உங்கள் குடிவரவு நிலை குழந்தையின் காப்புப் பொறுப்பிற்கும் அணுகலுக்குமான உங்கள் உரிமைகளைப் பாதிக்காது. நீங்கள் ஒன்டாரியோவில் வசித்தால், நீதிமன்றங்கள் உங்கள் வழக்கை விசாரித்து அதன்படி ஒரு முடிவை எடுக்க முடியும். நீங்கள் சாசனத்தின் படியான அகதி, பாதுகாக்கப்பட்ட நபர் அல்லது அகதி உரிமை கோருபவராக இருந்தாலும் இது பொருந்தும்.

### குழந்தைகளுடன் பயணம் செய்வதும் நாட்டை விட்டு வெளியேறுதலும்

தனித்த காப்புப் பொறுப்பினை நீங்கள் பெற்றிருந்தால், மற்ற பெற்றாரின் எழுத்து மூலமான, சாட்சியப்படுத்தப்பட்ட ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும் அல்லது மற்ற பெற்றாரின் அனுமதியின்றி நீங்கள் குழந்தை அல்லது குழந்தைகளுடன் கனடாவிற்கு வெளியே பயணம் செய்யலாம் என்று குறிப்பாகக் கூறும் உத்தியோகபூர்வ நீதிமன்ற உத்தரவின் நகலை வைத்திருக்க வேண்டும்.

# குடும்ப சட்டம்

நீங்கள் கூட்டு அல்லது பகிரப்பட்ட காப்புப் பொறுப்பினைப் பெற்றிருந்தால், பயணிக்காத மற்ற பெற்றாரிடமிருந்து "பிரசித்த நொத்தாரிசு" (Notary Public) என்று அழைக்கப்படும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஓர் அதிகாரியால் கையெழுத்திடப்பட்ட, சாட்சியப்படுத்தப்பட்ட, சட்டப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட ஒப்புதல் நகலைப் பெற்றிருக்க வேண்டும்.

உங்கள் துணைவர், காப்புப் பொறுப்பினைப் பொருட்படுத்தாமல், அனுமதியின்றி உங்கள் குழந்தைகளுடன் பயணம் செய்யக்கூடும் என்று நீங்கள் பயப்படுகிறீர்கள் என்றால், உடனடியாக உதவியை நாடி பின்வரும் படிகளில் ஒன்றையோ அல்லது அனைத்தையுமோ பின்பற்ற வேண்டும்:

- ஒரு வழக்கறிஞரைத் தொடர்புகொண்டு, குழந்தையை குறிப்பிட்ட இடத்தில் இருந்து வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்ல முடியாதவாறு (Non-removal order) உத்தரவைப் பெற வழக்கினை தாக்கல் செய்ய முடியுமா எனப் பாருங்கள். Non-removal order என்பது அதனை பதிவு செய்த பெற்றாரின் நீதிமன்ற உத்தரவு அல்லது எழுத்து மூல அனுமதியின்றி, பெற்றோரில் ஒருவரோ அல்லது இருவருமோ குழந்தைகளுடன் ஒன்டாரியோவில் இருந்தோ அல்லது கனடாவில் இருந்தோ வெளியேற முடியாது என கூறும் நீதிமன்ற உத்தரவு ஆகும்.
- உங்கள் குழந்தை கனேடிய குடியுரிமையைப் பெற்றிருந்தால், 1-800-567-6868 எனும் இலவச அழைப்பு எண் மூலம் Passport Control நிலையத்தை தொடர்பு கொண்டு, கடவுச்சீட்டுக் கட்டுப்பாட்டு பட்டியலில் உங்கள் குழந்தையின் பெயரைப் பதியுமாறு கோர முடியும்
- உங்கள் குழந்தை வேறொரு நாட்டின் குடியுரிமையைப் பெற்றிருந்தால், தூதரகம் அல்லது இணைத் தூதரகத்தை (consulate) தொடர்புகொண்டு உங்கள் குழந்தைக்கு கடவுச்சீட்டினை விநியோகிக்க வேண்டாம் எனக் கோரமுடியும்.
- காவல்துறையினரை தொடர்புகொள்ளுங்கள்

உங்கள் பிரிவு அல்லது விவாகரத்தைத் தொடர்ந்து, நீங்கள் வாழ்க்கைத்துணைக்கான உதவித் தொகையையோ குழந்தைக்கான உதவித் தொகையையோ அல்லது இரண்டையுமோ பெறலாம். உங்களுக்கும் உங்கள் துணைவருக்கும் குழந்தை இருந்து, அந்தக் குழந்தையின் காப்புப் பொறுப்பும் உங்களிடம் இருக்குமானால், உங்கள் துணைவரிடமிருந்து குழந்தையின் பராமரிப்பிற்கான கொடுப்பனவைப் பெறும் உரிமை உங்கள் குழந்தைக்கு உள்ளது. குழந்தையின் வாழ்க்கைச் செலவுகள் மற்றும் தங்குமிட வசதிகளுக்காக செலவுசெய்ய இந்த நிதி உதவி உங்களுக்கு வழங்கப்படும். உங்கள் குழந்தையின் காப்புப் பொறுப்பு உங்கள் துணைவரிடம் இருந்தால், குழந்தையின் பராமரிப்பு செலவைக் கவனிக்கும் பொறுப்பு உங்களுக்கும் உள்ளது.

**வாழ்க்கைத்துணைக்கான உதவித்தொகை (Spousal Support)**
பிரிவிற்கு பின்னர் அல்லது விவாகரத்திற்கு பின்னர் ஒரு துணை மற்றவருக்கு செலுத்தும் பணமே வாழ்க்கைத்துணைக்கான உதவித் தொகை ஆகும். பாலின பாகுபாடு இன்றி, குறைந்த வருமானம் பெறும் துணைவருக்கு அதிக வருமானம் பெறும் துணைவரால் இத்தொகை செலுத்தப்படும். இது வழக்கமாக தவணை முறையில் (மாதாந்தம்) செலுத்தப்படுகிறது. ஆனால், ஆரம்பத்திலேயே ஒரே தடவையில் முழுக் கட்டணமாகவும் இதனைச் செலுத்த முடியும்.

தொகையை நீங்களும் உங்கள் துணைவரும் தீர்மானிக்கலாம். அது தொடர்பில் இணக்கம் ஒன்றுக்கு உங்களால் வர முடியாவிட்டால், உதவித்தொகை தேவையா, அதனை யார் செலுத்துவது, எவ்வளவு உதவித் தொகையை செலுத்துவது, எவ்வளவு காலத்திற்கு செலுத்துவது என்பது தொடர்பில் குடும்ப நீதிமன்ற நீதிபதி தீர்மானிப்பார். உங்களுக்கு குழந்தைகள் இருந்தால், குழந்தைப் பராமரிப்பு உதவித்தொகைக்கு மேலதிகமாக இந்த வாழ்க்கைத்துணைக்கான பராமரிப்பு உதவித்தொகை இருக்கும்.



## குழந்தை பராமரிப்பு உதவித்தொகை (Child Support)

குழந்தை பராமரிப்பு உதவித் தொகையானது குழந்தையின் பராமரிப்பு செலவுகளுக்காக, குழந்தையின் காப்புப் பொறுப்பினைப் பெற்றுள்ள பெற்றாரில் ஒருவருக்கு மற்றவரால் வழங்கப்படும் பணம். குழந்தையின் காப்புப் பொறுப்பினை பெற்றோர் இருவரும் பகிர்ந்து கொண்டாலும், குழந்தை எவரோடு வசிக்கிறதோ. அவருக்கு மற்றவரால் இந்த உதவித்தொகை வழங்கப்படும். துணைவர்கள் இருவரும் இது தொடர்பில் இணக்கம் ஒன்றுக்கு வராவிட்டால், துணைவருக்கு வழங்கப்படும் உதவித்தொகையைப் போல, குழந்தைக்கு எவ்வளவு வழங்க வேண்டும் என்பதை நீதிபதியே தீர்மானிப்பார்.

கனேடிய சட்டத்தின்படி, இரு பெற்றோர்களும் தங்களைச் சார்ந்த குழந்தைகளுக்கு நிதி உதவி வழங்க பொறுப்புடையவர்கள் ஆவர்.

குழந்தை பராமரிப்பு உதவித்தொகையில் உள்ளடக்குபவை 1) குழந்தையின் வாழ்க்கைச் செலவுகள்: இதில் உணவு, டயப்பர்கள், ஆடை, தனிப்பட்ட பராமரிப்பு பொருட்கள், பாடசாலை பொருட்கள், முறைசாரா கல்வி நடவடிக்கைகள் ஆகியன அடங்கும்; 2) குழந்தை தங்க வீட்டு வசதி வழங்கும் பெற்றாருக்கான செலவுகள்: தினப்பராமரிப்பு, பல்மருத்துவம் போன்ற கூடுதல் செலவுகள் பெற்றோரின் வருமானத்தைப் பொறுத்து இருவராலும் பகிரப்படும். அதிக வருமானத்தை பெறுபவர் அதிக பங்குத் தொகையை செலுத்துவார்.

குழந்தையின் காப்புப் பொறுப்பினைப் பெற்றிராத பெற்றோருக்கு தொழில் இல்லாவிட்டாலும் கூட, குழந்தை பராமரிப்பு உதவித்தொகையை செலுத்தும் பொறுப்பு உண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில், குழந்தையின் காப்புப் பொறுப்பைப் பெற்றிராதவர், பராமரிப்புத் தொகையை செலுத்தும் இயலுமை ஏற்படும் வரை, அதனை இயன்றளவு தொகையாக செலுத்துவதற்கோ அல்லது தாமதமாகச் செலுத்துவதற்கோ சட்ட உதவியை நாட வேண்டும். * நினைவில் கொள்ளுங்கள்: குழந்தை பராமரிப்பு உதவித்தொகை தொடர்பில் ஏற்கனவே நீதிமன்ற உத்தரவு இருக்குமானால், கொடுப்பனவுகளை தாமதப்படுத்தும் போது அதற்கான வட்டி வசூலிக்கப்படும் என்று பொருள்படும் *.

குழந்தை பராமரிப்பு உதவித்தொகை முடிவடையும் காலப்பகுதி:

- பிள்ளை திருமணம் செய்துகொண்டால்
- பிள்ளைக்கு 16 வயது முடிவடைந்து, தானாகவே வீட்டை விட்டு வெளியேறினால் (இனி பெற்றோரின் கட்டுப்பாட்டில் இல்லை எனும் நிலையில்)
- பிள்ளை 18 வயதைக் கடந்த பின்னர்
  - குழந்தைக்கு விசேட தேவை அல்லது சுகயீனம் இருந்தாலோ, முழுநேர பாடசாலைக்கு சென்றாலோ விதிவிலக்குகள் பொருந்தும்

* குழந்தை பராமரிப்புத் தொகையைப் பெறுவது, Ontario Works போன்ற அரசாங்கத்தின் உதவித் திட்ட நிதியை நீங்கள் பெறுவதில் பாதிப்பை ஏற்படுத்தாது. எவ்வாறாயினும், நீங்கள் குழந்தை பராமரிப்புத் தொகையை பெறுவது குறித்து அரச நிதியுதவித் திட்டத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.*

**உங்கள் துணைவர் அந்தக் கொடுப்பனவுகளைச் செய்யமாட்டார் என்று கவலைப்படுகிறீர்களா? கவலை வேண்டாம்.**

உங்கள் துணைவர் குழந்தை பராமரிப்புத் தொகையையோ அல்லது வாழ்க்கைத்துணை உதவித் தொகையையோ அல்லது இரண்டையுமோ வழங்குவாரா மாட்டாரா என நீங்கள் கவலையடையத் தேவையில்லை. Family Responsibility Office (FRO) மூலம் குழந்தைப் பராமரிப்பு, வாழ்க்கைத் துணைக்கான உதவிக் கொடுப்பனவுகள் நடைமுறையாக்கப்படுகின்றன. நீதிமன்றத்தின் தலையீடு இன்றி உதவி கொடுப்பனவுகளுக்கு நீங்கள் இணங்கியிருந்தால், அந்த உடன்படிக்கைக்கு உங்கள் துணைவர் இணங்குவதை உறுதிப்படுத்த FRO-வில் எழுத்து மூல ஒப்பந்தத்தின் பிரதியை தாக்கல் செய்ய முடியும்.

***நினைவில் கொள்ளுங்கள்: உங்கள் துணைவர் குழந்தையின் காப்புப் பொறுப்பினை பகுதியளவில் பெற்றிருந்தாலோ, குழந்தையை அணுகும் உரிமையைப் பெற்றிருந்தாலோ, அவர் உதவித்தொகை செலுத்தாவிட்டாலும் அல்லது சரியான நேரத்தில் செலுத்தாவிட்டாலும் கூட குழந்தையை அவர் அணுகுவதை மறுக்கும் உரிமை உங்களுக்கு இல்லை.***

# குடும்ப சட்டம்

## குடும்ப வன்முறை மற்றும் துஷ்பிரயோகம்

குடும்ப வன்முறை என்பது குடும்பத்தின் உறுப்பினர் ஒருவர் தனது துணைவர் அல்லது குழந்தை போன்ற மற்றொரு குடும்ப உறுப்பினரைக் கட்டுப்படுத்தவும் கீழ்படிவிக்கவும் வன்முறை அல்லது துஷ்பிரயோகத்தைப் பயன்படுத்தும் சூழ்நிலைகளை உள்ளடக்கியது.

குடும்ப வன்முறை கனடாவில் சட்டவிரோதமானதும் குற்றமாகக் கருதப்படுவதுமாகும். மதம், இனம், கலாசாரம், நிதி நிலை, அல்லது கல்வி நிலை எதுவாக இருந்தாலும் எந்த வீட்டிலும் குடும்ப வன்முறை நிகழக்கூடும். மன அழுத்தம், சுற்றுச்சூழலின் மாற்றம், குடும்ப இயக்கங்களின் சீர்குலைவு, வேலை இழப்பு, சமூக பாலின வகிபாகங்களில் ஏற்படும் மாற்றங்கள், வீட்டு வேலைகளில் ஆணின் பங்களிப்பு (male contributions to the household) ஆகியவை குடும்ப துஷ்பிரயோகங்களுக்கு பின்னால் இருக்கும் காரணிகளாக அமையலாம். ஓர் அகதிப் பெண்ணாக, உங்களின் குடியேற்ற நிலையைப் பொருட்படுத்தாமல், குடும்ப வன்முறை/ துஷ்பிரயோகம் தொடர்பான எந்தவொரு வழக்கையும் முறையிடும் உரிமை உங்களுக்கு உள்ளது. குடும்ப வன்முறை மற்றும் துஷ்பிரயோக வழக்குகள் குடும்ப சட்டத்தின் கீழும், சில சந்தர்ப்பங்களில் குற்றவியல் சட்டத்தின் கீழும் கையாளப்படுகின்றன.

## குடும்ப துஷ்பிரயோகங்களின் வகைகள்:



| உடல் ரீதியாக | பாலியல் ரீதியாக | மன ரீதியாக | நிதி நிலை ரீதியாக |
|---|---|---|---|
| உதைத்தல், அடித்தல், மூச்சுத் திணறச் செய்தல் அல்லது குத்துதல் | உடலுறவிற்குக் கட்டாயப்படுத்தல் (எடுத்துக்காட்டு: பாலியல் தாக்குதல் / வன்புணர்வு) | உணர்ச்சிபூர்வமான கையாளுகை, குடும்பத்தினரிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் பெண்களைப் பிரித்தல் / தனிமைப்படுத்துதல் அல்லது வாய்ச்சொல் மூலமான அச்சுறுத்தல்கள் | தேவைகளுக்காக பெண்கள் பணம் பெறுவதை மறுப்பது அல்லது பெண்களுக்கு வேலை கிடைப்பதைத் தடுப்பது |

**குடும்ப வன்முறைக்கும் துஷ்பிரயோகத்திற்கும் உள்ளாகின்றீர்களா? வன்முறைகளில் இருந்து நீங்க தப்புவதற்கு உதவும் பல தெரிவுகளும் உதவிகளும் உள்ளன!**

- தாக்கப்பட்ட பெண்களுக்கான உதவி எண்ணை (Assaulted Women's Helpline) அழைக்கவும்: டொரன்டோவில் 1-866-863-0511 அல்லது (416) 863-0511 எனும் இலவச அழைப்பு எண்களைத் தொடர்புகொண்டு உதவி பெறலாம்.150-இற்கும் மேற்பட்ட மொழிகளில் அவர்கள் தங்களின் சேவையை வழங்குகின்றார்கள்.
- பாதிக்கப்பட்டவருக்கான ஆதரவு எண்ணிற்கு (Victim's Support Line) அழைக்கவும்: டொரன்டோவில் இருந்து அழைப்பு மேற்கொள்கின்றீர்கள் எனில், 1-888-579-2888 அல்லது (416) 314-2447 எனும் எண்ணை தொடர்புகொள்ளுங்கள்.
- நீங்கள் வீட்டை விட்டு வெளியேற விரும்பினால், தங்குவதற்கான புகலிடத்தைப் பெற https://endingviolencecanada.org/getting-help/ எனும் இணைய முகவரி மூலம் Shelter Safe-இன் உதவியைப் பெறலாம்.

- நீங்கள் வீட்டை விட்டு வெளியேற விரும்பினால், தங்குவதற்கான புகலிடத்தைப் பெற https://www.sheltersafe.ca/ எனும் இணைய முகவரி மூலம் Shelter Safe-இன் உதவியைப் பெறலாம்.
- சட்ட ஆலோசனையை நாடுங்கள்.
  - சட்ட உதவி சான்றிதழ் இன்றி, நீங்கள் 2 மணிநேர இலவச சட்ட ஆலோசனையைப் பெற முடியும். ஒரு புகலிடம் (shelter), சமூக நிறுவனம் அல்லது சட்ட உதவி நிலையத்திடம் இதுபற்றிக் கேளுங்கள்.
  - நீங்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகுபவராகவும் டொரன்டோ, ஒட்டாவா அல்லது தன்டர் பே-யில் வசிப்பவராகவும் இருந்தால் நீங்கள் ஒரு வழக்கறிஞரின் 4 மணித்தியால இலவச ஆலோசனையைப் பெற முடியும்.
  - உங்களிடம் இருந்தும் உங்கள் குழந்தையிடம் இருந்தும் உங்கள் துணைவர் / பங்காளரை விலக்கி வைக்க நடவடிக்கை எடுங்கள்.
    - ஒரு தடை உத்தரவு (Restraining order) அல்லது அவசர பாதுகாப்பு உத்தரவை (Emergency Protection Order) பெறுவதற்காக மனுவை தாக்கல் செய்ய ஒரு வழக்கறிஞரின் உதவியைப் பெறலாம். தடையுத்தரவு என்பது உங்கள் துணைவர் உங்களையோ அல்லது உங்கள் குழந்தையையோ அணுகுவதைத் தடுக்கும் தற்காலிக நீதிமன்ற உத்தரவாகும். அவர்கள் அதனை மதிக்காவிட்டால் கைது செய்யப்படலாம். நீங்கள் அதை எல்லா நேரங்களிலும் எடுத்துச் செல்ல/வைத்திருக்க வேண்டும். Emergency Protection Order என்பது நிலைமை தீவிரமாகவும் அவசரமாகவும் இருந்து, 30 நாட்களுக்கு நீடிக்கும் போது, வீட்டு வன்முறையால் பாதிக்கப்பட்டவரை பாதுகாக்கும் தற்காலிக நீதிமன்ற உத்தரவு ஆகும்.
- மருத்துவ சேவைகள் அல்லது 911-ஐ அழையுங்கள்.
  - காவல்துறையினர் உங்கள் துணைவரை கைது செய்தால், நீங்கள் குற்றச்சாட்டுக்களைக் கைவிட முடியாது. எவ்வாறாயினும், சில சந்தர்ப்பங்களில், எழுத்து மூலம் குற்றச்சாட்டுகளை மீளப்பெறுவதாக காவல்துறைக்கு கடிதம் வழங்கினால், உங்கள் துணைவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை வழக்கறிஞர் கைவிடலாம்.
  - உங்கள் குடியேற்ற நிலை பாதிக்கப்படக்கூடும்.
    - சாசனத்தின் படியான அகதி அல்லது பாதுகாக்கப்பட்ட நபர்: பாதிப்பில்லை
    - அகதி அந்தஸ்து கோருபவர்: பாதிக்கப்படலாம். உடனடியாக சட்ட ஆலோசனையைப் பெறுங்கள். உங்களை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கும் உங்களின் துணைவரிடம் இருந்து உங்களின் கோரிக்கையை/கோப்பினை பிரித்து, மனிதாபிமான மற்றும் இரக்கத்தின் அடிப்படையில் கனடாவில் தங்கியிருக்க விண்ணப்பிக்கலாம்.

**உங்கள் துணையுடன் தங்கியிருந்து பிரச்சினைகளைக் கையாள்வதை கருத்திற்கொள்கின்றீர்களா? உங்களுக்கான தெரிவுகளும் உதவிகளும் உள்ளன!**

- உங்கள் துணைவருக்கு புனர்வாழ்வளிப்பது குறித்து நீங்கள் கவனத்தில் கொள்வீர்களானால், ஒன்டாரியோவில் தாக்குதலில் தலையிட்டு பாதுகாப்பதற்கான திட்டங்கள் (Assault Intervention and Prevention Programs) உள்ளன.
  - Partner Assault Response (PAR) திட்டங்களை வழங்குகின்றார்களா என உங்கள் சமூக மையத்திடம் கேளுங்கள் அல்லது அந்த திட்டங்களை வழங்கும் நிறுவனங்களை அறிய "வளங்கள்" பகுதிக்குச் செல்லவும்.
- உளவள ஆலோசனை அல்லது தம்பதியருக்கான சிகிச்சைகளை நீங்கள் நாட முடியும்.
  - "வளங்கள்" பகுதியில் ஆலோசனை சேவைகளை வழங்கும் அமைப்புகளின் பட்டியல் உள்ளது (குறிப்பாக வன்முறையை அனுபவிக்கும் பெண்களுக்கு).



# சிறுவர் உரிமைகளும் உதவிகளும்

## கூட்டாட்சி சட்டமும் சிறுவர் பாதுகாப்பும்

கனேடிய சட்டத்தின்படி, ஒரு குழந்தையின் பாதுகாப்பு சில முக்கிய கொள்கைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. அவற்றுள் முதன்மையான இரு கொள்கைகள் வருமாறு:

1. சட்டம் குழந்தைகளின் நலன்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும், குழந்தைகளின் பாதுகாப்பிற்கே எப்போதும் முதன்மையளிக்கவேண்டும்.
2. குடும்பம் என்பது சமூகத்தின் அடிப்படை அலகாக உள்ளதுடன், பொதுவாக குழந்தை வாழ்வதற்கு சிறந்த இடமாகவும் விளங்குகிறது.

அவ்விரண்டு கொள்கைகளும் முரண்படும் சூழ்நிலைகளில், அவர்களின் நன்மை, பாதுகாப்பு என்பவற்றுக்கு முதலிடம் வழங்கப்படுகிறது.

புறக்கணிப்பு, உடல் ரீதியான துஷ்பிரயோகங்கள் போன்றவற்றால் ஏற்படும் தற்போதைய அல்லது எதிர்கால தீங்குகளிலிருந்து குழந்தைகளின் பாதுகாப்பை கூட்டாட்சி சட்டங்கள் நிர்வகிக்கின்றன. குழந்தை புறக்கணிக்கப்பட்டதாக அல்லது துஷ்பிரயோகத்திற்கு உள்ளானதாக அறியக் கிடைத்தால், பெற்றோர்கள்/பாதுகாவலர்கள் குற்றவியல் குற்றச்சாட்டுகளுக்கு முகங்கொடுக்க நேரும். பெற்றோர்கள்/பாதுகாவலர்கள் குழந்தையின் காப்புப் பொறுப்பினை (custody) இழக்கவும் கூடும்.

**சிறுவரை புறக்கணிப்பது** என்பது அவர்களின் அடிப்படைத் தேவைகளை வழங்கத் தவறியதாகும். புறக்கணிப்பு என்பது மூன்று வெவ்வேறு வடிவங்களைக் கொண்டிருக்கலாம்: உடல், உணர்வு அல்லது கல்வி ரீதியானது



**உடல் ரீதியான புறக்கணிப்பு**: பெற்றோர் / பாதுகாவலர் ஒரு குழந்தை தனக்கு தேவையான சுகாதார பராமரிப்பைப் பெறுவதை மறுப்பது அல்லது தாமதிப்பது, குழந்தையைக் கைவிடுவது, வீட்டை விட்டு வெளியேறும்படி கட்டாயப்படுத்துவது, வீட்டை விட்டு ஓடிய குழந்தையை மீண்டும் அழைத்துக்கொள்ள மறுப்பது அல்லது குழந்தையை சரியாகக் கவனிக்காமல்/மேற்பார்வை செய்யாமல் இருப்பது. ஒரு குழந்தையை வீட்டில் தனியாக விட்டுச்செல்ல உகந்த வயது குறைந்தபட்சம் 10.



**உணர்வு ரீதியான புறக்கணிப்பு:** பெற்றோர் / பாதுகாவலர் குழந்தைக்கு தேவையான பாசத்தை வழங்காதிருப்பது, உளவியல் ரீதியாகக் கவனிக்காதிருப்பது, குழந்தைக்கு முன்பாக துணை அல்லது பங்காளரை துன்புறுத்துவதும் துஷ்பிரயோகம் செய்வதும், போதைப்பொருள் அல்லது மதுபானம் பயன்படுத்துவதை அனுமதிப்பது.



**கல்வி ரீதியான புறக்கணிப்பு:** குழந்தை ஒழுங்காக பாடசாலை செல்வதைத் தவிர்க்க பெற்றோர் / பாதுகாவலர் அனுமதிப்பது, குழந்தையை பாடசாலையில் சேர்க்காமல் இருப்பது அல்லது சிறப்புக் கல்விக்கான குழந்தையின் தேவையை புறக்கணிப்பது.

**உடல் ரீதியான ஒழுக்காற்று நடவடிக்கைஎன்பது** குழந்தையின் நடத்தையைக் கட்டுப்படுத்த உடல் ரீதியான முறைகளைக் கையாள்வது. குத்துவது, அடிப்பது, மூச்சுத்திணறச் செய்வது, விளாசுவது, அறைவது போன்றவை இதில் அடங்கும்.

ஒரு குழந்தையின் நடத்தையை ஒழுங்குபடுத்துவதற்கு நியாயமான அழுத்தத்தை பயன்படுத்துவதனை சட்டம் அனுமதிக்கிறது. இரண்டு வயதிற்கு உட்பட்ட, அல்லது 13 வயது இற்கு மேற்பட்ட சிறுவர்கள் மீது உடல் ரீதியான ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது இதில் அடங்காது. மேலும், உடல் ரீதியான ஒழுக்காற்று நடவடிக்கை என்பது பொருட்களைக் கொண்டு தாக்குவதாகவோ தூக்கி வீசுவது அல்லது காயப்படுத்துவதாகவோ இருக்கக்கூடாது.

ஒரு குழந்தை புறக்கணிக்கப்பட்டால் அல்லது உடல் ரீதியாக / பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டால், அல்லது பாதுகாப்பு தேவைப்பட்டால், குழந்தைகள் உதவி சங்கம் (Children's Aid Society- CAS) அதில் தலையிடும்.

## குழந்தைகள் உதவி சங்கம் (CHILDREN'S AID SOCIETY- CAS)

CAS என்பது ஒன்டாரியோவில் உள்ள குழந்தை பாதுகாப்பு சேவைகளை வழங்கும் சுயாதீன அமைப்புகளின் ஒரு குழுவாகும். உங்கள் பிள்ளைகளை நீங்கள் நன்றாக நடத்துவதில்லை என அவர்கள் நம்புவதற்கு ஏதேனும் காரணம் இருந்தால், அவர்கள் உங்கள் குடும்பத்தை பரிசோதிக்கக்கூடும். குழந்தை குடும்ப வன்முறைக்கு உள்ளாகியிருந்தால், உங்களாலோ உங்களின் துணைவர்/பங்காளராலோ நேரடியாக துன்புறுத்தப்பட்டிருந்தால், அல்லது அவர்களதோ ஏனையோரதோ துன்புறுத்தல்களிலிருந்து அப்புறப்படுத்தப்படாமல் இருந்தால் உங்கள் குடும்பம் பரிசோதிக்கப்படலாம்.

பொதுவாக புறக்கணிப்போ துஷ்பிரயோகமோ இடம் பெறுவதைக் கண்ட / இடம்பெற்றதாய் நம்பும் ஒருவர் அல்லது பாதிக்கப்பட்ட குழந்தை / குழந்தைகளால் CAS அழைக்கப்படுகிறது. நீதிமன்ற உத்தரவு இல்லாமல் உங்கள் வீட்டிலிருந்து குழந்தையை வெளியேற்ற அவர்களுக்கு அதிகாரம் உள்ளது. குழந்தை ஆபத்தில் இருப்பதாக நம்பினாலோ அவர்களை நீங்கள் உட்பிரவேசிக்க விடாமல் தடுத்தாலோ வலுக்கட்டாயமாக (சில வேளைகளில் காவல்துறையினருடன்) உங்கள் வீட்டினுள் நுழையும் அதிகாரம் அவர்களுக்கு உள்ளது.

### CAS சமூக சேவையாளர்களைக் கையாளும் போது உங்களுக்குள்ள உரிமைகள்

- உங்களுடன் இன்னொருவர் இருக்க முடியும் (உ.ம். குடும்ப அங்கத்தவர், நண்பர், அல்லது சட்டத்தரணி)
- பதில்களை எழுத்து மூலம் வழங்கக் கோர முடியும்
- மொழிபெயர்ப்பாளர் ஒருவரைக் கோர முடியும்
- சமூக சேவையாளரின் தொடர்பாடல் தகவல்களை அறிந்துகொள்ள முடியும் (உ.ம். பெயர், தொலைபேசி இலக்கம், முகவரி)
- சமூக சேவையாளரின் மேற்பார்வையாளரின் பெயரைத் தெரிந்துகொள்ள முடியும்
- அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கக்கூடும் என உங்களுக்கு சொல்லப்பட வேண்டும்
- உங்கள் தரப்பு நிலைமையைக் கூற முடியும்
- கிடைக்கும் சேவைகள் பற்றிய தகவல்களைப் பெற முடியும்
- உங்கள் குடும்பத்தைப் பற்றி பேசக்கூடிய நபர்களின் பெயர்களை சமூக சேவையாளருக்கு வழங்க முடியும்
- சமூக சேவையாளரின் அறிக்கையின் பிரதியைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- சட்ட ஆலோசனையைப் பெற முடியும்
- கூட்டத்திற்குப் பிறகு சமூக சேவையாளரை அணுக அல்லது கூடுதல் தகவல்களைப் பெற முடியும்



# சிறுவர் உரிமைகளும் உதவிகளும்

**CAS தொடர்பு கொள்ளும்போது எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்**

1. அமைதியாக இருங்கள்.
2. அவர்கள் கோரினால் உங்கள் வீட்டினுள் நுழைய அனுமதியுங்கள். அனுமதிக்க மறுத்தால் நிலைமை மோசமாகும்.
3. உங்களால் புரிந்துகொள்ளவோ ஆங்கிலம் பேசவோ முடியாவிட்டால் ஒரு மொழிபெயர்ப்பாளரைக் கோரலாம்.
4. உங்களுக்கு ஆலோசனைகள், வழிகாட்டல்கள் தேவைப்பட்டால் குழந்தை பாதுகாப்பு வழக்குகளில் அனுபவமுள்ள வழக்கறிஞரிடம் கதைக்கலாம்.
5. சட்ட ஆலோசனையைப் பெறுவதற்கு முன்னர் எந்த ஆவணத்திலும் கையெழுத்திட வேண்டாம்.
6. ஏனைய உதவிகள்: ஒன்டாரியோ 211-ஐ அழையுங்கள். இது பல மொழிகளில் தகவல் மற்றும் பரிந்துரை சேவைகளை வழங்கக்கூடிய ஒரு தொலைபேசி இலக்கமாகும் (24/7 திறந்திருக்கும்). சட்ட உதவியை நாட அல்லது மொழிபெயர்ப்பு உதவிகளை வழங்கக்கூடிய சமூக நிறுவனங்கள்/ முகவரகங்களுடன் உங்களுக்கு தொடர்பை ஏற்படுத்திக்கொடுக்க அவர்களால் முடியும்.

# சிறுவர் நலன்கள்

| நன்மைகள் | கனடா குழந்தை நலன் (CANADA CHILD BENEFIT-CCB) | ஊனமுற்ற குழந்தை நலன் (CHILD DISABILITY BENEFIT-CDB) | ஒன்டாரியோ குழந்தை நலன் (ONTARIO CHILD BENEFIT-OCB) | இடைக்கால குழந்தை நலன் (TRANSITIONAL CHILD BENEFIT-TCB) |
|---|---|---|---|---|
| நிகழ்ச்சித் திட்டங்களின் வகைகள் | கூட்டாட்சி | கூட்டாட்சி | மாகாணம் | மாகாணம் |
| விவரணம் | 18 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை வளர்ப்பதற்கான செலவுகளுக்கு உதவி தேவைப்படும் தகுதியான குடும்பங்களுக்கு மத்திய அரசு வழங்கும் வரியற்ற மாதாந்தக் கட்டணம். | கடுமையான மற்றும் நீண்டகால மன அல்லது உடல் குறைபாடுகள் உள்ள குழந்தைகளைப் பராமரிக்கும் குடும்பங்களுக்கு கூடுதல் பணம் வழங்கப்படுகிறது. | குறைந்த-மிதமான வருமானம் கொண்ட குடும்பங்களின் குழந்தைகளுக்காக வரி இல்லாத தொகை வழங்கப்படுகிறது . | Ontario Works (OW) அல்லது ஒன்டாரியோ இயலாதோர் ஆதரவு திட்டம் (Ontario Disability Support Program- ODSP) ஆகியவற்றிலிருந்து ஏற்கனவே பணம் பெறும் நபர்களுக்கும், அல்லது எந்தவொரு அல்லது முழு CCB கட்டணத்தையும் பெறாதவர்களுக்கும் கட்டாய நன்மைகள். |

| | | | | |
|---|---|---|---|---|
| தகுதி | ✓ நீங்கள் 18 வயதிற்கு உட்பட்ட குறைந்தது ஒரு பிள்ளையுடன் வாழ்கிறீர்கள்.<br>✓ உங்கள் துணை வீட்டில் வசித்தாலும், குழந்தையின் முதன்மை பராமரிப்பாளர் நீங்கள் தான்.<br>✓ நீங்கள் வரி நோக்கங்களுக்காக கனடாவில் வசிப்பவராகக் காணப்படுகிறீர்கள் (நீங்கள் ஒவ்வொரு ஆண்டும் வரி தாக்கல் செய்கிறீர்கள்). | ✓ நீங்கள் CCB க்கு தகுதி பெறவும். பெற்றுக்கொள்ளவு ம் வேண்டும்.<br>✓ உங்கள் பிள்ளை ஊனமுற்றோருக்கான வரிக் கடன் பெற தகுதியுடையவ ராக இருக்க வேண்டும்.<br>• பின்வருவன வற்றில் ஒன்று உங்கள் பிள்ளைக்கு பொருந்தும்: பார்வையின்மை, அன்றாட வாழ்வில் ஏதேனும் ஒன்றில் குறிப்பிடத்தக்க கட்டுப்பாடு, மற்றும்/ அல்லது 12 அல்லது அதற்கும் அதிகமான மாதங்களுக்கு உயிர் வாழ்வதற்கான சிகிச்சையைப் பெற வேண்டியிருத்த ல், குறைந்தது 90 வீதமான நேரங்களில் குறைபாட்டுடன் இருத்தல். | ✓உங்களுக்கு18-இற்கும் குறைவான வயதுடைய பிள்ளை உள்ளது.<br>✓ நீங்கள் ஒன்ராறியோவில் வசிக்கிறீர்கள்.<br>✓ நீங்கள் உங்கள் வருமான வரி அறிக்கையை தாக்கல் செய்துள்ளீர்கள், அதேபோல் உங்கள் துணை அல்லது பொது சட்ட பங்குதாரரும் செய்துள்ளார்.<br>✓உங்கள் பிள்ளை CCB க்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. | ✓OW-இடமிருந்து நிதி உதவியை அல்லது ODSP-இடமிருந்து வருமான ஆதரவைப் பெறுகிறீர்கள்.<br>✓ குறைந்தது 18 வயதான பிள்ளை ஒன்று உங்களுடன் வசிக்கிறது.<br>✓CCB-க்கு விண்ணப்பித்திருக்க வேண்டும் அல்லது விண்ணப்பிக்க வேண்டும்.<br>✓ CCB-ஐப் பெறாமல் இருக்க வேண்டும் அல்லது குறைந்தபட்சம் முழுத் தொகையையும் பெறாமல் இருக்க வேண்டும்.<br>• ஒன்டாரியோ குழந்தை நலனை (OCB) பெறவில்லை<br>✓குழந்தையின் முழுவதுமான அல்லது பகிரப்பட்ட பொறுப்புக் காவலைப் பெற்றிருக்க வேண்டும். |
| கிடைக்கக்கூடிய வர்கள் | • சாசனத்தி ன் படியான அகதி<br>• பாதுகாக்கப்பட்ட நபர் | • சாசனத்தின் படியான அகதி<br>• பாதுகாக்கப்பட்ட நபர் | • சாசனத்தின் படியான அகதி<br>• பாதுகாக்கப்பட்ட நபர் | அகதி அந்தஸ்து கோருபவர் |
| எவ்வாறு விண்ணப்பிப்பது ? | **குழந்தை புதிதாகப் பிறந்திருந்தால்:**<br>• உங்கள் பிறந்த குழந்தையின் பிறப்பை மருத்துவமனையி ல் பதிவு செய்யும்போது நீங்கள் CCB-க்கு விண்ணப்பிக்கலாம்<br>**குழந்தை புதிதாகப் பிறந்தவர் இல்லை யென்றால்:**<br>• நீங்கள் ஒன்லைன் அல்லது மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கலாம்.<br>• ஒன்லைன்: CRA-இன் வலைத்தளத்தை அணுகவும். My Account→ Login→Apply for child benefits எனும் பகுதிக்கு செல்லவு ம்.<br>• மின்னஞ்சல்: RC66, கனடா குழந்தை நலன்கள் விண்ணப்ப படிவத்தை “Canada Child Benefits Application” பூர்த்தி செய்து கையொப்பமிடவும். CRA இன் இணையதளத்தில் படிவத்தை பெறலாம். | CCB-க்கு விண்ணப்பிக்கும் போது அதற்கு விண்ணப்பிக்கவு ம். | CCB-க்கு விண்ணப்பிக்கும் போது அதற்கு விண்ணப்பிக்கவு ம். | விண்ணப்பிக்கத் தேவையில்லை. தகுதி இருந்தால், அது தானாகவே உங்கள் மாதாந்திர OW கட்டணத்தில் சேர்க்கப்படும். |

*குறிப்பு: மேலே குறிப்பிட்ட அனைத்து செயன்முறைகளும் ஆங்கிலம் மற்றும் / அல்லது ஒன்லைனில் செய்யப்படுகின்றன. உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், விண்ணப்ப செயற்பாட்டில் உங்களுக்கு உதவ நம்பகமான குடும்ப உறுப்பினர் அல்லது தீர்வு நிறுவனத்தை அணுகவும்.*

# குடிவரவு

## அகதிகள் குடும்ப மீள் ஒருங்கிணைப்பு



### பாதுகாக்கப்பட்ட நபர்கள் (தங்களது அகதி உரிமை கோரல் அங்கீகரிக்கப்பட்டவர்கள்)

நிரந்தர வதிவிட நிலைக்கு விண்ணப்பிக்க உங்களுக்கு சட்டப்பூர்வ உரிமை உள்ளது. உங்கள் துணை அல்லது உங்களைச் சார்ந்துள்ள குழந்தைகளை, அவர்கள் கனடாவில் வசிக்காவிட்டாலும் கூட அவர்களையும் இணைத்துக்கொள்ளலாம்.

“அகதிகளை சார்ந்துள்ளவர்கள் (DR2s)” பிரிவின் மூலம் குடும்ப மீள் ஒருங்கிணைப்பிற்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். அகதி அந்தஸ்தை (பாதுகாக்கப்பட்ட நபர்) பெற்ற பிறகு உங்கள் குடும்ப உறுப்பினர்களின் பெயர்களை நிரந்தர வதிவிட விண்ணப்பத்தில் சேர்க்கலாம். பட்டியலிடப்பட்ட அனைத்து குடும்ப உறுப்பினர்களுக்கும் நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டும். உங்கள் குடும்ப உறுப்பினர்கள் எவரும் நிராகரிக்கப்பட்டால், உங்கள் விண்ணப்பம் பாதிக்கப்படாது.

உங்கள் உடனடி குடும்ப உறுப்பினர்களின் பெயர்களை நீங்கள் பட்டியலிட்டிருந்தாலும், அவர்களுக்கான கட்டணங்களை செலுத்தவில்லை அல்லது அந்த நேரத்தில் அவர்கள் கனடாவிற்கு வரத் திட்டமிட்டிருக்கவில்லை என்றால், உங்களுக்கு நிரந்தர வதிவிடம் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வருடத்திற்குள் கனடாவிற்கு வெளியில் இருந்து நிரந்தர வதிவிடத்திற்காக விண்ணப்பிக்கும் வாய்ப்பு (One Year Window) அவர்களுக்கு உள்ளது.

### மீள்குடியேறிய / சாசனத்தின் படியான அகதிகள் (அரசு உதவி பெறும் அகதிகள், கலப்பு விசா அலுவலக அகதிகள் (BLENDED VISA OFFICE REFUGEES), தனிப்பட்ட முறையில் அனுசரணை வழங்கப்பட்ட அகதிகள் மற்றும் கூட்டு உதவி அனுசரணையைப் பெற்றவர்கள்)

"One Year Window" ஏற்பாடு அல்லது "Family Class Sponsorship" மூலம் உங்கள் குடும்ப உறுப்பினர்களை மீள ஒன்றிணைக்க விண்ணப்பிக்கும் உரிமை உங்களுக்கு உள்ளது. மீள்குடியேற்றப்பட்ட சாசனத்தின் படியான அகதியாக, உங்கள் நிரந்தர வதிவிட விண்ணப்பத்தில் உங்கள் உடனடி குடும்ப உறுப்பினர்களை பெயரிட்டால் அல்லது கனடாவிற்கு நீங்கள் புறப்படுவதற்கு முன்பு அவர்களை அறிவித்திருந்தால், நீங்கள் நிரந்தர வதிவிட அனுமதியைப் பெறுவதற்கு ஒரு வருடத்திற்குள் (நீங்கள் கனடாவிற்கு வந்த நாள்) உங்கள் குடும்ப உறுப்பினர்கள் விண்ணப்பத்திருந்தால் இங்கு “One Year Window” வாய்ப்பு பொருந்தும்.

மீள்குடியேற்றப்பட்ட (சாசனத்தின் படியான) அகதியாக நீங்கள் கனடாவிற்கு வந்து ஒரு வருடம் கடந்துவிட்டால், நீங்கள் Family Class Sponsorship மூலம் உங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் மீண்டும் ஒன்றிணைய வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கான கட்டணத்தையும் நீங்கள் செலுத்த வேண்டியிருக்கும், மேலும் குடும்ப உறுப்பினர்களின் அடிப்படைத் தேவைகளுடன் அவர்களுக்கு அனுசரணை வழங்கும் இயலுமையும் உங்களுக்கு இருக்க வேண்டும்.

விண்ணப்ப செயன்முறை, தகுதி வரம்புகள், கட்டணங்கள், செயலாக்க நேரங்கள் போன்றவை பற்றிய கூடுதல் தகவல்களுக்கு தயவுசெய்து கனடா அரசாங்க வலைத்தளத்தைப் பார்க்கவும்: வலைத்தளத்தின் முகப்புப் பகுதியில் (Home→Immigration and citizenship→My immigration or citizenship application→Find application forms and guides முறையே கிளிக் செய்யவும். நீங்கள் எந்த குடும்ப மீள் ஒருங்கிணைப்பு அணுகுமுறையைப் பயன்படுத்துகிறீர்கள் என்பதன் அடிப்படையில், சரியான தலைப்பைத் தேர்ந்தெடுத்து (உ.ம். குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு அனுசரணை வழங்கல் - Sponsor a Member of the Family Class) படிமுறைகளைப் பின்பற்றவும். அல்லது அகதிகளுக்கான கனேடிய கவுன்சில் (CCR) “அகதிகள் குடும்ப மீள் ஒருங்கிணைப்பு: நடைமுறை வழிகாட்டி” ஐப் பார்க்கலாம் “Refugee Family Reunification: Practical Guide”.

## அனுசரணை முறிவு

நீங்கள் தனிப்பட்ட முறையில் அனுசரணை வழங்கப்பட்ட அகதியாக இருந்தால் அல்லது கனடாவில் நிரந்தர வதிவிடத்தைப் பெற உங்கள் துணை அல்லது குடும்ப உறுப்பினருக்கு அனுசரணை செய்கிறீர்கள் என்றால், உங்கள் அனுசரணையாளர் அல்லது குடும்ப உறுப்பினருடன் அனுசரணை வழங்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளீர்கள். அனுசரணை வழங்கும் ஒப்பந்தம் (sponsorship agreement) என்பது அனுசரணை வழங்குபவரும் கனடாவிற்கு வர அனுசரணை பெறுபவரும் கையொப்பமிடும் ஒரு சட்ட ஆவணம் ஆகும். மாற்றங்கள் நிகழ்ந்தாலும் (அதாவது நிதி நிலை மோசமடைதல் அல்லது அனுசரணை வழங்கும் துணையிடமிருந்து விவாகரத்து பெறல்), நீங்களோ அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்களோ நிரந்தர வதிவிடத்தைப் பெற்ற பிறகு அதனை இரத்து செய்யவோ மாற்றவோ முடியாது என்பது நிபந்தனையற்ற ஆதரவின் உத்தரவாதமாகும்.

நீங்கள் தனிப்பட்ட முறையில் அனுசரணை வழங்கப்பட்ட அகதியாக இருந்தால், உங்கள் ஒப்பந்தத்தின் காலம் 12 மாதங்கள் நீடிக்கும் அல்லது நீங்கள் தன்னிறைவு பெறும் வரையில், நிதி அல்லது தீர்வு உதவி தேவையில்லை எனும் நிலை வரும் வரை (எது முதலில் வந்தாலும்) நீடிக்கும்.

நீங்கள் உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு அனுசரணை வழங்கும் நபர் என்றால், உங்கள் அனுசரணை ஒப்பந்தத்திற்கான (sponsorship agreement) கால அளவு மாறுபடும். அவை பின்வருமாறு:

- துணை = 3 வருடங்கள்
- 22 வயதிற்கு உட்பட்ட உங்களைச் சார்ந்துள்ள பிள்ளை = 10 வருடங்கள் (அல்லது பிள்ளைக்கு 25 வயதாகும் வரை)
- 22 வயதிற்கு மேற்பட்ட உங்களைச் சார்ந்துள்ள பிள்ளை = 3 வருடங்கள்
- பெற்றோர் = 10 வருடங்கள்

அனுசரணை ஒப்பந்தம், அனுசரணை வழங்கும் நபருக்கு அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குமாறு உத்தரவிடுகிறது. இதனால் அவர்கள் சமூக உதவியை நாட மாட்டார்கள். அவற்றில் பின்வருவன அடங்கும்:

- உணவு
- உடை
- இருப்பிடம்
- வெப்பம் மற்றும் பயன்பாட்டிற்குத் தேவையானவை
- வீட்டு பொருட்கள்
- தனிப்பட்ட தேவைகள்
- OHIP-இல் உள்வாங்கப்படுவதற்கு முன்னதான 3 மாத காலப் பகுதிக்கு பல் மற்றும் கண் பராமரிப்பு உள்ளிட்ட சுகாதாரப் பாதுகாப்பு.

சில சூழ்நிலைகளில், அனுசரணை வழங்குபவருக்கும் அனுசரணை பெறுபவருக்கும் இடையே மோதல்கள் எழுகின்றன. இந்த சிக்கல்களை சீர்படுத்த முடியாவிட்டால், இது அனுசரணை முறிவு (sponsorship breakdown) என்று அழைக்கப்படுகிறது. ஒரு முறிவு ஏற்பட பல காரணங்கள் உள்ளன, இதில் நீங்கள் கருத்திற்கொள்ள வேண்டிய உரிமைகளும் பொறுப்புகளும் உள்ளன.

அனுசரணை முறிவு ஏற்படும் காரணங்கள்:

- அனுசரணை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில அல்லது அனைத்து அடிப்படைத் தேவைகளுக்கும் அனுசரணையாளர் பணம் செலுத்த மறுப்பது அல்லது செலுத்த முடியாதிருப்பது. இது சில நேரங்களில் அனுசரணையாளர் தனது வேலையை அல்லது வருமானத்தை இழப்பதன் காரணமாக இருக்கலாம்.
- அனுசரணை வழங்கப்பட்ட நபர் சமூக உதவியைப் பெறத் தொடங்குவது (அதாவது Ontario Works அல்லது ஒன்டாரியோ இயலாமைக்கான உதவித் திட்டம் Ontario Disability Support Program - இரண்டு திட்டங்களையும் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு வேலைவாய்ப்பு பிரிவைப் பார்க்கவும்).

# குடிவரவு

*குறிப்பு: ஒரு அனுசரணை வழங்கப்பட்ட தனிநபராக, சமூக உதவியை நாடுவதற்கு முன்பு, நீங்களே சுயமாக உதவியைப் பெறவும், அனுசரணையாளரிடம் உதவி கோரவும் ஊக்குவிக்கப்படுகிறீர்கள். நீங்கள் சமூக உதவியைப் பெற்றால், வேறொருவருக்கு அனுசரணை வழங்குவதற்கு முன்பு, நீங்கள் பெற்ற அனைத்து சமூக உதவிகளையும் உங்கள் அனுசரணையாளர் அரசாங்கத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும். சமூக உதவியின்றி நீங்கள் சுய ஆதரவைப் பெற முடிந்தால், அனுசரணை முறிவு இருப்பதாக இது அர்த்தப்படுவதில்லை.*

## அனுசரணை முறிவை எதிர்கொள்ளும்போது உங்களினதும் உங்களின் அனுசரணையைப் பெற்ற குடும்ப உறுப்பினர்களினதும் உரிமைகள்

| | | |
|---|---|---|
| குடியேற்ற நிலை பாதிக்கப்படாதிருப்பதற்கான உரிமை. அனுசரணையாளர் உங்களை அல்லது அனுசரணை வழங்கப்பட்ட உங்களின் குடும்ப உறுப்பினர்களை கனடாவில் இருந்து வெளியேற்ற முடியாது. | நிதி தேவைப்பட்டால், Ontario Works அல்லது ஒன்டாரியோ இயலாமைக்கான உதவித் திட்டத்திற்கு (Ontario Disability Support Program) விண்ணப்பிக்கும் உரிமை. | குடியேற்ற நிலை பாதிக்கப்படாமல், துஷ்பிரயோகத்தில் இருந்து தப்பிப்பதற்காக அல்லது அதனை முடிவிற்குக் கொண்டு வருவதற்காக (துஷ்பிரயோகம் செய்பவர் அனுசரணையாளராக இருந்தாலும் கூட) முறைப்பாடு செய்யும் உரிமை உள்ளது. |
| உங்கள் அனுசரணைக் காலம் முடிவுற்றால், அனுசரணைக்கு கோருவதற்கு முன்னதாக குறைந்தது 12 மாதங்களாவது சமூக உதவியைப் பெறாமல் இருந்தால், எதிர்காலத்தில் உங்கள் உறவினர்களுக்கு அனுசரணை வழங்குவதற்கான உரிமை. | உங்களுக்கோ உங்களால் அனுசரணை வழங்கப்பட்ட குடும்ப உறுப்பினருக்கோ உரித்தான உரிமைகளும் நலன்களும் பாதிக்கப்படாதிருப்பதற்கான உரிமை. | குழந்தைகளை (உங்களின் பொறுப்புக் காவலில் இருந்தால்) அல்லது சொத்தை (உங்கள் பெயரில் இருந்தால்) வைத்திருப்பதற்கான உரிமை. எந்தவொரு சர்ச்சையும் குடும்பச் சட்டத்தின் மூலம் கையாளப்படுகின்றது. |



**உங்கள் ஆவணங்களை உங்கள் அனுசரணையாளர் பறிமுதல் செய்துவிட்டாரா? கவலை வேண்டாம்!**

உங்கள் ஆவணங்களைத் திரும்பக் கேட்க நீங்கள் பயப்படுகிறீர்கள் என்றால், நீங்கள் கனடா குடியுரிமை மற்றும் குடிவரவு திணைக்களத்தை(CIC) தொடர்பு கொண்டு, உங்கள் ஆவணங்களின் புதிய சான்றளிக்கப்பட்ட நகல்களையும் புதிய நிரந்தர வதிவிட அட்டையையும் விநியோகிக்கக் கோரி பெற்றுக்கொள்ளலாம் . நீங்கள் காவல்துறையினரைத் தொடர்புகொண்டு, உங்களின் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள அனுசரணையாளரின் வீட்டிற்கு செல்கையில் காவல்துறை அலுவலர் ஒருவரை உங்களுடன் அனுப்பி வைக்குமாறு கேட்கலாம்.

*நீங்கள் நாடு கடத்தப்படுவதை எதிர்கொள்ளலாம் என அஞ்சினால் அல்லது கூடுதல் தகவல் தேவைப்பட்டால் உடனடியாக சட்ட உதவியை நாடுங்கள்.*

## மனிதாபிமானம் மற்றும் கருணை அடிப்படையிலான விண்ணப்பம் (HUMANITARIAN AND COMPASSIONATE - H&C): எவ்வாறு விண்ணப்பிப்பது?

மனிதாபிமானம் மற்றும் கருணை அடிப்படையிலான விண்ணப்பம் (Humanitarian and Compassionate - H&C) என்பது கனடாவிலிருந்து நிரந்தர வதிவிடம் கோருவதற்கான விண்ணப்பமாகும். தமது சொந்த நாட்டிற்கு திரும்புவது ஆபத்தானது அல்லது

பாதுகாப்பற்ற கடினமான சூழலை உருவாக்கும் என எண்ணுபவர்கள், அல்லது குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சட்டத்தின் (Immigration and Refugee Protection Act - IRPA) சில தேவைகளிலிருந்து விலக்கு தேவைப்படுபவர்கள் மனிதாபிமான மற்றும் கருணை அடிப்படையில் கருத்திலெடுக்கவேண்டிய காரணங்களை கொண்டிருப்பதாகக் கூறி நிரந்தர வதிவிடத்திற்கு விண்ணப்பிக்கலாம். மனிதாபிமானம் மற்றும் கருணை அடிப்படையிலான விண்ணப்பத்தினை செய்வதற்கு முன்னதாக சட்ட ஆலோசனையைப் பெற பரிந்துரைக்கப்படுகிறது.

H&C விண்ணப்பத்திற்கான தகுதி வரம்புப் பட்டியலுக்கு, கனடா அரசின் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள். Immigration and citizenship → My immigration or citizenship application→ Find application forms and guides முறையே கிளிக் செய்து “Guide 5291 - Humanitarian and Compassionate Considerations” எனும் பகுதியை தெரிவு செய்யுங்கள்.

| புள்ளிகள் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை கனடா (IRCC) மனிதாபிமானம் மற்றும் கருணை அடிப்படையிலான நிரந்தர வதிவிடத்தை (H&C GROUNDS) வழங்குவதற்கு முன்னதாகக் கருத்தில்கொள்வது | H&C அடிப்படையின் கீழ் விண்ணப்பிக்க நீங்கள் வழங்கக்கூடிய கூடுதல் காரணங்கள் |
|---|---|
| • கனடாவில் நீங்கள் எவ்வாறு குடியேறினீர்கள்.<br>• உங்களுக்கு கனடாவுடன் ஏதேனும் குடும்ப உறவுகள் இருந்தால்.<br>• குழந்தைகள் ஏதேனும் தொடர்புபட்டிருந்தால்.<br>• H&C அடிப்படையில் உங்களுக்கு நிரந்தர வதிவிடத்தை வழங்காவிட்டால், விண்ணப்பதாரரான உங்களுக்கு என்ன நேரிடும் | • நீங்கள் பிள்ளை அல்லது துணைக்கான உதவியை செலுத்துகிறீர்கள்.<br>• உங்களிடம் உள்ள உடல் அல்லது மனநலம் சார் சுகாதாரப் பிரச்சினைகள்.<br>• நீங்கள் வீடு திரும்பினால், குடும்ப வன்முறையை அனுபவிப்பது.<br>• வறுமை, போதிய சுகாதார பராமரிப்பின்மை, பாகுபடுத்தப்படல் போன்ற நீங்கள் எதிர்கொள்ளக்கூடிய கஷ்டங்கள் |

### H&C விண்ணப்பங்கள் தொடர்பில் தெரிந்துகொள்ள வேண்டியவை

- H&C அடிப்படையில் விண்ணப்பிக்க, நீங்கள் கனடாவில் நிரந்தர வதிவிட நிலைக்கு விண்ணப்பிக்க வேண்டும்.
- நீங்கள் ஒரே நேரத்தில் ஒரு H&C அடிப்படையிலான விண்ணப்பத்தை மட்டுமே கொண்டிருக்க முடியும்.
- உங்கள் விண்ணப்பத்தை கருத்திற்கொள்ளும்போது தண்டனை அல்லது அசாதாரணமாக நடத்தப்படல் போன்ற ஆபத்தான காரணிகளை IRCC கவனிக்காது.
- அகதி கோரிக்கை நிலுவையில் இருந்தால், நீங்கள் H&C அடிப்படையில் விண்ணப்பிக்க முடியாது. நீங்கள் விண்ணப்பிக்க விரும்பினால், குடிவரவு மற்றும் அகதிகள் வாரிய விசாரணைக்கு முன்னதாக உங்கள் கோரிக்கையை திரும்பப் பெற வேண்டும்.
- கடந்த 12 மாதங்களுக்குள் குடிவரவு மற்றும் அகதிகள் வாரியத்திடமிருந்து எதிர்மறையான முடிவை நீங்கள் பெற்றிருந்தால், நீங்கள் H&C அடிப்படையில் விண்ணப்பிக்க முடியாது. பின்வருமாறு இருந்தால் பொருந்தாது:
    - நீங்கள் கனடாவிலிருந்து அகற்றப்பட்டால் 18 வயதிற்குட்பட்ட உங்கள் குழந்தைகள் பாதிக்கப்படலாம்.
    - நீங்கள் பிறந்த நாட்டில் சிகிச்சை பெற முடியாதவாறான நெருக்கடியான மருத்துவ நிலை உங்களுக்கோ உங்களை சார்ந்துள்ளவருக்கோ இருப்பதற்கான ஆதாரம் இருப்பது.

## நாடுகடத்தல் விடயங்கள்: நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை

- உங்களுக்கு எதிராக நீக்குதல் உத்தரவு இருந்தால், H&C அடிப்படையில் விண்ணப்பிக்கும் செயன்முறையை தாமதப்படுத்தாது அல்லது நிறுத்தாது.
- நீங்கள் நாடுகடத்தப்படும் அபாயத்தில் இருந்தால், உங்கள் பிள்ளையின் தனித்த பொறுப்புக் காவல் உங்களிடம் இல்லையென்றால், உங்கள் குழந்தை இல்லாமல் நாடுகடத்தப்படலாம். உங்களிடம் தனித்த பொறுப்புக் காவல் இருந்தால், உங்கள் பிள்ளை உங்களுடன் நாட்டிலிருந்து வெளியேற முடியும் என்பதை உறுதிப்படுத்த நீதிமன்றம் முயற்சிக்கும்.
    - தனித்த பொறுப்புக் காவலை வைத்திருப்பதால் மற்ற துணையிடம் கேளாமல் வேறொரு இடத்திற்கு நீங்கள் நகரவோ பயணிக்கவோ முடியாது; விசேடமாக இது அவர்களின் குழந்தையை அணுகும் உரிமையை பாதிக்கும் என்றால் அதைச் செய்ய முடியாது. பொறுப்புக் காவல் வழக்கும் நாடு கடத்தல் வழக்கும் வழக்கிற்கு வழக்கு அடிப்படையில் தீர்க்கப்படுகிறது. உங்கள் வழக்கிற்கு பொருந்தக்கூடியவற்றை அறிய சட்ட ஆலோசனை அல்லது உதவியைப் பெறவும்.

# வேலைவாய்ப்பு

## ஒன்டாரியோவில் வேலைவாய்ப்பிற்கான சட்டப்பூர்வ வயது

- பெரும்பாலான பணியிடங்களில், சட்டபூர்வமான வேலைவாய்ப்பிற்கான குறைந்தபட்ச வயது 14. வேலையைப் பொறுத்து விதிவிலக்குகள் பொருந்தும்:
  - மளிகைக் கடை, சில்லறைக் கடை அல்லது உணவு விடுதி பணியாளாக வேலை செய்வதற்கான வயது 14.
  - உணவக சமையலறையில் வேலை செய்வதற்கான வயது 15.
  - கட்டுமானப் பணியில் ஈடுபடுவதற்கான வயது 16.
  - மது விற்பனை அல்லது பரிமாற்றத்தில் ஈடுபடுவதற்கான வயது 18.


*பாடசாலை வருகைப் பதிவில் அவர்களுக்கு சலுகை வழங்கப்படாதவிடத்து, 18 வயதிற்கு உட்பட்ட எவரையும் பாடசாலை நேரத்தில் வேலைக்கு அமர்த்த தடை விதிக்கப்பட்டுள்ளது.*

## தொழில் உரிமைகள்

ஒன்டாரியோவில் பணிபுரியும் ஊழியர்களுக்கான குறைந்தபட்ச நியமங்களை வேலைவாய்ப்பு நியமங்கள் சட்டம் (Employment Standards Act - ESA) கோடிட்டுக் காட்டுகிறது. ஊதிய சமநிலைச் சட்டம்  (Pay Equity Act - PEA), தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சட்டம் (Occupational Health and Safety Act -OHSA), தொழிலாளர் உறவுகள் சட்டம் (Labour Relations Act - LRA) ஆகியவற்றுடன் ESA இணைந்து ஒன்டாரியோவின் பெரும்பாலான பணியிடங்களில் தொழில் வழங்குநருக்கும் தொழிலாளர்களுக்கும் அவர்களின் உரிமைகளையும் பொறுப்புக்களையும் வழங்குகிறது.

ஒன்டாரியோ மனித உரிமைகள் நெறிமுறையின் கீழ் (Ontario Human Rights Code - OHRC, The Code) ஊழியர்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படுகின்றன. ஊதிய விகிதங்கள், நடத்தை விதிமுறைகள், கூடுதல் வேலை நேரம், வேலை நேரம், விடுமுறைகள், சலுகைகள், நேர மாற்ற வேலை (shift), சுகயீன விடுமுறைகளைக் கையாள்வது, செயல்திறன் மதிப்பீடுகள், ஒழுக்கம் மற்றும் இயலாமைக்கு ஏற்ப பொறுப்பு வழங்கல், மருத்துவத் தேவைகள், மற்றும்/அல்லது மத நம்பிக்கை போன்ற விடயங்களை இந்தக் நெறிமுறை உள்ளடக்கியுள்ளது. பாகுபாடு, துன்புறுத்தல், உங்கள் உரிமைகளை மீறுதல் ஆகியவற்றிற்கு எதிராக, உங்கள் வேலையின் அனைத்து நிலைகளிலும் இது உங்களைப் பாதுகாக்கிறது:

1. வேலைக்கு விண்ணப்பிக்கும்போது, ஆட்சேர்ப்பு செய்யப்படும்போது அல்லது பயிற்சி பெறும்போது.
2. இடமாற்றம் செய்யப்படும்போது, பதவி உயர்வு பெறும்போது அல்லது பயிற்சி பெறும் போதான விதிமுறைகளை தீர்மானிக்கும் போது.
3. வெளியேற்றப்படும் போது, பணி நீக்கம் செய்யப்படும் போது,  நிறுத்தப்படும் போது.



# தொழில்வாய்ப்பிலும் உங்கள் உரிமைகளிலும் பாகுபாடு நிகழ சாத்தியமான பரப்புக்கள்

## குற்றப் பதிவு

ஒரு தொழிலுக்காக விண்ணப்பிக்கும் போது, எந்தவிதமான குற்றப் பதிவுகளையும் வெளிப்படுத்துமாறு கேட்கப்படாதிருப்பதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது.

இருப்பினும், உங்கள் மீது ஒரு கூட்டாட்சி சட்டங்களை மீறிய குற்றம் நிரூபிக்கப்பட்டிருந்தால், அதற்கான மன்னிப்பை நீங்கள் பெற்றிராவிட்டால், அது உங்கள் தொழில் புரிவதற்கான திறனை பாதிக்கும் என்றால், உங்கள் தொழில் வழங்குநர் கேட்கும் பட்சத்தில் அதனை தெரிவிக்கும் பொறுப்பு உங்களுக்கு உள்ளது.

## மதம் (நம்பிக்கை)

உங்கள் மதம் காரணமாக பாகுபாடு காட்டப்படாதிருப்பதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது. உங்கள் நம்பிக்கையை மதிக்கும் வேலைவாய்ப்பு சூழலுக்கான உரிமையும் உங்களிடம் உள்ளது.

கடமைகளைச் செய்வதற்கான உங்கள் திறனை பாதிக்காவிடத்து, தொழில் வழங்குநருக்கு தேவையற்ற கஷ்டங்களை வழங்காதவிடத்து, பிரார்த்தனை நேரம் அல்லது புனித நாட்களில் நேரம் ஒதுக்குதல் போன்ற உங்கள் மதம் மற்றும் நம்பிக்கை சார்ந்த தேவைகளுக்கு இடமளிப்பது தொழில் வழங்குநரின் பொறுப்பு.

## மொழி & உச்சரிப்பு

உங்கள் மொழி அல்லது உச்சரிப்பு காரணமாக பாகுபாடு காட்டப்படாதிருப்பதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது.

தொழில் புரிவதற்கு மொழித்திறன் தேவைப்படாத பட்சத்தில், இனரீதியான விண்ணப்பதாரர்களை அகற்றுவதற்கான வழிமுறையாக தொழில் வழங்குநர் ஒருவர் மொழி அல்லது உச்சரிப்பைப் பயன்படுத்த முடியாது.

## மருத்துவ பரிசோதனைகள் மற்றும் மருந்து அல்லது மதுசார பரிசோதனை

வேலை திரையிடல் செயற்பாட்டின் போது (Job screening process), சோதனை அல்லது போதைப்பொருள், மதுசார பயன்பாடு தொடர்பான கேள்விகளை மறுக்க உங்களுக்கு உரிமை உள்ளது. இந்த தகவலை உங்களிடம் கேட்க தொழில் வழங்குநருக்கு உரிமை இல்லை.

பணியிட பாதுகாப்பை எவ்வாறு பயன்படுத்துகிறீர்கள், கடமைகளை எவ்வாறு செய்கின்றீர்கள் என்பதில் தாக்கம் செலுத்தினால் மட்டுமே, நிபந்தனைக்குட்பட்ட வேலைவாய்ப்பு வழங்கப்பட்ட பின்னர் (வழக்கமாக எழுத்துப்பூர்வமாக) போதைப்பொருள் மற்றும் மதுசார பயன்பாட்டிற்கான மருத்துவ பரிசோதனையை தொழில் வழங்குநர்கள் கேட்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

## இயலாமை

குறைபாடுகள் இல்லாமல் வாழும் எவருக்கும் உள்ள அதே வாய்ப்புகளும் நன்மைகளும் உங்களுக்கும் உள்ளன.

கடமைகளைச் செய்வதற்கான உங்கள் திறனை பாதிக்காத போதும், தொழில் வழங்குநருக்கு தேவையற்ற கஷ்டங்களை ஏற்படுத்தாவிடத்தும் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வது தொழில் வழங்குநரின் பொறுப்பு.

# உங்கள் உரிமைகள் மீறப்பட்டால் அல்லது நீங்கள் பாகுபாட்டை எதிர்கொண்டால் என்ன செய்வது?

நீங்கள் இதை அணுகலாம்:Your employer

1. உங்கள் தொழில் வழங்குநர்
2. ஒன்டாரியோவின் மனித உரிமைகள் தீர்ப்பாயம்
3. மனித உரிமைகள் சட்ட ஆதரவு மையம்
4. சமூக சட்ட நிலையங்கள்
5. தொழிலாளரின் செயல் மையம் (Worker's Action Centre)
6. தொழிலாளர் ஆலோசகரின் அலுவலகம்
7. உங்கள் தொழிற்சங்கம்
8. காவல்துறை (பாதுகாப்பு ஆபத்தில் இருந்தால்)

*சட்டப்படி, துன்புறுத்தல் மற்றும் பாகுபாட்டை முறையிட்டதற்காக உங்கள் தொழில் வழங்குநர் உங்களைத் தண்டிக்க முடியாது.*

# வேலைவாய்ப்பு

**உங்கள் தொழில் வழங்குநர்**
நீங்கள் பாகுபாட்டுக்கு உட்பட்டால், உங்கள் சக பணியாளர்கள் அல்லது கூட்டாளர்களால் பணியிடத்தில் உங்கள் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக நீங்கள் உணர்ந்தால் அதைப் பற்றி உங்கள் தொழில் வழங்குநருக்கு தெரியப்படுத்துங்கள். உங்கள் தொழில் வழங்குநரிடம் நீங்கள் கூறியவுடன், உங்கள் பிரச்சினைகளை ஆராய்ந்து, தேவைப்பட்டால், பணியிட மாற்றங்கள் உட்பட, பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதை உறுதி செய்வது தொழில் வழங்குநரின் பொறுப்பு. உங்கள் தொழில் வழங்குநரால் தான் சிக்கல் என்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருத்தமான மூன்றாம் தரப்பு நிறுவனத்தை நீங்கள் அணுகலாம்.

**ஒன்டாரியோவின் மனித உரிமைகள் தீர்ப்பாயம் (Human Rights Tribunal of Ontario, தீர்ப்பாயம் - The Tribunal)**
ஒன்டாரியோவின் மனித உரிமைகள் தீர்ப்பாயம் (The Tribunal) ஒரு சிறப்பு நீதிமன்றமாகும். இது மனித உரிமைகள் குறியீட்டின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட பாகுபாடு மற்றும் துன்புறுத்தல் தொடர்பான வழக்குகளைத் தீர்க்கிறது. துன்புறுத்தல் உங்கள் மனித உரிமைகளுக்கு எதிரானதாக இருந்தால், நீங்கள் ஒரு வகையான பாகுபாட்டை அனுபவிக்க வாய்ப்புள்ளது. உதாரணத்திற்கு, நீங்கள் செய்யும் தொழிலுக்கு மொழி சரளமாகத் தெரிந்திருக்க வேண்டியதில்லை (பேருந்து சாரதி போன்ற தொழில்) என்றாலும், உங்கள் மொழி அல்லது உச்சரிப்பு காரணமாக நீங்கள் பாகுபாடு காட்டப்படுகிறீர்கள் என்றால், அது தொடர்பில் நீங்கள் மனித உரிமைகள் கோரிக்கையை தாக்கல் செய்ய முடியும்.

உங்கள் குறிப்பிட்ட சூழ்நிலையைப் பொறுத்து உரிமைகோரல்கள் பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கலாம்: வம்சாவளி, இனம், பாலினம், பாலியல் நோக்குநிலை, இயலாமை, மதம் / நம்பிக்கை அல்லது பிறந்த இடம் போன்றவை. (416) 326-1312 அல்லது 1-866-598-0322 எனும் இலவச அழைப்பிலக்கத்தின் மூலம் தீர்ப்பாயத்தை நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

நீங்கள் கோரிக்கையை தாக்கல் செய்த பிறகு, உங்கள் தொழில் வழங்குநர் சட்டத்தை மீறியதாக தீர்ப்பாயம் முடிவு செய்தால், தொழில் வழங்குநர் தமது செயல்களை சரிசெய்துகொள்ள தீர்ப்பாயம் உத்தரவிடலாம். அவ்வையாவன:

- உங்களுக்கு பணம் செலுத்துதல்
- உங்களுக்கு  தொழில் நிலையை வழங்குதல்
- பணியிட ஏற்பாட்டை மாற்றுவது, எனவே உங்களைத் துன்புறுத்திய நபருடன் நீங்கள் பணியாற்ற வேண்டியதில்லை
- மனித உரிமைச் சட்டங்களை சிறப்பாகப் பின்பற்றுவதற்காக பணியிட நடைமுறையை மாற்றுதல்

உரிமைகோரலைத் தாக்கல் செய்வதில் உங்களுக்கு சிக்கல் இருந்தால், உதவி தேவைப்பட்டால், நீங்கள் மனித உரிமைகள் சட்ட ஆதரவு நிலையத்தை (Human Rights Legal Support Centre) அணுகலாம்.

**மனித உரிமைகள் சட்ட ஆதரவு நிலையம் (Human Rights Legal Support Centre)**
மனித உரிமைகள் சட்ட ஆதரவு நிலையம் உங்களுக்கு இலவச சட்ட ஆலோசனை மற்றும் தகவல்களை வழங்கும். இந்த நிறுவனத்தில் உள்ள பணியாளர்கள், நீங்கள் தீர்ப்பாயத்தில் உரிமை கோர வேண்டுமா, துன்புறுத்தலை நிரூபிக்க உங்களுக்கு என்ன வகையான தகவல் தேவை, அடுத்து என்ன செய்வது என்பதை தீர்மானிக்க உதவலாம். இது அவர்களின் மனித உரிமைகளுக்கு எதிரான காரணங்களுக்காக வேலையில் துன்புறுத்தப்பட்ட அல்லது துன்புறுத்தலைப் புகாரளித்ததற்காக அபராதம் விதிக்கப்பட்ட நபர்களுக்கானது. நீங்கள் அவர்களை (416) 597-4900 என்ற எண்ணிலோ அல்லது  1-866-625-5179 என்ற இலவச அழைப்பு இலக்கத்திலோ அழைக்கலாம்.

துன்புறுத்தலை நிரூபித்து உங்களுக்கு உதவ, நடந்தவற்றை நினைவுபடுத்துமாறு அவர்கள் கேட்கக்கூடும்:

- துன்புறுத்தல் நடந்த/நடக்கின்ற திகதி, நேரம் மற்றும் இடம்
- சம்பந்தப்பட்ட நபர் யார் (அவர்கள் என்ன செய்தார்கள் / சொன்னார்கள்)
- நடந்தவற்றை யார் கண்டார்கள், யார் அருகில் இருந்தார்கள்
- அந்த நேரத்தில் உங்கள் எதிர்வினை என்ன

## சமூக சட்ட உதவி நிலையங்கள்

உங்கள் சமூக சட்ட உதவி நிலையங்களில் ஒன்றில் ஒரு வழக்கறிஞருடன் அல்லது ஒரு சட்ட துணை உறுப்பினருடன் பேசுங்கள், அவர்கள் உங்கள் பணியிட பிரச்சினை தொடர்பான ஆலோசனைகளை உங்களுக்கு வழங்க முடியும். தேவைப்பட்டால் உரிமைகோரல்கள் அல்லது வழக்குகளை தாக்கல் செய்ய உங்களுக்கு உதவக்கூடும்.

## தொழிலாளர் செயற்பாட்டு நிலையம்

தொழிலாளர் செயற்பாட்டு நிலையம் (Workers' Action Centre) என்பது தொழிலாளர்கள் சார்ந்த அமைப்பாகும். குறைந்த ஊதியம் மற்றும் நிலையற்ற வேலைவாய்ப்பில் இருக்கும் தனிநபர்களின் வாழ்க்கை மற்றும் வேலை நிலைமைகளை மேம்படுத்துவதில் தம்மை அவர்கள் ஒப்புக்கொடுத்துள்ளார்கள். உங்கள் உரிமைகள் மற்றும் பணியிட சிக்கலைத் தீர்ப்பதற்கான வழிகள் பற்றிய தகவல்களை அவர்கள் உங்களுக்கு வழங்க முடியும். நீங்கள் அவர்களை (416) 531-0778 என்ற எண்ணில் அழைக்கலாம். அவர்கள் பல மொழிகளில் சேவைகளை வழங்குகின்றனர்.

## தொழிலாளர் ஆலோசகரின் அலுவலகம் (Office of the Worker Adviser)

தொழிலாளர் ஆலோசகரின் அலுவலகம் ஒன்டாரியோ தொழிலாளர் அமைச்சின் ஒரு சுயாதீன நிறுவனம் ஆகும். பணியிட காப்பீடு, தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு எதிரீட்டு பிரச்சினைகள் தொடர்பாக ஆலோசனை, கல்வி அல்லது பிரதிநிதித்துவம் தேவைப்படும் நபர்களுக்கு இவர்கள் இலவச மற்றும் இரகசிய சேவைகளை வழங்குகின்றனர். அவர்களின் சேவைகள் ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு மொழிகளில் மட்டுமே வழங்கப்படுகின்றன, எனவே உங்களிடம் ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழிப்புலமை இல்லையென்றால், இந்த அலுவலகத்தின் உதவியைக் கேட்கும்போது உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவி தேவைப்படலாம். பணியிட காப்பீட்டு சிக்கல்களுக்கு 1-800-435-8980 என்ற இலவச இலக்கத்திலும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு எதிரீட்டு விடயங்களுக்கு 1-855-659-7744 என்ற இலக்கத்திலும் அவர்களை நீங்கள் தொடர்புகொள்ள முடியும்.

## உங்கள் தொழிற்சங்கம்

தொழிலாளர் சங்கங்கள் தொழிலாளர்களுக்கு பணி நிலைமைகளை கூட்டாக பேச்சுவார்த்தை நடத்த அதிகாரம் அளிப்பதன் மூலம் அவர்களுக்கு உதவுகின்றன. உங்கள் பணியிடத்தில் ஏதேனும் சிக்கல் இருந்தால், அதை உங்கள் தொழில் வழங்குநர் கவனிக்கவில்லை என்றால், நீங்கள் உங்கள் தொழிற்சங்க பிரதிநிதியிடம் பேச வேண்டும். அவர்கள் உங்கள் முதலாளியுடன் பேச்சுவார்த்தை நடத்தி தேவையான மாற்றங்களைக் கொண்டு வரக்கூடும்.

## காவல்துறை

துன்புறுத்தல் அல்லது பாகுபடுத்தப்படல் என்பன உங்கள் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதாக நீங்கள் நம்பினால், காவல்துறையினரை அழையுங்கள். நீங்கள் ஒரு சாசனத்தின் படியான அகதி, பாதுகாக்கப்பட்ட நபர் அல்லது அகதி உரிமைகோருபவராக இருந்தால், காவல்துறையினரைத் தொடர்புகொள்வது உங்கள் குடியேற்ற நிலையை பாதிக்காது அல்லது உங்கள் நாடுகடத்தலுக்கு இது ஒரு காரணமாக இருக்காது. இருப்பினும், சிறந்த வழிகாட்டுதலுக்கும் உறுதியளிப்பதற்கும் நீங்கள் எப்போதும் சட்ட உதவியை நாடலாம்.



# வேலைவாய்ப்பு

## கனடாவில் தொழில் தகுதி

சாசனத்தின் படியான அனைத்து அகதிகளும் கனடாவில் பணிபுரிய தகுதியுடையவர்கள், அவர்களுக்கு தொழில் அனுமதி (work permit) தேவையில்லை.

நீங்கள் அகதி உரிமை கோருபவர் அல்லது பாதுகாக்கப்பட்ட நபராக இருந்தால், கனடாவில் சட்டப்பூர்வமாக வேலை செய்ய நீங்கள் பணி அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டும். குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை கனடா (Immigration, Refugees, and Citizenship Canada - IRCC)-விலிருந்து உங்களுக்கு தொழில் அனுமதி வழங்கப்பட்டதும், நீங்கள் ஒரு சமூக காப்பீட்டு எண்ணுக்கு (Social Insurance Number - SIN) விண்ணப்பிக்கலாம், இது கனடாவில் நீங்கள் சட்டப்பூர்வமாக வேலை செய்ய, வரி செலுத்த மற்றும் அரசாங்க சேவைகளைப் பயன்படுத்த உங்களை அனுமதிக்கும். அகதி உரிமை கோருபவர்கள் தொழில் அனுமதி அல்லது SIN-க்கு விண்ணப்பிக்க கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

தொழில் அனுமதிக்கு விண்ணப்பிக்க கனடா அரசாங்கத்தின் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள். முகப்பு பக்கத்தில் Immigration and citizenship → Work in Canada → Get a work permit → Work in Canada temporarily முறையே கிளிக் செய்யுங்கள்.

ஒரு அகதி உரிமை கோருபவராக, நீங்கள் தொழில் அனுமதிக்கு தகுதி பெற உங்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகள்:

- உங்கள் அகதி உரிமை கோரிக்கை தொடர்பில் கனடாவின் குடிவரவு மற்றும் அகதிகள் வாரியத்தின் (IRB) அகதிகள் பாதுகாப்பு பிரிவின் (RPD) தீர்மானத்திற்காக காத்திருப்பவராக இருக்க வேண்டும்.
- வேலை செய்யாமலோ அல்லது சமூக உதவி தேவைப்படாமலோ உங்கள் அடிப்படைத் தேவைகளுக்கு பணம் செலுத்த முடியாதிருத்தல்.

## அரசாங்கத்தால் உங்களுக்கு வருமான உதவி  கிடைக்கிறது

### ஒன்டாரியோ வொர்க்ஸ் (Ontario Works - OW)

ஒன்டாரியோ வொர்க்ஸ் (OW) என்பது சமுதாய மற்றும் சமூக சேவைகள் அமைச்சகத்தின் ஒரு திட்டமாகும். நிதித் தேவையுடன் ஒன்டாரியோவில் வசிக்கும் மக்களுக்கு இத்திட்டம் வருமான உதவியினை செய்கிறது. இது பொதுவாக “சமூக உதவி - social assistance” என்று குறிப்பிடப்படுகிறது.

இது இரண்டு வகையான உதவிகளை வழங்குகிறது:

1. நிதி உதவி, உள்ளடங்கலாக:
    a. உணவு, உடை, தங்குமிடம் போன்ற அடிப்படைத் தேவைகளின் செலவுகளுக்கான வருமான உதவி.
    b. வாடிக்கையாளர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் சுகாதார நலன்கள்.
2. வேலையைக் கண்டுபிடித்தல், வேலைக்கு தயார்ப்படுத்தல், வேலையைத் தக்கவைத்தல் போன்றவற்றில் தனிநபர்களுக்கு உதவிகளைச் செய்தல். இதில் பின்வருவன அடங்கும்:
    a. சுய விபரக்கோவை தயாரித்தல் மற்றும் நேர்காணல் திறன்களை கற்பிப்பதற்கான பட்டறைகள்.
    b. வேலை ஆலோசனை.
    c. குறிப்பிட்ட வேலைகளுக்கான பயிற்சி
    d. அடிப்படைக் கல்விக்கான அணுகல்.

### தகுதி வரம்பு

✓ நிதித் தேவையில் ஒன்டாரியோவில் வசிப்பவராக இருக்க வேண்டும் (உங்கள் அடிப்படை வாழ்க்கைச் செலவுகளை பூர்த்தி செய்ய போதுமான நிதி ஆதாரங்கள் இல்லாமல் இருத்தல்).
✓ மருத்துவ நிலை அல்லது ஒரு குடும்ப உறுப்பினரைப் பராமரிக்கும் பொறுப்பு போன்ற வேலை செய்வதிலிருந்து உங்களைத் தடுக்கும் ஏதேனும் காரணம் இருந்தால் அன்றி, ஒரு வேலையைக் கண்டுபிடித்து தக்கவைக்கும் முயற்சிக்கு தயாராக இருங்கள்.
✓ சாசனத்தின் படியான அகதிகளுக்கு:

- அரசாங்க உதவி பெறும் அகதிகள் (GAR) என்றால், மீள்குடியேற்ற உதவித் திட்டத்திற்கான (RAP) உங்கள் அனுசரணை/தகுதி காலாவதியான பின்னரே நீங்கள் தகுதியுடையவர்கள்.
- தனிப்பட்ட முறையில் நிதியளிக்கப்பட்ட அகதி (PSR) என்றால், உங்கள் அனுசரணை நிறுத்தப்பட்டால் அல்லது முடிவடைந்தால் மட்டுமே நீங்கள் தகுதியுடையவர்.

### ஒன்டாரியோ வொர்க்ஸிற்கு (OW) விண்ணப்பித்தல்

நீங்கள் விண்ணப்ப செயன்முறையை Ontario Application for Social Assistance, தளத்தில் ஒன்லைன் மூலம் அறிந்து கொள்ளலாம். அல்லது தொலைபேசி மூலமோ, நேரில் சென்றோ கேட்டறிந்துகொள்ளலாம்.  நீங்கள் செயன்முறையைத் தொடங்கியதும், ஒரு சந்திப்பைத் திட்டமிட Ontario Works-இன் பணியாளர் ஒருவர் உங்களைத் தொடர்புகொள்வார்.

### OW மூலம் உங்களுக்கு கூடுதல் உதவிகள் கிடைக்கின்றன

OW இல் இருப்பது சிட்டி ஒஃப் டொரன்டோவின் Investing in Neighbourhoods (IIN) திட்டத்தை அணுக உங்களை அனுமதிக்கிறது. இந்த திட்டம் OW பெறும் நபர்கள் இலாப நோக்கற்ற நிறுவனங்களில் ஊதியம் பெறும் வேலைகளைப் பெற அனுமதிக்கிறது.

வாரத்தில் 21 முதல் 30 மணித்தியாலங்களுக்கு,  தற்போதைய குறைந்தபட்ச ஊதியத்தை INN உங்களுக்கு வழங்கும், அதிகபட்சம்  52 வாரங்கள் (12 மாதங்கள்) நீடிக்கும்.

IIN திட்டம் மற்றும் அதற்கு எவ்வாறு விண்ணப்பிப்பது என்பது பற்றிய கூடுதல் தகவலுக்கு, சிட்டி ஒஃப் டொரன்டோவின் வலைத்தளத்தைப் பார்வையிடவும். அதில் Community & People→ Financial & Employment Support→ Employment Support→ Assistance for Job Seekers → Paid Jobs at Non-Profit Organizations முறையே கிளிக் செய்யவும்.

உங்கள் நகராட்சியில் வேலைவாய்ப்பு உதவித் திட்டங்கள் தொடர்பான தகவலுக்கு, உங்கள் நகராட்சியின் அதிகாரப்பூர்வ வலைத்தளத்தைப் பார்வையிடவும்.

## ஒன்டாரியோ இயலாமை உதவித் திட்டம் (Ontario Disability Support Program - ODSP)

ஒன்டாரியோ இயலாமை உதவித் திட்டம் (Ontario Disability Support Program - ODSP) என்பது ஒன்டாரியோ சமுதாய மற்றும் சமூக சேவைகள் அமைச்சகத்தின் ஒரு திட்டமாகும். இது ஒன்டாரியோவில் நிதித் தேவைகளுடனும் இயலாமையுடனும் (குறைபாட்டுடன்) வசிப்பவர்களுக்கு வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு உதவிகளை வழங்குகிறது.

### தகுதி வரம்பு

✓ குறைந்தது 18 வயது இருக்க வேண்டும்
✓ ஒன்டாரியோவில் வசிப்பவராக இருக்க வேண்டும்
✓ நிதி உதவி தேவைப்படுபவராக இருக்க வேண்டும்
✓ இயலாமை (குறைபாடு) என்பதற்கான திட்டத்தில் வரையறை பூர்த்தி செய்தல்:

- தொடர்ச்சியான அல்லது அடிக்கடியான ஒரு குறிப்பிடத்தக்க மன அல்லது உடல் குறைபாட்டைக் கொண்டிருத்தலுடன், அந்நிலை ஒரு வருடம் அல்லது அதற்கும் மேற்பட்ட காலம் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படல்
- நேரடியாக வேலை செய்வதற்கும், உங்களை கவனித்துக் கொள்வதற்கும் அல்லது சமூக வாழ்க்கையில் ஈடுபடுவதற்கும் மட்டுப்படுத்தப்பட்ட திறனை உங்கள் குறைபாடு ஏற்படுத்துதல்
- உங்கள் குறைபாடு, அது உங்களுக்குள்ள காலம், அதனால் ஏற்படும் இயலாமைகள் என்பன ஒரு அங்கீகரிக்கப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பு நிபுணரால் நிரூபிக்கப்பட்டிருத்தல்

## குடிவரவு நிலை, பணி அனுமதி அல்லது சமூக காப்பீட்டு எண் இல்லாமல் பணத்தாள்களைப் பெற்று வேலை செய்தல்

ஒன்டாரியோவில் குறைந்தபட்ச ஊதியம் ($ 14 / மணிநேரம்- அக்டோபர் 2020 நிலவரப்படி 14.25 / மணித்தியாலமாக அதிகரிக்கப்பட்டுள்ளது) உங்களுக்கு வழங்கப்படும் வரை பணத்தாள்களாக செலுத்தப்படுவது சட்டபூர்வமானது. ஒன்டாரியோவில் உள்ள மற்ற தொழிலாளர்களைப் போலவே அடிப்படை தொழிலாளர் மற்றும் மனித உரிமைச் சட்டங்களின் கீழ் உங்களுக்கும் அதே உரிமைகள் உள்ளன. உங்கள் உரிமைகள் மீறப்பட்டு, நீங்கள் துன்புறுத்தல் அல்லது பாகுபாட்டை எதிர்கொண்டால், நீங்கள் தொழிலாளர் அமைச்சில் உரிமை. கோரலாம். இதனால் உங்கள் குடியேற்ற நிலைக்கு ஆபத்து ஏற்படாது. நீங்கள் “தொழிலாளர் செயற்பாட்டு மையத்தை - Workers’ Action Centre” அணுகலாம், எல்லா அழைப்புகளும் இரகசியமானவை.

# சுகாதார பராமரிப்பு

## சுகாதார காப்பீட்டு செயன்முறைகளும் திட்டங்களும்

சுகாதார காப்பீட்டுத் திட்டங்களுக்கு வரி செலுத்துவோரின் பணத்தின் மூலம் நிதி வழங்கப்படுவதுடன், அவை ஊழியர்களின் சம்பளத்திலிருந்து தானாகக் கழிக்கப்படுகின்றன. ஒன்டாரியோவில் சுகாதார பராமரிப்பு உங்களின் குடியேற்ற நிலையைப் பொறுத்து, உங்கள் வருமான மட்டங்கள் அனுமதித்தால், கூடுதல் சேவைகளுடன் இரண்டு முக்கிய பொதுத் திட்டங்கள் / காப்பீட்டுத் திட்டங்களின் கீழ் வழங்கப்படலாம்.

**இடைக்கால மத்திய சுகாதார திட்டம் (Interim Federal Health Program - IFHP):** மீள்குடியேற்றப்பட்ட (சாசனத்தின் படியான) அகதிகள், பாதுகாக்கப்பட்ட நபர்கள், அகதி அந்தஸ்து கோருபவர்கள், மனிதக் கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் Canada Border Services Agency (CBSA) - இனால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஆகியோரை உள்ளடக்கி மத்திய அரசு செயற்படுத்தும் திட்டம் இதுவாகும்.

### பாதுகாப்புக்கான தகுதி நீளம்

**சாசனத்தின் படியான அகதி**

**அடிப்படை பாதுகாப்பு:** நீங்கள் மாகாண சுகாதார சேவைக்கு (Ontario Health Insurance Plan - OHIP) தகுதி பெற்றவுடன் நிறுத்தப்படும்

**துணை மற்றும் மருந்து பரிந்துரைக்கும் பாதுகாப்பு:** மீள்குடியேற்ற உதவித் திட்டத்தின் (Resettlement Assistance Program - RAP) வருமானத்தை நீங்கள் நம்பியிருக்கும் வரை தொடர்கிறது.

**பாதுகாக்கப்பட்ட நபர்**

**அடிப்படை, துணை மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மருந்து பாதுகாப்பு:** உங்கள் உரிமைகோரல் ஏற்றுக்கொள்ளப்பட்ட 90 நாட்களுக்கு அல்லது மாகாண சுகாதார சேவைக்கு (OHIP) நீங்கள் தகுதி பெறும் வரை வழங்கப்படுகிறது.

**அகதி அந்தஸ்து கோருபவர் / நிராகரிக்கப்பட்ட உரிமைகோரல்களுடன் அகதிகள்**

**அடிப்படை, துணை மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மருந்து பாதுகாப்பு:** அகதி உரிமைகோருபவர் கனடாவை விட்டு வெளியேறும் வரை (உரிமைகோரல் மறுக்கப்பட்டால்) அல்லது மாகாண அல்லது பிராந்திய சுகாதார காப்பீட்டிற்கு தகுதி பெறும் வரை தொடர்கிறது (உரிமைகோரல் ஏற்றுக்கொள்ளப்பட்டு பாதுகாக்கப்பட்ட நபராக மாறினால்).

**மனிதக் கடத்தலால் பாதிக்கப்பட்டவர்கள்**

**அடிப்படை, துணை மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மருந்து பாதுகாப்பு:** தற்காலிக வதிவிட அனுமதி காலாவதியாகும் வரை தொடர்கிறது.

**கைதிகள்**

**அடிப்படை, துணை மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மருந்து பாதுகாப்பு:** கனடா எல்லை சேவை நிறுவனத்தால் நபர் தடுத்து வைக்கப்பட்டுள்ள காலத்திற்கு தொடர்கிறது.

**ஒன்டாரியோ சுகாதார காப்பீட்டுத் திட்டம் (Ontario Health Insurance Plan - OHIP):** இது ஒன்டாரியோ மாகாண அரசாங்கத்தின் சுகாதார காப்பீட்டு திட்டம். கனேடிய குடிமக்கள், நிரந்தர குடியிருப்பாளர்கள், ஒன்டாரியோவில் உள்ள சாசனத்தின் படியான அகதிகள் ஆகியோரை இத்திட்டம் உள்ளடக்கியது. இது அடிப்படை பாதுகாப்பையும் சில கூடுதல் சேவைகளையும் வழங்குகிறது.

**Ontario Works (OW) சுகாதார நலன்கள்:** OW-வை பெறுபவர்களுக்கு OHIP தவிர, கூடுதல் சுகாதார பாதுகாப்பு கிடைக்கக்கூடும்.

**சுகாதார பராமரிப்பு சேவைகளுக்கான உதாரணங்கள்***

| திட்டம்/ நிகழ்ச்சியின் வகை / சேவைகளின் வகை | IFHP | OHIP | OW |
|---|---|---|---|
| **அடிப்படை உள்ளடக்கம்** | | | |
| மருத்துவ சேவைகள்:<br>• மருத்துவர் பார்வையிடல்<br>• நிலையான நோய்த்தடுப்பு மருந்துகள்<br>• மகப்பேறுக்கு முற்பட்ட மற்றும் மகப்பேறியல் பராமரிப்பு<br>  ○ கர்ப்ப, பேறுகால மருத்துவப் பணியியல் சேவைகள்<br>*ஒன்ராறியோவில் வசிக்கும் எவருக்கும் பேறுகால மருத்துவப் பணியியல் சேவைகள் இலவசமாகக் கிடைக்கின்றன*<br>• ஆய்வக சோதனைகள் மற்றும் எக்ஸ்ரேக்கள் | ✓ | ✓<br>• Ontario Breast Screening Program (OBSP) திட்டத்தின் கீழ் 50 முதல் 74 வயதான பெண்கள் அல்லது 30 முதல் 69 வயதானவர்கள் மற்றும் அதிக ஆபத்தில் இருப்பதாகக் கருதப்படுகின்றவர்களுக்கு (பரிந்துரை தேவை) மார்பக ஊடுகதிர்ப்பட சோதனை (Mammogram) மேற்கொள்ளப்படுகிறத.<br>• அல்ட்ரா சவுண்ட் | ✗ |
| மருத்துவமனை சேவைகள் | ✓<br>• அவசர அறை வருகைகள்<br>• மருத்துவமனையில் தங்கியிருத்தல்<br>• மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை பராமரிப்பு | ✓<br>• மருத்துவர் மற்றும் தாதியர் சேவைகள்<br>• ஆய்ந்தறிதல் சேவைகள் (எ.கா. இரத்த பரிசோதனைகள் மற்றும் எக்ஸ்கதிர்)<br>• உள்நோயாளர் மருந்துகள்<br>• நோயாளர்கள் வீட்டில் பாவிப்பதற்கான சில மருந்துகள்<br>• நீங்கள் மருத்துவமனையில் தங்க வேண்டியிருந்தால் தங்குமிடம் மற்றும் உணவு | ✗ |

# சுகாதார பராமரிப்பு

## ஊட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| பார்வை பராமரிப்பு | ✓<br>• ஒரு ஜோடி பரிந்துரைக்கப்பட்ட கண்ணாடிகள் (கண்ணாடிகள் மற்றும் / அல்லது லென்ஸ்கள் ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும்)<br>• வருடத்திற்கு ஒரு பார்வை சோதனை | ✓<br>• ஒவ்வொரு 12 மாதங்களுக்கும் ஒரு முக்கிய கண் பரிசோதனை (20 வயதுக்கு குறைவானவர்கள் மற்றும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு)<br>  ◦ நீங்கள் 20-65 வயதிற்கு இடைப்பட்டவராக இருந்தால், உங்கள் கண்களைப் பாதிக்கும் ஒரு குறிப்பிட்ட மருத்துவ நிலை இருந்தால், OHIP ஒவ்வொரு 12 மாதங்களுக்கும் அது தொடர்பான பின்தொடர்தல் சந்திப்புகளை (follow-up appointments) வழங்குகிறது | ✓<br>• பரிந்துரைக்கப்பட்ட கண்ணாடிகள்<br>• கண்ணாடி பழுதுபார்த்தல்கள் |
| பற்சுகாதாரம் | ✓<br>• அவசர பல் சோதனை<br>• பல் எக்ஸ்கதிர்ப் படம்<br>• பல் பிடுங்குதல்கள் | ✓<br>சிக்கலான பல் அறுவை சிகிச்சைகள்: எலும்பு முறிவு சரிசெய்தல், கட்டி அகற்றுதல், புனரமைப்பு அறுவை சிகிச்சைகள், மருத்துவ ரீதியாக தேவையான பல் அகற்றுதல் (OHIP-இன் முன்கூட்டிய ஒப்புதல் தேவை) | ✓<br>17 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட எந்தவொரு குழந்தையும் Healthy Smiles Ontario பல் பராமரிப்பு திட்டத்தில் தானாகவே சேர்க்கப்படுவர். தகுதிக்கான சான்றாக அவர்கள் ஒரு அட்டையைப் பெறுவர். |
| தாதியர் சேவை | ✓ | ✓ | ✗ |
| அவசர அம்பியுலன்ஸ் (நோயாளர் காவு வண்டி) | ✓ | ✓<br>தேவைப்பட்டால் அம்பியுலன்ஸ் சேவைக்கான முழு அல்லது பகுதி செலவு | ✗ |

| | | | |
|---|---|---|---|
| மருத்துவ சாதனங்கள் மற்றும் விநியோகங்கள்/ பொருட்கள் (எ.கா: நீரிழிவு அல்லது அறுவை சிகிச்சை பொருட்கள் மற்றும் காயக்கட்டு) | ✓ | ✗ | ✓<br>உங்களிடம் ஒரு மருந்துச்சீட்டு இருந்து, வேறு பாதுகாப்பு இல்லை என்றால், OW செலவுகளை ஈடுகட்டக்கூடும். |
| மனநல சுகாதார சேவைகள் | ✓<br>• மனநல மருத்துவர்கள், உளவியலாளர்கள், சிகிச்சையாளர்கள்<br>• மனநல மருத்துவமனைகளால் வழங்கப்படும் சேவைகள் | ✓<br>ஒரு மனநல மருத்துவரின் சேவைகளை மட்டுமே உள்ளடக்கியது | ✗ |
| உதவி சாதனங்கள், மருத்துவ பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | ✓<br>• உதாரணங்கள் பின்வருமாறு:<br>  ◦ இயக்க சாதனங்கள் (உ.ம். சக்கரம் பொருத்தப்பட்ட வாக்கர் (wheeled walkers) மற்றும் சக்கர நாற்காலிகள்)<br>  ◦ பார்வை கருவிகள்<br>  ◦ கேட்கும் கருவிகள்<br>  ◦ ஆர்த்தோடிக்ஸ் / புரோஸ்தடிக்ஸ் | ✗<br>சுகாதார அமைச்சின் Assistive Devices Program மற்றும் Long-Term Care என்பன இயலாமைக் காலத்தினைப் பொறுத்து சில உதவி சாதனங்களின் விலையில் 75% செலுத்துகின்றன. (6 அல்லது அதற்கும் மேற்பட்ட காலத்திற்கு சாதனம் தேவைப்பட்டால்). | ✓<br>உதவி சாதனங்கள் திட்டத்தின் (Assistive Devices Program) ஒரு பகுதியாகவும் 75% காப்பீடு இருந்தும் மீதமுள்ள 25% க்கு பணம் செலுத்த முடியாவிட்டால், OW செலவுகளை ஈடுகட்டக்கூடும். |
| பரிந்துரைக்கப்பட்ட மருந்து பாதுகாப்பு (Coverage) | ✓<br>• பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள் மற்றும் தயாரிப்புகள்<br>  ◦ பரிந்துரை Mifegymiso (கருக்கலைப்பைத் தூண்டும் மாத்திரை) | ✗<br>சில விதிவிலக்குகள் *<br>• பரிந்துரை Mifegymiso (கருக்கலைப்பைத் தூண்டும் மாத்திரை)<br>• 25 வயதிற்கு குறைந்தவர்களுக்கான பரிந்துரைக்கப்பட்ட பல மருந்துகளை (பிறப்பு கட்டுப்பாட்டு மாத்திரைகள் உட்பட) OHIP+ உள்ளடக்கியது.<br>• Ontario Drug Benefit Program (ODB) 65 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்களை உள்ளடக்கியது | ✓<br>• ஒன்டாரியோ மருந்து சூத்திரத்தில் (Ontario Drug Formulary) பட்டியலிடப்பட்ட மருந்துகள்<br>• அங்கீகரிக்கப்பட்ட சுகாதார நிபுணரால் பரிந்துரைக்கப்படுகிறது |

# சுகாதார பராமரிப்பு

குறிப்பு: இந்த சேவைகளின் பட்டியல் எந்த வகையிலும் முழுமையானது அல்ல. சுகாதார திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் வழங்கப்படும் சேவைகள், ஏற்பாடுகள் ஆகியவற்றுக்கு இடையில் உள்ள வேறுபாட்டை விளக்குவதற்கு மட்டுமே இது பொருந்தும். சேவைகளைப் பெற சுகாதார மற்றும் ஆலோசனை மையங்களின் பட்டியலுக்கு வளங்கள் பகுதியைப் பார்க்கவும்.

IFHP இன் கீழ் வழங்கப்படும் சேவைகளின் விரிவான பட்டியலுக்கு, Medavie Blue Cross இன் இணையத்தளத்தில் Basic Coverage Benefit Grid மற்றும் Medavie Blue Cross இன் Supplemental Coverage Benefit Grid இனை அணுகவும்.

OHIP இன் கீழ் வழங்கப்படும் சேவைகளின் விரிவான பட்டியலுக்கு, ஒன்டாரியோ அரசாங்கத்தின் வலைத்தளத்தை அணுகவும். முகப்பு பக்கத்தில் இருக்கும்போது, Health and Wellness→ பகுதியில் OHIP-இன் கீழ் உள்ள Learn What OHIP Covers என்பதை கிளிக் செய்யவும்.

OW இன் கீழ் வரக்கூடிய சேவைகளின் விரிவான பட்டியலுக்கு, ஒன்டாரியோ அரசாங்கத்தின் வலைத்தளத்தை அணுகவும். முகப்பு பக்கத்தில் இருக்கும்போது, Taxes and Benefits→ Ontario Works→ How Ontario Works Can Help You?→ Benefits → Health Benefits முறையே கிளிக் செய்யவும்.

*நீங்கள் OHIP இல் உள்வாங்கப்பட்டிருந்தால், ஒன்டாரியோவில் வசிப்பவராக இருந்தால், உங்கள் வருமானத்துடன் ஒப்பிடுகையில் அதிகக் கட்டணமுடைய மருந்துகள் பரிந்துரைக்கப்பட்டிருந்தால், நீங்கள் 25 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் 65 வயதிற்கு குறைவானவர்களாகவும் இருந்தாலும், நீங்கள் ட்ரில்லியம் மருந்து திட்டத்திற்கு (Trillium Drug Program) விண்ணப்பிக்க தகுதியுடையவராக இருக்கலாம் . திட்டத்தின் விரிவான விளக்கத்திற்கும், வகைப்படுத்தப்பட்டுள்ள தகுதி மற்றும் வழங்கப்படும் சேவைகளுக்கும் ஒன்டாரியோ அரசாங்கத்தின் வலைத்தளத்தை அணுகவும். முகப்பு பக்கத்தில் இருக்கும்போது, Health and wellness→ Drug coverage → Trillium Drug Program என கிளிக் செய்து உட்பிரவேசிக்கவும்.

## ஒரு நோயாளராக உங்கள் பொறுப்புகளை அறிந்து கொள்ளுங்கள்

- நீங்கள் IFHP-இல் உள்வாங்கப்பட்டிருந்தால், நீங்கள் சேவைகளைப் பெற்ற பிறகு கையெழுத்திடுவதற்கான உரிமைகோரல் படிவத்தை உங்கள் சுகாதார வழங்குநர் உங்களுக்கு வழங்கக்கூடும், நீங்கள் சேவையைப் பெற்றீர்கள் என்பதை நிரூபிக்க கையெழுத்திட வேண்டும், அப்போதுதான் சுகாதார வழங்குநருக்கு அரசாங்கம் கட்டணத்தை திருப்பிச் செலுத்த முடியும்.
- Medavie Blue Cross உங்கள் வீட்டிற்கு ஒரு உரிமைகோரல் படிவத்தை அனுப்பினால் (பொதுவாக ஒரு சுகாதார சேவையைப் பெற்ற ஒரு மாதத்திற்குள்), நீங்கள் அதில் கையெழுத்திட்டு அதை Medavie Blue Cross-இற்கு திருப்பி அனுப்ப வேண்டும். இது ஒரு ரசீது அல்ல.

## ஒரு நோயாளராக உங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளுங்கள்

(உங்கள் குடியேற்ற நிலையைப் பொருட்படுத்தாமல், ஒரு நோயாளராக உங்கள் உரிமைகள் சுகாதார ஒப்புதல் சட்டம், நீண்ட கால பராமரிப்பு சட்டம், மனநல சட்டம் போன்ற சட்டங்களால் பாதுகாக்கப்படுகின்றன)

- அனைத்து மருத்துவ நிலையங்களும் (walk-in clinics) உங்கள் IFHP ஆவணத்தை ஏற்க வேண்டும். நீங்கள் ஒரு நீண்டகால குடும்ப மருத்துவரைத் தேடுகிறீர்களானால், புதிய நோயாளிகளை உள்வாங்குகின்றார்களா என்பதை அறிந்து, நீங்கள் IFHP திட்டத்தை பெற்றுள்ளீர்கள் என்பதை அவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்.
- உங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட எந்தவொரு தனிப்பட்ட தகவலும் ஒரு நோயாளராக உங்களைக் கவனிக்கவும் சிகைசையளிக்கவும் மட்டுமே பயன்படுத்தப்படும்.
- உங்கள் தனிப்பட்ட சுகாதார தகவல்களை பெற்றுக்கொள்ள உங்களுக்கு உரிமை உள்ளது.

- உங்கள் தகவல் பாதுகாப்பு உரிமைகள் உங்களுக்கு விளக்கப்பட்டு, சிகிச்சையைத் தொடர முடிவு செய்த பின்னரே, உங்கள் தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்து தேவைப்படும் போது வெளிப்படுத்தப்படும்.
- நீங்கள் அனுமதி வழங்காவிட்டால், உங்களை நேரடியாக கவனித்துக்கொள்ளாத அல்லது சிகிச்சையளிக்காத எவருக்கும் உங்கள் தனிப்பட்ட தகவல்களை வழங்க முடியாது.
  - விதிவிலக்கு: உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் அங்கீகாரம் அரசாங்கத்திடம் இருந்தால், உங்கள் அனுமதி தேவையில்லை.
- மின்னணு முறையில் சேமிக்கப்படும் உங்கள் தனிப்பட்ட தகவல்கள் அனைத்தும் பொருத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகளால் பாதுகாக்கப்பட வேண்டும்.
- நோயின் தன்மை அதிகரிப்பு அல்லது இறப்புக்கான சாத்தியம் ஏற்பட்டாலும் கூட, சிகிச்சையை மறுக்க உங்களுக்கு உரிமை உண்டு.
- எந்தவொரு சுகாதார வழங்குநரும் உங்களுக்கு எந்தவொரு சிகிச்சையையும் அல்லது நடைமுறையையும் மேற்கொள்வதற்கு முன்பு நீங்கள் ஒப்புதல் வழங்க வேண்டும். உங்கள் சம்மதத்தை அளிப்பதற்கு முன், சிகிச்சை அல்லது நடைமுறையை நீங்கள் முழுமையாக புரிந்து கொள்ளவில்லை என்றால் நீங்கள் ஒரு மொழிபெயர்ப்பாளரைக் கோரலாம்.
  - *விதிவிலக்கு: அவசரகால சூழ்நிலைகளில் ஒப்புதல் தேவையில்லை*
- நீங்கள் பெறும் சிகிச்சையைப் பற்றி கேள்விகளைக் கேட்க உங்களுக்கு உரிமை உள்ளது.
- நோயறிதல் அல்லது சிகிச்சை திட்டம் குறித்து ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களைக் கேட்க உங்களுக்கு உரிமை உள்ளது.

## மனநல சுகாதார சேவைகளை அணுகுவது தொடர்பான உரிமைகள்

- மனநல ஆலோசனையின் போது நீங்கள் வழங்கும் எந்தவொரு தகவலும் (அதாவது உளவியல் சிகிச்சை அமர்வுகள், மனநல மருத்துவர் சந்திப்பு போன்றவை) இரகசியமானது.  வீட்டுவசதி, வேலைவாய்ப்பு, கல்வி போன்ற சமூக-பொருளாதார பகுதிகளில் உங்களுக்கு எதிராக பாகுபாடு காட்ட அவற்றைப் பயன்படுத்தப்பட முடியாது. உங்கள் மனநல சுகாதார சேவை வழங்குநர்களைத் தவிர வேறு எவருக்கும் அந்த கோப்புகளைப் பெறும் அனுமதி இல்லை. நீங்கள் வெளிப்படுத்தும் எதையும் உங்கள் மனைவி, குடும்ப உறுப்பினர்கள் அல்லது சமூக உறுப்பினர்களுக்கு சொல்ல உங்கள் சிகிச்சையாளருக்கு அனுமதி இல்லை.
  - விதிவிலக்கு: சிகிச்சையாளர்கள் இரகசியத்தன்மையை உடைக்க வேண்டியிருக்கும் சந்தர்ப்பங்கள்:  1) நீங்கள் உங்களுக்கோ மற்றவர்களுக்கோ, குறிப்பாக குழந்தைகள் அல்லது மூத்தவர்களுக்கு ஆபத்தாக இருப்பீர்கள் என்று அவர்கள் நினைத்தால், 2) சேவைகளுக்கு திருப்பிச் செலுத்துவதற்காக நோயறிதலைப் பகிர்ந்து கொள்ள, 3) மத்திய அல்லது மாகாண அதிகாரிகள் கேட்டால்
- உங்கள் மனநிலை நிலையற்றதாக இருந்தால், உங்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ அச்சுறுத்தலாக இருந்தால் நீங்கள் மருத்துவமனையில் தங்க வேண்டிய கட்டாயத்தில் இருக்க முடியும், ஆனால் சிகிச்சையை மறுக்க உங்களுக்கு இன்னும் உரிமை உண்டு.
  - விதிவிலக்கு: உங்களுக்கான மருத்துவ முடிவுகளை உங்களால் எடுக்க இயலாது என்று கருதினால், உங்களுக்கு சிகிச்சை அவசியப்பட்டால், சிகிச்சை அளிக்க உயர் நீதிமன்றம் மருத்துவமனைக்கு அனுமதி வழங்கலாம்.

## இனப்பெருக்க உரிமைகள்

- இனப்பெருக்க சுயநிர்ணய உரிமை உங்களுக்கு உள்ளது. இனப்பெருக்க சுயநிர்ணயமானது. இனப்பெருக்கத்திற்கான பாலியல் செயற்பாட்டில் எப்போது ஈடுபட விரும்புகிறீர்கள் என்பதை தீர்மானிக்கும் திறன் ஆகும்.
- உங்கள் குடும்பத்தின் தன்மை மற்றும் அளவை தீர்மானிக்க உங்களுக்கு உரிமை உள்ளது.
- பாதுகாப்பான கருக்கலைப்பு சேவைகளை அணுக உங்களுக்கு உரிமை உள்ளது.
- உங்கள் பாலியல் நோக்குநிலை, பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் தொடர்பான விடயங்களில் உங்கள் கட்டுப்பாட்டினைக் கொண்டிருக்கவும் முடிவெடுக்கவும் உங்களுக்கு உரிமை உண்டு. இது பாகுபாடுகளிலிருந்து விடுவிக்கும் அடிப்படையிலானது.

# கல்வி

## கல்விச் சட்டம்

கல்விச் சட்டத்தின் கீழ், 6 முதல் 18 வயதிற்குட்பட்ட எவரும் பாடசாலைக்கு செல்ல வேண்டும் என்பதுடன், அவர்களின் பெற்றோரின் குடிவரவு நிலை, வேலைவாய்ப்பு நிலை, சுகாதார காப்பீடு போன்றவற்றை பொருட்படுத்தாமல், எந்தவொரு கல்விக் கட்டணமும் இன்றி, பொதுப் பாடசாலைக்கு செல்ல உரிமை பெற்றிருக்க வேண்டும்.

ஒன்டாரியோவில் உள்ள அனைத்து பொதுக் கல்வியையும், குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சட்டத்தையும் நிர்வகிக்கும் இந்த சட்ட ஏற்பாட்டின்படி, நீங்கள் ஒரு சாசனத்தின் படியான அகதியாகவோ பாதுகாக்கப்பட்ட நபராகவோ அகதி உரிமை கோருபவராகவோ இருந்தால், பொதுப் பாடசாலைகள் உங்கள் குழந்தையை முன்பள்ளி அல்லது உயர்நிலைப் பாடசாலையில் படிக்க அனுமதி மறுக்க முடியாது. உங்கள் பிள்ளையை பாடசாலையில் சேர்ப்பதில் நீங்கள் சிக்கல்களை எதிர்கொண்டால், சமூக முகவர் நிலையங்கள் மற்றும் சட்ட நிலையங்கள் உங்களுக்கு உதவக்கூடும்.

## உங்கள் குழந்தையை பாடசாலையில் சேர்ப்பதற்கு தேவையான ஆவணங்கள்

- வயதிற்கு சான்றாக குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் அல்லது கடவுச்சீட்டு
- உங்கள் வங்கி அறிக்கை, குத்தகை அல்லது வாடகை ஒப்பந்தம் அல்லது உங்கள் முகவரியை நிரூபிக்கும் ஏதேனுமொரு ஆவணம்
- உங்கள் பிள்ளை உங்களுடன் வசிக்கவில்லை, ஆனால் 18 வயதிற்குட்பட்டவராக இருந்தால், காப்பாளர்நிலைக்கான சான்று
- மாணவரின் குடிவரவு நிலையைக் காட்டும் ஆவணம். இது கீழே உள்ள ஏதேனும் ஒன்றாகும்:
  - பிறப்புச் சான்றிதழ்
  - கடவுச்சீட்டு
  - நிரந்தர வதிவிட அட்டை
  - நிரந்தர வதிவிட உறுதிப்படுத்தல் (IMM 5292) அல்லது நுழைவுப் பதிவு (Record of Landing - IMM 1000)
- நோய்த்தடுப்பு பதிவு - குழந்தை நோய்த்தடுப்புக்கு உட்பட்டது என்பதற்கான சான்று
  - அகதிகள் பாதுகாப்பு உரிமைகோரல் ஆவணம் (RPCD)

*குழந்தையின் குடியேற்ற நிலை அவர்களை பாடசாலையில் சேர்ப்பதில் தாக்கம் செலுத்தக் கூடாது.*

## பாடசாலை சூழல்

- வித்தியாசமான கலாசாரம், கல்வி, மொழி ஆகியவற்றுடன் ஒரு புதிய நாட்டில் பாடசாலையில் சேர்வது உங்கள் குழந்தைகளுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தும். அதனால் பின்வரும் விடயங்கள் அவர்களுக்கு போராட்டமாக அமையலாம்:
  - கல்வி உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்தல்.
  - புதிய பாடசாலை முறைமையுடனும் சூழலுடனும் பொருந்தி, சரிப்படுத்திக்கொள்தல்
  - நண்பர்களை உருவாக்குதல்
  - கொடுமைப்படுத்துதல், இணையவழி துன்புறுத்தல்கள்

### போராடும் உங்கள் பிள்ளைக்கு ஆதரவு தேவைப்பட்டால் என்ன செய்வது?

- உங்கள் குழந்தையின் முன்னேற்றம், வகுப்பில் காண்பிக்கும் செயல்திறன் குறித்து உங்கள் குழந்தையின் ஆசிரியருடன் பேசலாம். ஆசிரியரின் கற்பித்தல் நடைமுறைகள், வீட்டுப்பாட எதிர்பார்ப்புகளைப் பற்றியும் கேட்க உங்களுக்கு அனுமதி உண்டு.
- பாடசாலை ஆண்டில் திட்டமிடப்படும் பெற்றோர்-ஆசிரியர் சந்திப்பின் போது, ஆசிரியர்களை நீங்கள் சந்திக்கலாம்.
- உங்கள் குழந்தைக்கு பாடசாலை நடைமுறையுடன் பொருந்திப் போவதில் பிரச்சினை இருந்தால், பாடசாலையில் அதற்கான வழிகாட்டல்களை அல்லது ஆலோசனைகளை வழங்கும் பணியாளரை (தீர்வுத் தொழிலாளர்கள்) நீங்கள் சந்திக்க முடியும். எல்லா பாடசாலைகளிலும் அவ்வாறான பணியாளர்கள் இல்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆனால், அனைத்து பாடசாலைகளிலும் வழிகாட்டுதல் ஆலோசகர்கள் இருக்க வேண்டும்.

### என் பிள்ளை துன்புறுத்தப்பட்டால் நான் என்ன செய்ய முடியும்?

#### கொடுமைப்படுத்துதல் என்றால் என்ன?

மற்றொருவருக்கு தீங்கு, பயம், மன உளைச்சலை ஏற்படுத்தும் நோக்கிலான தாக்கும் நடத்தை. துன்புறுத்தலானது உடல், உளவியல், சமூக மற்றும்/அல்லது கல்வியியல் செயற்பாட்டில் தீங்கு விளைவிக்கக் கூடும்.

#### இணையவழி துன்புறுத்தல் என்றால் என்ன?

சங்கடம், மன வேதனை, அச்சுறுத்தல் அல்லது துன்புறுத்தல் கொடுக்கும் நோக்கில், டிஜிட்டல் கருவிகளுடன் (அதாவது கணினி, மடிக்கணினி, செல்பேசி ஆகியவை) தாக்குதல் நடத்தைகளில் ஈடுபடுவது.

உங்கள் குடியேற்ற நிலையைப் பொருட்படுத்தாமல், உங்கள் பிள்ளை துன்புறுத்தப்படுதலை அல்லது இணையவழி துன்புறுத்தலை அனுபவித்திருந்தால், பெற்றோராக உங்கள் உரிமைகள்:

- துன்புறுத்துதல் மற்றும் இணையவழி துன்புறுத்தல் நடவடிக்கைகள் குறித்து பாடசாலை முதல்வர் விசாரிப்பதை உறுதி செய்வதற்கான உரிமை.
- உங்கள் பிள்ளைக்கு வழங்கப்படும் உதவிகளைப் பற்றி விவாதிக்க பாடசாலை முதல்வரை சந்திக்கும் உரிமை, இதனால் அவர்கள் பாடசாலையில் பாதுகாப்பாக உணர்வார்கள்.

*சம்பவம் குறித்து விசாரித்து, துன்புறுத்தலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும், உங்கள் பிள்ளையினதும் துன்புறுத்தலைத் தொடங்கிய மற்ற பிள்ளையினதும் அந்தரங்கத்தை பாதுகாப்பதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு, பாடசாலை உங்களுடன் இணைந்து செயற்பட வேண்டும்.*

துன்புறுத்தலை முடிவிற்குக் கொண்டுவருவதற்கு பாடசாலை சரியான நடவடிக்கை எடுக்காவிட்டால், உங்கள் குழந்தையின் பாடசாலைக்கு பொறுப்பான இணை கண்காணிப்பாளரை அல்லது மாவட்ட கண்காணிப்பாளரை அணுகலாம். அவர்களின் தொடர்புகளுக்கு, உங்கள் பாடசாலை மாவட்ட வலைத்தளத்தை அணுகவும்.

குழந்தையின் பாதுகாப்பு ஆபத்தில் இருந்தால் - உதாரணத்திற்கு, உடல் ரீதியாக கடுமையாக தாக்கப்பட்டால், காவல்துறையை அழைக்கவும். நீங்கள் ஒரு சாசனத்தின் படியான அகதி, பாதுகாக்கப்பட்ட நபர் அல்லது அகதி உரிமை கோருபவராக இருந்தால், இது உங்கள் குடியேற்ற நிலையை பாதிக்காது.

## இரண்டாம் நிலைக்குப் பிந்தைய கல்வி

கனடாவில் பல்கலைக்கழகம், கல்லூரி அல்லது கல்வி நிறுவனம் எதுவாக இருந்தாலும், இரண்டாம் நிலைக்குப் பிந்தைய கல்வியை அணுகும்போது குடிவரவு நிலை முக்கியமானது. உங்கள் தகுதியையும் பிரத்தியேக வகுப்புகளுக்காக உங்களிடம் கட்டணங்கள் கேட்கப்படுவதையும் இது தீர்மானிக்கிறது.

ஒரு சாசனத்தின் படியான அகதி அல்லது பாதுகாக்கப்பட்ட நபர் என்ற வகையில், நீங்கள் இரண்டாம் நிலைக்குப் பிந்தைய கல்விக்கு விண்ணப்பிக்கவும், உள்நாட்டு கல்விக் கட்டணத்தை (Domestic tuition fees) செலுத்தவும் அனுமதிக்கப்படுகிறீர்கள். நீங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டீர்களா இல்லையா என்பது உங்கள் கல்வி செயல்திறன் மற்றும் சேர்க்கை விதிகளைப் பூர்த்தி செய்யும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

அகதி உரிமை கோரும் ஒருவராக, நீங்கள் கல்வி அனுமதிக்கு விண்ணப்பிக்காமல், அனுமதியைப் பெறாமல் இரண்டாம் நிலைக்குப் பிந்தைய கல்வியில் சேர முடியாது. உங்களுக்கு கல்வி அனுமதி வழங்கப்பட வேண்டுமானால், நீங்கள் கனடாவில் இரண்டாம் நிலைக்கு பிந்தைய கல்வி வழங்கும் ஒரு நிறுவனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். நீங்கள் ஒரு சர்வதேச மாணவராக கருதப்படுவீர்கள் என்பதுடன், சர்வதேச கல்விக் கட்டணத்தை செலுத்த வேண்டும்.

# கல்வி

### கனடிய கனவு காண்பவர்கள் (The Canadian Dreamers)
அகதி உரிமை கோருபவர்களும் குடியேற்ற அந்தஸ்து இல்லாதவர்களும் அவர்களின் உள்நாட்டுக் கட்டணத்தை மட்டுமே செலுத்த வேண்டும் என வாதிடுவதன் மூலம் அவர்களின் கல்விக் கட்டணத்தை செலுத்துவதில் உதவி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நீங்கள் நிச்சயமற்ற குடிவரவு அந்தஸ்துள்ள மாணவராக இருந்தால், யோர்க் பல்கலைக்கழகத்தில் "நிலையற்ற குடிவரவு நிலைத் திட்டத்துடன் மாணவர்களுக்கான அணுகலுக்கு (ACCESS FOR STUDENTS WITH PRECARIOUS IMMIGRATION STATUS PROGRAM)" விண்ணப்பிப்பதன் மூலம் உங்கள் அகதிக் கோரிக்கையின் தீர்விற்காகக் காத்திருக்கும் போது நீங்கள் கல்வியை அணுகலாம். இந்த திட்டத்தைப் பற்றிய கூடுதல் தகவலுக்கும் தகுதிக்கும் தயவுசெய்து யோர்க் பல்கலைக்கழக வலைத்தளத்திற்குச் செல்லவும்.

## அரச நிதி உதவி
நீங்கள் உள்நாட்டு கட்டணங்களை மட்டுமே செலுத்த வேண்டியிருந்தாலும், அவற்றை செலுத்த முடியாவிட்டாலும், ஒன்டாரியோவில் உங்கள் கல்விக் கட்டணத்தை செலுத்துவதற்கான உதவிகள் வழங்கப்படுகின்றன.

### மாணவர் கடன்கள்
சாசனத்தின் படியான அகதி மாணவர்களும் கனடாவில் உள்ள அனைத்து பாதுகாக்கப்பட்ட நபர்களும் கனேடிய மாணவர் கடன்களுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். கடனாகப் பெறும் தொகை, பட்டம் பெற்றதன் பின்னர் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கடன்கள் அகதி உரிமை கோருபவர்களுக்கு பொருந்தாது. அகதிகள் உரிமை கோருபவர்கள் வெளி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கலாம்.

*குறிப்பு: பெரும்பாலான கடன்கள் பட்டப்படிப்பு முடிந்த உடனேயே வட்டி வீதம் சேர்க்கப்படுபவையாக அமையும்.*

### ஒன்டாரியோ மாணவர் உதவித் திட்டம் (Ontario Student Assistance Program - OSAP)
ஒன்டாரியோ மாணவர் உதவித் திட்டம் (OSAP) என்பது ஒன்டாரியோவில் வசிக்கும் மாணவர்களுக்கு அவர்களின் கல்லூரி அல்லது பல்கலைக்கழக கல்விக்கு நிதியளித்து உதவும் ஒரு திட்டமாகும். இது மானியங்கள் அடிப்படையில் (நீங்கள் பணத்தை திருப்பிச் செலுத்தத் தேவையில்லை) அல்லது மாணவர் கடன் அடிப்படையில் இருக்கலாம் (நீங்கள் பட்டம் பெறும்போது அரசாங்கத்திற்கு பணத்தை திருப்பிச் செலுத்த வேண்டும்). OSAP-க்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் மானியத்தை மட்டுமே தெரிவு செய்துவிட்டு கடன் சலுகையை நிராகரிக்க முடியும்.

**OSAP-ஐப் பெறுவதற்கான தகுதி**
✓ ஒன்டாரியோவில் வசித்தல்
✓ கனேடிய குடியுரிமை பெற்றவர், நிரந்தர வதிவாளர், சாசனத்தின் படியான அகதி அல்லது பாதுகாக்கப்பட்ட நபராக இருத்தல்
✓ உங்கள் பட்டத்திற்கான கல்வி முன்னேற்றத் தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
✓ அங்கீகரிக்கப்பட்ட இரண்டாம் நிலைக்குப் பிந்தைய கல்வி நிறுவனத்தில் சேர்ந்திருத்தல்
✓ ஒருபோதும் கடனை திருப்பிச் செலுத்த முடியாது/ நொடிந்து போகாதிருத்தல், கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறாமல் இருத்தல் அல்லது முந்தைய மாணவர் கடனை திருப்பிச் செலுத்தத் தவறாமல் இருத்தல்
✓ சமூக உதவியில் இருக்கக்கூடாது (Ontario Works உதவியினை பெறுவது)

- நீங்கள் OSAP அல்லது OW இல் மாத்திரம் இருக்கலாம். எந்த திட்டம் உங்களுக்கு கூடுதல் உதவியை வழங்குகிறதோ அதில் இருக்கலாம். நீங்கள் திருமணமானவர் அல்லது ஒற்றைத் தாயாக இருந்தால், உங்கள் OW இல் கூடுதல் தொகையைச் சேர்க்க நீங்கள் தகுதிபெறலாம்.
- நினைவூட்டல்: நீங்கள் OSAP ஐப் பெறுவது உங்கள் குடும்ப உறுப்பினர்களை எந்த வகையிலும் பாதிக்காது. OW பெறுவதற்கான அவர்களின் தகுதியையும் பாதிக்காது.

**OSAP-இற்கு விண்ணப்பிப்பதற்கான படிமுறைகள்**
படிமுறை 1: தேவையான ஆவணங்களையும் தகவல்களையும் சேகரிக்கவும்
- திட்டம் மற்றும் பாடசாலை தகவல்
- உங்கள் சமூக காப்பீட்டு எண் (SIN) மற்றும் உங்கள் பெற்றோர் அல்லது மனைவியின் சமூக காப்பீட்டு எண்
- உங்கள் வருமான வரி தகவல் மற்றும் உங்கள் பெற்றோர் அல்லது மனைவியின் வரி தகவல்
- நீங்கள் பாதுகாக்கப்பட்ட நபராக இருந்தால், பின்வருவனவற்றில் ஒன்றின் செல்லுபடியாகும் நகல்: நிலை சரிபார்ப்பு, குடிவரவு மற்றும் அகதிகள் வாரியத்திலிருந்து வழங்கப்பட்ட தீர்ப்பின் அறிவிப்பு அல்லது அகதிகள் பயண ஆவணம்

படிமுறை 2: உங்கள் SIN ஐப் பயன்படுத்தி OSAP கணக்கிற்கு இணையத்தில் பதிவு செய்யுங்கள். அதைச் செய்ய, ஒன்டாரியோ அரசாங்க வலைத்தளத்திற்குச் சென்று, Education and training→ Postsecondary education→ Student aid→ OSAP முறையே சொடுக்கி (கிளிக் செய்து) உட்பிரவேசியுங்கள். OSAP-இற்கு விண்ணப்பிக்க புதிய பயனர் பதிவு ஒப்பந்தத்தைப் (New User Registration Agreement) படியுங்கள், பின்னர் உங்கள் கணக்கை உருவாக்கத் தொடங்குங்கள். நீங்கள் ஒரு OSAP அணுகல் எண்ணைப் பெறுவீர்கள். எதிர்காலத்தில் உங்கள் கணக்கில் உள்நுழைய உங்கள் கடவுச்சொல்லுடன் இந்த எண் பயன்படுத்தப்படும்.

படிமுறை 3: *OSAP*-இற்கு விண்ணப்பிக்கவும், உங்கள் விண்ணப்பத்தை காலக்கெடுவிற்கு முன் சமர்ப்பிக்கவும்.
- உங்கல் கல்விக்காலம் முடிவதற்கு 60 நாட்களுக்கு முன்பை விட தாமதமாகாமல் இருக்க வேண்டும்.
- கல்வி ஆண்டு துவங்குவதற்கு முன் ஜூன் 30-க்குள் விண்ணப்பிக்கவும், இதன்மூலம் கால வரையறை துவங்குவதற்கு முன்பே உங்களுக்கு நிதி கிடைக்கும்.

படிமுறை 4: நீங்கள் பெறும் OSAP இன் மதிப்பிடப்பட்ட அளவை மதிப்பாய்வு செய்யவும். ஏதேனும் செலுத்த வேண்டி இருந்தால், நீங்கள் இன்னும் எவ்வளவு செலுத்த வேண்டும் என்பதை தீர்மானிக்க இதைப் பயன்படுத்தவும்.

படிமுறை 5: தேவையான அறிவிப்பு படிவங்கள் அல்லது ஆவணங்களில் கையொப்பமிட்டு சமர்ப்பிக்கவும். உங்கள் படிப்பிற்கு பிறகு, அதிகபட்சம் 40 நாட்களுக்குப் பிறகு அவை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

படிமுறை 6: உங்கள் நிதி தொடர்பான எந்தவொரு அறிவிப்பையும் பெற்றுக்கொள்ள, நீங்கள் புதுப்பித்த நிலையில் இருப்பதை உறுதிப்படுத்த உங்கள் OSAP கணக்கை அவ்வப்போது சரிபார்க்கவும்

***OSAP-க்கு விண்ணப்பிக்க உங்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால், உங்கள் கல்வி நிறுவனத்தின் நிதி உதவி அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் அல்லது கருவித்தொகுப்பின் முடிவில் வளங்கள் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் முகவரகங்களில் ஒன்றில் ஒரு தீர்வு வழங்குநரின் (settlement worker) உதவியைப் பெறலாம். ***

**OSAP-ஐ திருப்பிச் செலுத்துதல்**
தேசிய மாணவர் கடன் சேவை மையத்திற்கு (National Student Loans Service Centre - NSLSC)பணம் செலுத்துவதன் மூலம் உங்கள் படிப்பு காலம் முடிந்த 6 மாதங்களுக்குப் பிறகு நீங்கள் OSAP கடனைத் திருப்பிச் செலுத்தத் தொடங்க வேண்டும். அந்த 6 மாதங்கள் உங்களுக்கான சலுகைக் காலம். அந்த 6 மாதங்களுக்குள், உங்கள் மொத்த கொடுப்பனவுகளின் எண்ணிக்கை, உங்கள் முதல் கட்டண திகதி மற்றும் உங்கள் கொடுப்பனவுகளில் வசூலிக்கப்படும் வட்டி விகிதங்களை எவ்வாறு கணக்கிடலாம் என்பது பற்றிய தகவல்களைக் கொண்ட ஒரு தொகுப்பை தேசிய மாணவர் கடன் சேவை மையத்திலிருந்து பெறுவீர்கள். நீங்கள் செப்டம்பர் 1, 2019 அன்று அல்லது அதற்குப் பிறகு பட்டம் பெற்றிருந்தால், உங்கள் சலுகைக் காலத்தில் கூட, ஒன்டாரியோவின் கடனுக்கு வட்டி வசூலிக்கப்படும். நீங்கள் திருப்பிச் செலுத்த வேண்டிய மொத்த கடன் தொகையில் இந்த தொகை சேர்க்கப்படும்.

**மாணவர் மானியங்கள்**
OSAP க்கு விண்ணப்பித்த பிறகு, உங்களை தானாகவே கவனத்திற்கொள்ளக்கூடிய புலமைப்பரிசில்கள் (scholarships) உள்ளன அல்லது உங்கள் இரண்டாம் நிலைக்குப் பிந்தைய கல்விக்கு கூடுதல் நிதியுதவியைப் பெற விண்ணப்பிக்க வேண்டும். நீங்கள் விண்ணப்பிக்கக்கூடிய உதவித்தொகை பட்டியலுக்கு, வளங்கள் பிரிவைப் பார்க்கவும்

# கல்வி

## இரண்டாம் நிலை மற்றும் பிந்தைய இரண்டாம் நிலை பட்டத்திற்கான அங்கீகாரம்

இரண்டாம் நிலை கல்வி அல்லது வேலை வாய்ப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்கு முன், உங்கள் சர்வதேச கல்வி சான்றிதழ்கள் மற்றும் பட்டயங்கள் (diplomas) கனேடிய கல்வித் தரங்களின்படி மதிப்பீடு செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இது உயர் மட்ட கல்வியை அணுக உங்களுக்கு உதவும் என்பதுடன் சிறந்த வேலை வாய்ப்புகளைப் பெறவும் வழி ஏற்படுத்தும்.

### ஆரம்ப அல்லது இரண்டாம் நிலைப் பாடசாலைக்கு

பொதுப் பாடசாலைகள் குழந்தையின் முந்தைய கல்வியை சுயாதீனமாக மதிப்பிடுகின்றன.

### கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு

ஒவ்வொரு கல்வி நிறுவனமும் சர்வதேச நற்சான்றிதழ்களை மதிப்பிடுவதற்கு அதன் சொந்த முறையைக் கையாள்கிறது. சிலர் முந்தைய கல்வியை உள்ளக மதிப்பீடு செய்கிறார்கள், மற்றவர்கள் வெளிப்புற மதிப்பீட்டு சேவைகளிலிருந்து மதிப்பீட்டு அறிக்கைகளைக் கேட்கக்கூடும்.

### கனடாவில் மதிப்பீடு மற்றும் அங்கீகார சேவைகள்

- **டொராண்டோ பல்கலைக்கழகத்தில் ஒப்புநோக்கு கல்வி சேவை (Comparative Education Service-CES):** இந்த சேவை உங்கள் சர்வதேச கல்விச் சான்றுகளை மதிப்பீடு செய்கிறது. உங்கள் கல்வி நிலைப்பாடுகளையும் பின்னணியையும் நன்கு புரிந்துகொள்ள, உங்கள் கல்விச் சான்றுகளின் கனேடிய சமநிலையுடனான மதிப்பீட்டு கடிதங்களை CES கனேடிய தொழில் வழங்குநர்கள், கல்வி நிறுவனங்கள், குடிவரவு அதிகாரிகள் மற்றும் தொழில்முறை உரிமம் வழங்கும் அமைப்புகளுக்கு வழங்குகிறது.
- **கனடாவின் சர்வதேச நற்சான்றிதழ் மதிப்பீட்டு சேவை (International Credentials Assessment Service-ICAS):** இந்த சேவை உங்கள் சர்வதேச நற்சான்றிதழ்களை, இரண்டாம் நிலையா அல்லது இரண்டாம் நிலைக்கு பிந்தைய பாடசாலைக் கல்வியா அல்லது தொழில்நுட்பத் தகுதிகளா என பார்த்து, கனடாவில் அதே மட்டத்திலான கல்வியுடன் எவ்வாறு ஒப்பிடுவது என்பதை தீர்மானிக்கிறது.
- **உலக கல்வி சேவைகள் (World Education Services-WES):** இந்த சேவை கனடாவில் அவர்கள் எந்த மட்டத்தில் உள்ளார்கள் என்பதை தீர்மானிக்க அவர்கள் சர்வதேச அளவில் நிறைவு செய்த பாடசாலை பட்டயங்களையும் (diplomas) பட்டங்களையும் (Degrees) மதிப்பீடு செய்கிறது. WES ஆல் தயாரிக்கப்படும் அறிக்கைகளை வேலைவாய்ப்பு, கல்வி, உரிமம், குடியேற்றம் மற்றும் / அல்லது பயிற்சிப் பருவ காலத்தில் பயன்படுத்தலாம்.
  - WES க்கு விண்ணப்பிக்கும்போது நினைவில் கொள்ள வேண்டிய உதவிக்குறிப்புகள்:
    - நீங்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து ஒரு கணக்கை உருவாக்கிய பிறகு, உங்களுக்கு ஒரு குறிப்பு எண் வழங்கப்படும், இந்த எண்ணைச் சேமிக்கவும். இந்த எண் நீங்கள் WES-க்கு அனுப்பும் அனைத்து ஆவணங்களிலும் இருக்க வேண்டும்.
    - உங்கள் எழுத்துப்பூர்வ ஆவணத்தை நேரடியாக WES-க்கு அனுப்புமாறு உங்கள் கல்வி நிறுவனத்திடம் கேளுங்கள். அவர்கள் அதை உங்களுக்கு அனுப்பினால், அது சீல் வைக்கப்பட்ட உறை ஒன்றில் இருக்க வேண்டும். சீல் (முத்திரை) உடைக்கப்பட்டிருந்தால், WES ஆவணத்தை ஏற்காது.
    - எந்த ஆவணங்களையும் WES திருப்பித் தராது என்பதால், அனுப்பப்பட்ட அனைத்து ஆவணங்களும் (உத்தியோகபூர்வமான எழுத்துப்பூர்வ ஆவணத்தைத் தவிர) பிரதிகள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

- ஆவணங்கள் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும் அல்லது ஆங்கிலம் அல்லது பிரேஞ்சு சான்றளிக்கப்பட்ட மொழிபெயர்ப்புகளுடன் இணைக்கப்பட வேண்டும், அவை ஆவணத்தை தயாரித்த அதிகாரப்பூர்வ மொழிபெயர்ப்பாளரால் கையொப்பமிடப்பட்டு முத்திரையிடப்பட்டிருக்க வேண்டும்.

***WES-க்கு விண்ணப்பிக்கும்போது உங்களுக்கு ஏதேனும் வழிகாட்டுதல் அல்லது உதவி தேவைப்பட்டால், நீங்கள் எந்தவொரு தீர்வு வழங்கும் அமைப்பையும் அல்லது சமூக மையத்தையும் அணுகலாம். ஒரு தீர்வு வழங்குநர் உங்களுக்கு உதவ முடியும். தீர்வு வழங்கும் அமைப்புகளின் பட்டியலுக்கு வளங்கள் பிரிவைப் பார்க்கவும்.***


## இணைப்புத் திட்டங்கள்

ஒன்டாரியோவில் உங்கள் தொழிற்துறையில் அல்லது வணிகத்துறையில் பணியாற்றுவதற்கான கனேடிய அனுமதிப்பத்திரத்தையோ சான்றிதழையோ பெறுவதற்குத் தேவையான உதவிகளுக்கான அணுகலை வழங்குவதன் ஊடாக, சர்வதேச பயிற்சியையும் அனுபவங்களையும் நீங்கள் பரிமாறிக்கொள்வதற்கான, தகுதிவாய்ந்த புலம்பெயர்வாளர்களுக்கான திட்டமே இணைப்புத் திட்டமாகும்.

- இணைப்புத் திட்டங்கள் மூலம், நீங்கள் பெறக்கூடியவை:
    - உங்கள் திறன்களை மதிப்பீடு செய்தல்
    - திறன்கள் அல்லது கல்வி பயிற்சி
    - கனேடிய பணியிட அனுபவத்திற்கான மருத்துவ அல்லது வேலை அமர்த்தல்கள்
    - வழிகாட்டல்கள் அல்லது தொடர்பு வலையமைப்பு
    - கனேடிய சான்றிதழ் / உரிமத்திற்கான தேர்வு தயாரிப்பு
    - வேலைவாய்ப்பு உதவி (அதாவது சுய விபரக்கோவை தயாரித்தல், ஒத்திகை நேர்காணல்கள், வேலை தேடல் ஆதரவு)

**தகுதி வரம்பு**
✓ குறைந்தது 18 வயது இருக்க வேண்டும்
✓ ஒன்டாரியோவில் வசிக்க வேண்டும்✓ சர்வதேச இரண்டாம் நிலைக்கு பிந்தைய கல்வி அல்லது பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்
✓ கனேடிய குடியுரிமை பெற்றவர், சாசனத்தின் படியான அகதி, நிரந்தர வதிவாளர் அல்லது செல்லுபடியாகும் கனேடிய பணி அனுமதியுடன் அகதி உரிமைகோருபவரின் குடிவரவு நிலை
✓ நிகழ்ச்சித்திட்டத்தைப் பொறுத்து CLB 5 மற்றும் CLB 8 க்கு இடையிலான குறைந்தபட்ச Canadian Language Benchmark (CLB) மட்டத்தில் இருத்தல்

***உங்களுக்குப் பொருத்தமான பயிற்சித் திட்டத்தைப் பற்றிய கூடுதல் தகவல்களை அறிய, ஒன்டாரியோ அரசாங்க வலைத்தளத்தைப் பார்வையிடவும், Education and Training→ Bridge Training → Ontario Bridge Training Program, முறையே கிளிக் செய்யவும்.
அல்லது Helpingnewcomerswork.ca இன் "Bridging Programs: A Guide for Newcomers" பகுதியை அணுகவும்.
வலைத்தளங்களுக்குச் செல்ல உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், நீங்கள் ஒரு தீர்வு வழங்குநரிடம் கேட்கலாம்.***



# வீட்டுவசதியும் புகலிடமும்

2019 ஆம் ஆண்டில், கனேடிய அரசு தேசிய வீட்டுவசதி மூலோபாயச் சட்டத்தை ஏற்றுக்கொண்டதன் மூலம் போதுமான வீட்டுவசதிக்கான உரிமையை ஓர் அடிப்படை மனித உரிமையாக அங்கீகரித்தது. ஒரு நபரின் கௌரவத்திற்கும் நல்வாழ்விற்கும் வீட்டுவசதி அவசியம் என்பதை இச் சட்டம் அங்கீகரிக்கிறது.

## வீட்டுவசதி தொடர்பான ஒன்டாரியோ மனித உரிமைகள் நெறிமுறை

- பாகுபாடு: வாங்கும் போதும் விற்கும் போதும் வாடகைக்கு எடுக்கும் போதும் வீட்டில் இருந்து வெளியேற்றப்படும் போதும் சமமாகவும் பாகுபாடு இன்றியும் நடத்தப்படுவதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது.
- துன்புறுத்தல்: உங்கள் வீட்டில் இடம்பெறும் துன்புறுத்தலிலிருந்து விடுபட உங்களுக்கு உரிமை உண்டு.
- பயன்படுத்தலும் பழுதுபார்த்தலும்: கதவுகள், சலவை அறைகள், நீச்சல் குளங்கள் போன்ற பொதுவான பகுதிகளை பயன்படுத்தவும் அவற்றை பழுதுபார்க்கவும் உங்களுக்கு உரிமை உண்டு.
- வயது: வீட்டுவசதிகளின் போது பாரபட்சத்திற்கு உள்ளாகின்றீர்கள் அல்லது துன்புறுத்தப்படுகின்றீர்கள் என்றால், மனித உரிமை விண்ணப்பத்தை தாக்கல் செய்ய உங்களுக்கு உரிமை உண்டு. எவ்வாறாயினும், அதற்கு உங்களுக்கு குறைந்தது 18 வயதாகியிருக்க வேண்டும்.  16 அல்லது 17 வயதில் விண்ணப்பிக்கின்றீர்களானால், உங்கள் பெற்றோரின் அதிகாரத்திலிருந்து நீங்கள் சட்டப்பூர்வமாக விடுபட்டிருக்க வேண்டும்.
- பொது உதவி: மாற்றுத் திறனாளர்களுக்கான ஓய்வூதியம், குடும்ப நலத்திட்டங்கள் போன்ற சமூக உதவிகளைப் பெறுகின்றீர்கள் என்பதற்காக வீட்டு உரிமையாளர் உங்களுக்கு வீட்டு வசதி வழங்க மறுக்க முடியாது. வீட்டு உரிமையாளர் என்பவர் நீங்கள் வாடகைக்கு எடுக்கும் சொத்தின் சொந்தக்காரர் ஆவார்.
- பெரியவர்களுக்கு மட்டுமான வீட்டு வசதி: குழந்தைகள் இருப்பதன் அடிப்படையில் பாகுபாடு காட்டப்பட்டு, வீட்டு வசதி மறுக்கப்படக் கூடாது. ஒன்டாரியோவில் அவ்வாறான செயற்பாடு சட்டவிரோதமானது.

விதிவிலக்கு: பகிரப்பட்ட வீட்டுவசதி: பகிர்ந்து வசிக்கும் வீடுகளில் பாகுபாட்டிலிருந்து விடுபடுவதற்கான உரிமை பொருந்தாது, அங்கு நீங்கள் ஒரே குளியலறை அல்லது சமையலறை வசதியை குடியிருப்பின் உரிமையாளருடன் பகிர்ந்துகொள்கிறீர்கள்.

## குடியிருப்பு வாடகை சட்டத்தின் படி (RESIDENTIAL TENANCIES ACT - RTA) குடியிருப்பாளருக்குள்ள உரிமைகள்BEFORE YOU RENT:

நீங்கள் வாடகைக்கு எடுக்கும் முன்னர்:
- இனம், மதம், பாலினம், வயது, பாலியல் நோக்குநிலை, திருமண நிலை, குடும்ப நிலை அல்லது உடல் குறைபாடு ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படாதிருக்கும் உரிமை உங்களுக்கு உள்ளது.
- உங்கள் வீட்டு உரிமையாளருடன் வாடகைத் தொகையை ஒப்புக்கொள்ளும் பொறுப்பு உங்களுடையது.

நீங்கள் குடியேறிய பின்:
- நல்ல நிலையில் உள்ள ஒரு பாதுகாப்பான ஒரு வீட்டிற்கான உரிமை உங்களுக்குள்ளது.
- எதிர்பாராத சேதங்களால் ஏற்படும் செலவுகளை கவனித்துக்கொள்ள வாடகைதாரர் காப்பீட்டிற்கு விண்ணப்பிக்கும் உரிமை உங்களுக்கு உள்ளது.
- சூடான நீர், மிதமான நீர், குளிர்ந்த நீர், மின்சாரம், எரிபொருள் போன்ற முக்கிய சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமை உங்களுக்கு உள்ளது.
  - உங்கள் குடியிருப்பின் உரிமையாளர் பழுதுபார்க்கும் வேலைகளுக்காக இந்த சேவைகளை குறுகிய காலத்திற்கு முடக்க முடியும்.
  - செப்டம்பர் 1 முதல் ஜூன் 15 வரை (அல்லது நகராட்சியால் வரையறுக்கப்பட்டுள்ள படி) உங்கள் வீட்டிற்கு வெப்பமூட்டலை வழங்கும் பொறுப்பு வீட்டின் உரிமையாளருக்கு உள்ளது.
- உங்கள் குத்தகை ஒப்பந்தத்தில், உங்கள் வாடகைப் பகுதிக்கு மத்தியப்படுத்தப்பட்ட காற்றுச் சீராக்கி (central air conditioning) இருப்பது உள்ளடக்கப்பட்டிருந்தால், நியாயமான வெப்பநிலையில் அதனைப் பயன்படுத்துவதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது.
  - அவ்வாறான சூழ்நிலையில், ஜூன் மற்றும் செப்டம்பர் மாதங்களுக்கு இடையில் அதிகபட்சமாக 26°C வெப்பநிலையை பராமரிக்க வேண்டியது உங்கள் வீட்டு உரிமையாளரின் பொறுப்பு



- அந்தரங்கம் பேணும் உரிமை உங்களுக்கு உள்ளது.
  - பழுதுபார்ப்பு போன்ற குறிப்பிட்ட காரணங்களுக்காக மட்டுமே உங்கள் குடியிருப்பு உரிமையாளர் உங்கள் இல்லத்திற்குள் நுழைய முடியும், அவசரநிலை ஏற்படாவிட்டால் அவர்கள் முன்பே உங்களுக்குச் சொல்ல வேண்டும்.
  - உங்கள் வீட்டு உரிமையாளர் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை வாடகைக்கு வீட்டைப்பெற ஆர்வமுள்ளவர்களுக்கு வீட்டைக் காண்பிக்க முடியும். நீங்கள் முதலில் உங்கள் ஒப்புதலை வழங்க வேண்டும், நீங்கள் வெளியேறுகிறீர்கள் என்று வீட்டு உரிமையாளருக்கு அறிவிப்பு கொடுத்த பிறகு அல்லது வெளியேற உரிமையாளர் உங்களுக்கு சட்டப்பூர்வ அறிவிப்பைக் கொடுத்த பிறகே அவ்வாறு செய்ய முடியும்.
- வாடகை அதிகரிப்புகளைக் கட்டுப்படுத்த உங்களுக்கு உரிமை உள்ளது.
  - உங்கள் வீட்டு உரிமையாளர் ஒப்புக்கொள்ளப்பட்ட வாடகையை ஆண்டுக்கு ஒரு முறை சட்ட வரம்புகளுக்குள் அதிகரிக்க முடியும். வாடகை அதிகரிப்பு வழிகாட்டுதலின் படி 2020 ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரையான காலப்பகுதியில் வாடகையை 2.2% அதிகரிக்க முடியும்.
  - வாடகை அதிகரிப்பு பற்றி எழுத்துப்பூர்வமாக குறைந்தபட்சம் 90 நாட்களுக்கு முன்பே அறிவிக்க வேண்டிய பொறுப்பு உங்கள் வீட்டு உரிமையாளருக்கு உள்ளது.
- சட்டவிரோத வெளியேற்றத்தில் இருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை உங்களுக்கு உள்ளது.
  - வெளியேற்றத்திற்கு வழிவகுக்கும் குறிப்பிட்ட சில காரணங்கள் உள்ளன. நீங்கள் வெளியேற்றப்பட்டால், அது தொடர்பில் வீட்டு உரிமையாளர் மற்றும் வாடகைதாரர் வாரியத்தில் Landlord and Tenant Board (LTB) விசாரிக்கும் உரிமை உங்களுக்கு உள்ளது. வெளியேற்றம் குறித்த கூடுதல் தகவலுக்கு, கீழே உள்ள வெளியேற்றப் பகுதியைப் பார்க்கவும்.
- வீட்டில் குழந்தைகளை வைத்திருக்கும் உரிமை உங்களுக்கு உள்ளது.
- உங்கள் வாடகை ஒப்பந்தத்தின் எழுதப்பட்ட நகல், உங்கள் வீட்டு உரிமையாளரின் சட்டப்பூர்வமான பெயர், முகவரி மற்றும் வாடகை பற்றுச்சீட்டுகள் போன்ற சட்ட ஆவணங்களை வைத்திருப்பதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது.

## வாடகைக்கு எடுக்கும் போது நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது

- குடிபுகுந்த 21 நாட்களுக்குள் ஒரு நிலையான வாடகை ஒப்பந்தப் படிவத்தை எழுத்துப்பூர்வமாக வழங்குமாறு கோருங்கள். உங்கள் வாடகை ஒப்பந்தம் ஏப்ரல் 30, 2018 அன்று அல்லது அதற்குப் பிறகு செய்யப்பட்டிருந்தால், உங்கள் நிலையான வாடகை ஒப்பந்தத்திற்கமைய, கீழ்வரும் உரிமைகளும் பொறுப்புகளும் உங்களுக்கு உள்ளன.
  - சமமாக நடத்தப்பட வேண்டும் என உங்கள் ஒப்பந்தம் குறிப்பிடுகிறது.
    - ஒன்டாரியோ மனித உரிமைகள் நெறிமுறையின் படி, வீட்டு வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் போது இனம், பாலினம், குடியுரிமை போன்றவற்றின் அடிப்படையில் பாகுபாடு இல்லாமல் சமமாக நடத்தப்படும் உரிமை உங்களுக்கு உள்ளது.
  - 21 நாட்களுக்குள் உங்கள் வீட்டு உரிமையாளரிடமிருந்து ஒப்பந்தம் உங்களுக்கு வழங்கப்படாவிட்டால், நீங்கள் 1 மாதம் வரை வாடகையை வழங்காமல் நிறுத்தி வைக்கலாம். நீங்கள் வாடகைக் கட்டணத்தை நிறுத்தி வைத்த 1 மாதத்திற்குள் உங்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டால், அந்த மாத வாடகையை திருப்பி செலுத்தும் பொறுப்பு உங்களுக்கு உள்ளது. அவர்கள் ஒப்பந்தத்தை கொடுக்காவிட்டால், நீங்கள் அதனை திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை. 1 மாத வாடகை தொகைக்கு மேல் நீங்கள் நிறுத்தி வைக்க முடியாது.
  - உங்கள் வீட்டு உரிமையாளர் நிலையான வாடகைப் படிவத்தை வழங்கவில்லை என்றால், நீங்கள் வருடாந்த ஒப்பந்தத்தை வைத்திருந்தாலும் 60 நாட்கள் முன்னறிவிப்பினையடுத்து வெளியேற அனுமதிக்கப்படுவீர்கள்.
- நீங்கள் குடிபுகும்போது உங்கள் வீட்டு உரிமையாளரிடமிருந்து ஒரு சிற்றேட்டை நீங்கள் பெற வேண்டும். இந்த சிற்றேடு “புதிய வாடகைதாரர்களுக்கான தகவல்” (Information for New Tenant) என்று அழைக்கப்படுகிறது, மேலும் இது ஒரு வாடகைதாரராக உங்கள் சட்ட உரிமைகளையும் பொறுப்புகளையும் கோடிட்டுக்காட்டுகிறது, அத்துடன் உங்களை வீட்டுவசதி வாரியத்திற்கு அறிமுகப்படுத்துகிறது.
- குடிபுகும் முன் பாதுகாப்பு வைப்பு செய்தல்:
  - நீங்கள் மாதந்தோறும் வாடகை செலுத்தினால், வீட்டு உரிமையாளர் உங்களிடம் 1 மாத வாடகையை மட்டுமே கேட்க முடியும்.
  - நீங்கள் வாரந்தோறும் வாடகை செலுத்தினால், வீட்டு உரிமையாளர் உங்களிடம் 1 வார வாடகையை மட்டுமே கேட்க முடியும்.
  - இந்த வைப்பு உங்கள் கடைசி மாத அல்லது வார வாடகைக்கு பயன்படுத்தப்படும்.
  - நீங்கள் வாடகை வைப்புத்தொகை அல்லது வேறு ஏதேனும் கட்டணம் செலுத்தும்போது எப்போதும் அதற்கான பற்றுச்சீட்டைக் கேளுங்கள்.
  - உங்கள் வாடகை நிலவரத்தைப் பொறுத்து, உங்கள் மாத அல்லது வார வாடகைக்கு மேல் உங்கள் வைப்புத்தொகையை நீங்கள் செலுத்தியிருந்தால், LTB-யை அவர்களின் இலவச அழைப்பிலக்கமான 1-888-332-323 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள், விரைவில் நீங்கள் உங்கள் பணத்தை திரும்பப் பெற வாரியத்திற்கு ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பிக்கலாம்.

# வீட்டுவசதியும் புகலிடமும்

- வீட்டு உரிமையாளர் உங்களிடம் வசூலிக்கக்கூடிய கட்டணங்கள் குறித்து அவதானமாக இருங்கள்
    - உங்கள் காசோலை மீளத் திரும்பினால் அவர்கள் அதற்கு கட்டணம் கோரலாம்.
    - மேலதிக வீட்டுத் திறப்புகள் அல்லது நுழைவு அட்டைகளைத் தருவதற்கு அவர்களுக்கு வைப்பு தேவைப்படலாம். பொதுவாக அந்த திறப்புக்களை மாற்றுவதற்கு ஆகும் செலவை விட அது அதிகமாக இருக்க முடியாது. நீங்கள் வீட்டை விட்டு வெளியேறும் போது, எல்லாத் திறப்புக்களும் திருப்பி வழங்கப்பட்டால், அதற்கான வைப்புத் தொகை உங்களுக்கு திருப்பித் தரப்பட வேண்டும்.
    - அடுக்குமாடி குடியிருப்பைப் பெறுவதற்கான நிபந்தனையாக வீட்டு உரிமையாளர்கள் உங்களை வீட்டு உபகரணங்கள் அல்லது திரைச்சீலைகள் போன்றவற்றை வாங்கச் செய்வது சட்டவிரோதமானது.
- பேணுகை/பராமரிப்புக் கட்டணம் என்பது வீட்டு உரிமையாளரின் பொறுப்பு
    - வீட்டு உபகரணங்கள், பொதுவான பகுதிகள் போன்றவற்றையும், சில சந்தர்ப்பங்களில் குடியிருப்புடனான வாகன நிறுத்துமிடத்தையும் பழுதுபார்ப்பது வீட்டு உரிமையாளரின் பொறுப்பு.
    - உங்கள் வீட்டு உரிமையாளர் விதிகளைக் கடைப்பிடிக்கவில்லை அல்லது பழுதுபார்க்கவில்லை என்பதற்காக வாடகை செலுத்துவதை நிறுத்துவது சட்டவிரோதமானது.
    - பராமரிப்பு வேலைகளுக்கான கோரிக்கையை செய்ய, முதலில் உங்கள் வீட்டு உரிமையாளரிடம் அது பற்றி கலந்துரையாட வேண்டும்.
        - அது பயன்தராவிட்டால், நீங்கள் உங்கள் கோரிக்கையை எழுத்து மூலம் வைக்கலாம். சில வீட்டு உரிமையாளர்களிடம் நீங்கள் நிரப்புவதற்கான பழுதுபார்ப்பு படிவம் இருக்கும்.
        - அனுப்பப்பட்ட, பரிமாறிக்கொள்ளப்பட்ட அனைத்து கடிதங்களினதும் படிவங்களினதும் நகல்களை வைத்திருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.
        - வீட்டு உரிமையாளர் தேவையான பராமரிப்பு வேலைகளுக்கு அதிகக் காலம் எடுத்துக்கொண்டால் அல்லது செய்ய மறுத்தால் ஆய்விற்காக அரசாங்கத்தை நீங்கள் தொடர்புகொள்ளலாம் அல்லது பராமரிப்பு குறித்த வாடகைதாரர் விண்ணப்பமான T6 படிவத்தை நிரப்பி அதனை LTB-க்கு சமர்ப்பிக்க முடியும்.  LTB இன் இணையத்தளத்தில் படிவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.
- உங்கள் வாடகைக் கால முடிவின் இறுதி நாளில், வீட்டிலிருந்து வெளியேறுவதற்கு 60 நாட்களுக்கு முன்னதாக உங்கள் வீட்டு உரிமையாளருக்கு எழுத்துப்பூர்வமாக அறிவிக்க வேண்டும்.
    - நீங்களோ அல்லது உங்கள் பிள்ளையோ பாலியல் துஷ்பிரயோகம் அல்லது வீட்டு வன்முறையை எதிர்கொண்டால், உங்கள் நில உரிமையாளருக்கு 28 நாட்களுக்கு முன்னதாக அறிவிப்பை வழங்க முடியும். நீங்கள் எந்த நேரத்திலும் உங்கள் அறிவிப்பை வழங்கலாம். உங்கள் வாடகைக் காலம் அல்லது ஒப்பந்தம் முடியும் வரை காத்திருக்க வேண்டியதில்லை. இருப்பினும், சில நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்:
        - அந்த 28 நாட்களுக்கான வாடகையை நீங்கள் செலுத்த வேண்டும்.
        - N15 படிவத்தை நீங்கள் கட்டாயமாக பயன்படுத்த வேண்டும்: பாலியல் வன்முறை அல்லது வீட்டு வன்முறை, துஷ்பிரயோகம் ஆகியன குறித்த அச்சத்தின் காரணமாக எனது வாடகைதாரர் ஒப்பந்தத்தை முடிவுறுத்தும் அறிவிப்பு.
        - உங்கள் வீட்டு உரிமையாளருக்கு நீதிமன்ற உத்தரவு (எடுத்துக்காட்டு: ஒரு தடை உத்தரவு அல்லது சமாதான பத்திரம்) அல்லது நீங்கள் அனுபவித்த துஷ்பிரயோகம் குறித்து எழுதப்பட்ட அறிக்கையை வழங்க வேண்டும்.
            - N15 படிவத்தைப் பெற அல்லது எழுதப்பட்ட அறிக்கைக்கான வார்ப்புருக்களைக் கண்டுபிடிக்க, Social Justice Tribunals Ontario (ஒன்டாரியோ சமூக நீதி தீர்ப்பாயங்கள்)வலைத்தளத்திற்குச் செல்லவும்.

*குறிப்பு: அனைத்து குடியிருப்பு வாடகை அலகுகள் அல்லது வாடகை ஒப்பந்தங்கள் RTA-வினால் உள்வாங்கப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். நீங்கள்- வாடகைதாரராக இருந்தால்- உரிமையாளர் அல்லது உரிமையாளரின் குடும்ப உறுப்பினர்களுடன் சமையலறை அல்லது குளியலறையைப் பகிர்ந்து கொள்கிறீர்கள் அல்லது ஒரு பகுதியை ஒரு குறிப்பிட்ட பருவத்திற்கோ அல்லது தற்காலிகமாகவோ பயன்படுத்துகிறீர்கள் என்றால், மேலே பட்டியலிடப்பட்டுள்ள சில உரிமைகளும் விதிகளும் உங்களுக்கு பொருந்தாது. நீங்கள் இலாப நோக்கற்ற அல்லது பொது வீட்டுவசதி அல்லது பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரி குடியிருப்புகளில் வசித்தால் இது பொருந்தலாம். குறிப்பிட்ட சூழ்நிலையில், மேலதிகத் தகவலைப் பெற ஒரு தீர்வு வழங்குனர் அல்லது சட்ட நிபுணரின் உதவியை நாடுங்கள்.*

# வெளியேற்றம்

RTA-வில் கூறப்பட்டுள்ள, வெளியேற்றத்திற்கான பொதுவான காரணங்கள்:

- நீங்கள் வாடகை செலுத்த வேண்டியிருப்பது.
- வாடகையை அடிக்கடி தாமதமாக செலுத்துவது.
- நீங்களோ அல்லது உங்கள் விருந்தினரோ சட்டவிரோதமான எதனையும் வீட்டிற்கு/சொத்துக்கு செய்வது.
- உங்களாலோ உங்கள் விருந்தினராலோ சொத்திற்கு பாரிய சேதம் ஏற்படுவது
- வீட்டு உரிமையாளர் கட்டிடத்தை வேறொரு காரணத்திற்கு பயன்படுத்த விரும்புவது.
- வீட்டு உரிமையாளர், அவரது குடும்பத்தினர் அல்லது வீட்டின் புதிய உரிமையாளர்கள் அங்கு குடிபுக விரும்புவது.

**குடியிருப்பு குத்தகை சட்டத்தில் இல்லாத எந்த காரணத்திற்காகவும் உங்கள் நில உரிமையாளர் உங்களை வெளியேற்ற முடியாது**

வெளியேற்ற நடைமுறை:

- உங்களை வெளியேற்றுவதற்கு அல்லது கதவடைப்பதற்கு முன்னதாக வீட்டு உரிமையாளர் LTB-இடமிருந்து கட்டாயமாக உத்தரவொன்றைப் பெற வேண்டும்.
  - LTB-இடமிருந்து உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்னர் உங்கள் வீட்டு உரிமையாளர் உங்களை அச்சுறுத்துகிறார் அல்லது வெளியேற்றுகிறார் என்றால் உடனடியாக காவல்துறையை அழைக்கவும் அல்லது சட்ட உதவியைப் பெறவும்.
- வீட்டு உரிமையாளர் உங்கள் மீது உடல் ரீதியாக அழுத்தம் பிரயோகித்து வெளியேற்ற முடியாது. காவல்துறையினருக்கு மட்டுமே அது முடியும்.
- வெளியேற்றப்படுவதற்கு முன்னர் உங்கள் ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான எழுத்துமூல அறிவிப்பை அவர்கள் உங்களுக்கு வழங்க வேண்டும்.
  - நீங்கள் எப்போது வெளியேற வேண்டும் எனவும் ஏன் வெளியேற வேண்டும் எனவும் அதில் கூறப்பட்டிருக்கும்.
  - நீங்கள் வெளியேறுவதற்கு குறிப்பிட்ட நாட்களுக்கு முன்னர் வீட்டு உரிமையாளர் உங்களுக்கு அறிவிப்பு வழங்க வேண்டும். இது உங்கள் வெளியேற்றத்திற்கான காரணத்தைப் பொறுத்தது. இங்கே சில உதாரணங்கள் தரப்பட்டுள்ளன:

| வெளியேற்றத்திற்கான காரணம் | உங்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட வேண்டிய நாட்கள் |
|---|---|
| வாடகை கொடுக்கப்பட வேண் | **14** நாட்கள் அல்லது<br>• வாரத்தின் இறுதிக்குள் அல்லது அதே நாளுக்குள் உங்கள் வாடகையை செலுத்தினால் **7** நாட்கள் |
| சேதம் ஏற்படுத்துவது | முதல் அறிவிப்பாக இருந்தால் **20** நாட்கள்.<br>**6** மாதங்களில் இது உங்களுக்கான இரண்டாவது அறிவிப்பாக இருந்தால் **14** நாட்கள் |
| சட்டவிரோதமான போதைமருந்துகளை உற்பத்தி செய்தல், விற்றல் | **10** நாட்கள் |
| வீட்டு உரிமையாளர், அவர்களது குடும்பம் அல்லது பராமரிப்பாளர் குடிபுக விரும்புதல் | **60** நாட்கள் |
| வீட்டு உரிமையாளர் கட்டிடத்தை வேறு எதற்காவது பயன்படுத்த, அல்லது அதைத் தகர்க்க விரும்புதல் | **120** நாட்கள் |

# உங்கள் வீட்டு உரிமையாளருடன் தகராறுகளைத் தீர்த்துக்கொள்வது

உங்கள் வீட்டு உரிமையாளருடன் பிரச்சினையைப் பற்றி விவாதிப்பது சிக்கலைத் தீர்க்கவில்லை என்றால், உங்கள் பிரச்சினையில் உதவக்கூடிய பிற நிறுவனங்கள் உள்ளன.

வீட்டு உரிமையாளருக்கும் உங்களுக்கும் இடையிலான பிணக்கைத் தீர்ப்பதில் **வீட்டு உரிமையாளர் மற்றும் வாடகைதாரர் வாரியம் (THE LANDLORD AND TENANT BOARD - LTB)** உங்களுக்கு உதவ முடியும். வாடகைதாரராக உங்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான வழிமுறையாக நீங்கள் வாரியத்தைத் தொடர்புகொள்ளலாம். அவர்களின் இலவச அழைப்பு இலக்கம் 1-888-332-323.

# வீட்டுவசதியும் புகலிடமும்

- உங்கள் வழக்கை நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய ஒரு விசாரணையை வாரியம் திட்டமிடும், மேலும் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து வாரியம் உங்களுக்கும் உங்கள் வீட்டு உரிமையாளருக்கும் அறிவுறுத்தும்.
- உங்கள் வீட்டு உரிமையாளர் வாடகைக்கு அல்லது சேதங்களுக்கு நீங்கள் பொறுப்பேற்க வேண்டுமென வாரியத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

**The Centre for Equality Rights in Accommodation (CERA)** வெளியேற்றப்படும் அல்லது மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாகும் வாடகைதாரருக்கு இலவச சேவைகளை வழங்குகிறது. வீட்டு உரிமையாளருடனான உங்கள் பிரச்சினையை எளிதில் தீர்க்க முடியுமா அல்லது LTB, மனித உரிமைகள் தீர்ப்பாயத்தின் தலையீடு தேவையா, அல்லது சட்ட நடவடிக்கை வேண்டுமா என உங்களின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் அவர்கள் உங்களுக்கு உதவக்கூடும். (416) 944-0087 எனும் இலக்கத்தின் மூலமோ 1-800-263-1139 எனும் இலவச அழைப்பு இலக்கத்தின் மூலமோ அவர்களைத் தொடர்புகொள்ள முடியும்.

**மனித உரிமைகள் தீர்ப்பாயம் (Human Rights Tribunal)** உங்கள் வழக்கை மறுபரிசீலனை செய்து, உங்கள் மனித உரிமைகள் வீட்டு உரிமையாளரால் மீறப்பட்டுள்ளதா என்பதை தீர்மானிக்க முடியும், அதன்படி ஒன்டாரியோ மனித உரிமைகள் நெறிமுறையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கலாம். (416) 326-1312 எனும் இலக்கத்தின் மூலமோ  (416) 326-1312 எனும் இலவச அழைப்பு இலக்கத்தின் மூலமோ அவர்களைத் தொடர்புகொள்ளலாம்.

உங்கள் நிலைமை பாகுபாடாகக் கருதப்படுகிறதா அல்லது சட்ட தலையீடு தேவையா என்பது குறித்த ஆலோசனையை **மனித உரிமைகள் சட்ட ஆதரவு மையம் (Human Rights Legal Support Centre)** உங்களுக்கு வழங்க முடியும். எல்.டி.பி அல்லது மனித உரிமைகள் தீர்ப்பாயத்தில் புகார் அல்லது விண்ணப்பத்தை தாக்கல் செய்வதற்கு முன் நீங்கள் தயாரிக்க வேண்டிய ஆவணங்கள் அல்லது ஆதாரங்கள் குறித்த ஆலோசனைகளை அவர்கள் உங்களுக்கு வழங்க முடியும். அவர்களை (416) 597-4900 எனும் இலக்கம் அல்லது 1-866-625-5179 எனும் இலவச அழைப்பு இலக்கத்தில் தொடர்புகொள்ளலாம்.

**ஒன்டாரியோவின் வாடகைதாரர்களுக்கான சட்ட மையம் ( Advocacy Centre for Tenants of Ontario)** குறைந்த வருமானம் கொண்ட வாடகைதாரராக உங்கள் உரிமைகளின் பாதுகாப்புக்கும் முன்னேற்றங்களுக்காகவும் வாதிட முடியும். இது வாடகைதாரர் கடமை ஆலோசனை திட்டத்தின் (Tenant Duty Counsel Program) பொறுப்பாகும். இந்தத் திட்டம் உங்கள் சட்ட உரிமைகளுக்காக வாதிடவும், உங்களுக்கு இலவச சட்ட ஆலோசனையை வழங்கவும், உங்களுக்கும் உங்கள் வீட்டு உரிமையாளருக்கும் இடையிலான  விவாதங்களின் போது ஒப்பந்தம் ஒன்றிற்கு வருவதற்கும் உதவும். LTB அல்லது மனித உரிமைகள் தீர்ப்பாயத்தின் முன்பான விசாரணைகளின் போது உங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவர் (குறிப்பாக வெளியேற்றப்பட்ட பிரச்சினையாக இருந்தால்). 1-866-245-4182 எனும் இலவச அழைப்பு இலக்கத்தில் அவர்களைத் தொடர்புகொள்ள முடியும்.

***அந்த நிறுவனங்களில் ஏதேனும் ஒன்றை அணுக உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் அல்லது விளக்கம் தேவைப்பட்டால், நம்பகமான குடும்ப உறுப்பினர் அல்லது நண்பரை அணுகவும் அல்லது கருவித்தொகுப்பின் வளங்கள் பிரிவில் பட்டியலிடப்பட்டுள்ள ஏதேனும் தீர்வு முகவர் நிலையங்களில் உள்ள குடியேற்ற ஊழியரை அணுகவும். ***

## வீட்டுவசதி தொடர்பாக கிடைக்கக்கூடிய உதவிகள் (முழுமையான பட்டியல் இல்லை)

ஒன்டாரியோவின் டொரன்டோ நகரம் தற்காலிக வீட்டு வசதி தேவைப்படும் அகதி அந்தஸ்து கோருபவர்களுக்கு உதவும் திட்டத்தினைக் (Temporary Refugee Response Program) கொண்டுள்ளது. டொரன்டோ நகரின் மத்திய உள்ளழைப்பு இலக்கத்தில் (Central Intake) (416) 338-4766 அல்லது 1-877-338-3398 எனும் இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் திட்டம் பற்றிய பரிந்துரையைப் பெற்றுக்கொள்ளலாம். (doubt)

*டொரன்டோ நகரினால் மேலும் சில அகதிகளுக்கான திட்டங்கள் வழங்கப்படுகின்றன. உங்களுக்கு கிடைக்கக்கூடிய திட்டத்தை அறிந்துகொள்ள மத்திய உள்ளளழைப்பு இலக்கத்திற்கு (Central Intake line) தொடர்பு கொள்ளுங்கள். *

ஒன்டாரியோவின் City of London நகரில் வீட்டு வசதிகளைப் பெற்றுக்கொடுக்க உதவும் Housing Access Centre (HAC) உள்ளது. இது வீட்டு வசதி தேடும் ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்களுக்கு சமூக வீட்டு வசதிகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் அவர்களை காத்திருப்பு பட்டியலில் இணைக்கிறது. சாசனத்தின் படியான அகதிகள், பாதுகாக்கப்பட்ட நபர் மற்றும் அகதி அந்தஸ்து கோருபவர்களுக்கு இந்த சலுகை கிடைக்கிறது.  (519) 661-0861 எனும் இலக்கத்தில் நீங்கள் HAC ஐ தொடர்பு கொள்ளலாம்.

**தகுதி வரம்பு**
✓ 16 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல்.
✓ வீட்டு உறுப்பினர்கள் எவருக்கும் நாடு கடத்தும் உத்தரவு இல்லாமல் இருத்தல்.
✓ வீட்டு உறுப்பினர்களில் எவருக்கும் வாடகைக்கு அல்லது சமூக வீட்டு அலகுகளுக்கு சேதம் ஏற்படுத்தியதற்கான கடன்கள் இல்லாமல் இருத்தல்.
✓ வாடகை மூலம் வருமானம் பெறும் வீட்டு வசதிக்கான (Rent-Geared-To-Income) விண்ணப்பத்தை பூர்த்தி செய்திருத்தல்.

## வாடகை மற்றும் பாவனைக் கட்டணங்களுக்கு உதவிகள் கிடைக்கின்றன (முழுமையான பட்டியல் அல்ல)

**வாடகை மூலம் வருமானம் பெறுவதற்கான மானியம் (Rent-Geared-to-Income Subsidy)**
லண்டன், டொரன்டோ உள்ளிட்ட ஒன்டாரியோ நகரங்களில் மானியங்கள் வழங்கப்படுவதால் வாடகைக்கு வீடுகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளும் நன்மை கிட்டுகிறது. வரிக்கு முன் ஒரு வீட்டின் மொத்த மாத வருமானத்தில் 30% வாடகை கணக்கிடப்படுகிறது. நீங்கள் பிற வகையான சமூக உதவிகளைப் பெறுகிறீர்கள் என்றால், வாடகை அதற்கேற்ப சரிசெய்யப்படுகிறது.

**தகுதி வரம்பு**
✓ வீட்டில் 16 வயதிற்கு மேற்பட்ட ஒருவராவது இருக்க வேண்டும்.
✓ நிதி உதவி இல்லாமல், தனியாக வாழும் திறனுடன் வீட்டின் ஒரு உறுப்பினராவது இருக்க வேண்டும்.
✓ கனடாவில் குடியேற்ற நிலையை ஒரு குடிமகன், நிரந்தர வதிவாளர், நிரந்தர வதிவிடத்திற்கு விண்ணப்பித்தவர், அகதி உரிமை கோருபவர் அல்லது சாசனத்தின் படியான அகதி என நிரூபிக்க முடியும்.

**எவ்வாறு விண்ணப்பிப்பது?**
Housing Connections இணையத்தளத்தில் ஒன்லைன் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ டொரன்டோவிற்கு விண்ணப்பிக்கவும். அல்லது சமூக வீட்டு வசதி திட்டத்தின் கீழ் உள்ள City of London இணையத்தளத்தில் ஒன்லைனில் விண்ணப்பிக்கவும்.

**ஒன்டாரியோ மின்சார உதவித் திட்டம் (Ontario Electricity Support Program - OESP)**
வீட்டு வருமானத்தினதும் அளவினதும் அடிப்படையில் மதாந்தம் கடன் வழங்குவதன் மூலம் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு மின்சாரக் கட்டணங்களை மானிய அடிப்படையில் இத்திட்டம் குறைக்கிறது. வீட்டுப் பாவனைக் கட்டணங்களில் இருந்து இதற்கான வரவு தானாக நிர்வகிக்கப்படுகிறது.

**தகுதி வரம்பு**
✓குறைந்த வருமானம் பெறும் வரம்புடன் பொருந்தக்கூடிய அனைத்து நபர்களும் தகுதியுடையவர்களாவர்.
✓ மின்சார வழங்குநர் அல்லது அலகு துணை-மின்மானி ( unit sub-meter) வழங்குநரிடம் கணக்கு வைத்திருத்தல்.

**எவ்வாறு விண்ணப்பிப்பது?**
- OESP இணையத்தளத்தில் ஒன்லைனில் விண்ணப்பியுங்கள்: www.ontarioelectricitysupport.ca.
- OESP இணையத்தளத்தைப் பயன்படுத்தி விண்ணப்பப் படிவத்தின் பிரதியைப் பெற்று அஞ்சல் மூலம் விண்ணப்பியுங்கள்.
- Intake agency-யை தொடர்புகொண்டு விண்ணப்பிக்கவும். OESP இன் இணையத்தளத்தில் உங்கள் அருகிலுள்ள intake agency-யைக் கண்டறியவும்.

**COSTI வீட்டு வசதி சேவைகள்**
வீட்டு வசதிக்கான நிதியுதவி:
- வெளியேற்றப்படுவதைத் தடுக்க அனைத்து குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களும் அணுகலாம்:
  - சரியான நேரத்தில் வாடகை செலுத்த வட்டி இல்லாத கடன்களை வழங்கப்படுகிறது.
  - மின்சாரம் அல்லது எரிவாயு கட்டணங்களை செலுத்த இலவச எரிசக்தி உதவிக்கு ஒரே தடவையில் மானியம் வழங்கப்படுகிறது.
  - OESP-க்கு விண்ணப்பிக்க உதவப்படுகிறது
  - முதல் அல்லது இறுதி மாத வாடகைக்கு மானியம் வழங்கப்படுகிறது.
- ஏனைய உதவிகள்
  - COSTI-இன் வீட்டு வசதி பணியாளர்கள் உங்கள் வருமானத்திற்கு ஏற்ப மலிவு வாடகையில் வீட்டைப் பெற உதவ முடியும்
  - மானிய விலையில் வீட்டுத்திட்டங்களுக்கு விண்ணப்பிக்க உங்களுக்கு உதவுகிறார்கள்
  - வேலை மற்றும் தன்னார்வத்திற்கான வாய்ப்புகள் வழங்கப்படுகிறது
  - நெருக்கடி நிலையில் வீட்டு வசதி சேவைகள்
  - பட்டறைகள் மற்றும் வழிகாட்டல் வாய்ப்புகள்

*COSTI-இன் சேவைகளை அணுக அவர்களின் www.costi.org எனும் இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள். அதில் Programs & Services→ Housing பகுதிக்கு செல்லுங்கள். வலைத்தளம் 100 க்கும் மேற்பட்ட மொழிகளில் உள்ளது.*

# வங்கி

உங்கள் குடியேற்ற நிலை, தொழில் நிலை, கணக்கில் நீங்கள் வைப்பிடக்கூடிய பணம் மற்றும் நொடிந்து போன (bankruptcy) முந்தைய வரலாறு ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், கனடாவில் ஒரு வங்கியில் அல்லது மத்திய அரசால் ஒழுங்குபடுத்தப்பட்ட கடன் சங்கத்தில் ஒரு கணக்கைத் திறக்க உங்களுக்கு உரிமை உள்ளது. இருப்பினும், நீங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதும் சரியானதுமான அடையாளத்தைக் கொண்டிருக்க வேண்டும் (படி 2 இல் உள்ள உதாரணங்களைப் பார்க்கவும்).

வங்கி கணக்கைத் திறப்பதற்கு முன் கவனிக்க வேண்டிய நான்கு விடயங்கள்:

1. உங்கள் கணக்கின் நோக்கம் என்ன?
2. கணக்கில் நீங்கள் செலுத்த வேண்டிய கட்டணங்கள் யாவை?
3. உங்கள் கணக்கில் உள்ள பணத்திற்கு எவ்வளவு வட்டி பெறுவீர்கள்?
4. நீங்கள் கணக்கில் வைத்திருக்கும் (வைப்பீடு) பணத்திற்கு காப்பீடு உள்ளதா?

## வங்கிக் கணக்கை ஆரம்பிப்பதற்கான படிமுறைகள்

### படி 1: உங்களுக்குத் தேவையான வங்கிக் கணக்கின் வகையைத் தீர்மானித்தல் (காசோலைக் கணக்கு / சேமிப்பு / கடன்).

| காசோலைக் கணக்கு (உங்கள் பணம்) | சேமிப்பு (உங்கள் பணம்) | கடன் (வங்கிப் பணம்) | கூட்டு (உங்களதும் இன்னொருவரதும் பணம்) |
|---|---|---|---|
| • உங்கள் கட்டணங்களை செலுத்துங்கள்<br>• காசோலைகளை எழுதுங்கள்<br>• கடன் அட்டை கொள்முதல் செய்யுங்கள்<br>• மாதாந்த கட்டணம் இல்லை / குறைந்த கட்டணம்<br>• மிகைப்பற்றுக் கட்டணம் இல்லை / குறைந்த கட்டணம்<br>• ATM-ஐ எளிதாக அணுகலாம் | • அவசர நிதியை உருவாக்குங்கள்<br>• குறிப்பிட்ட குறிக்கோள்களுக்கு பணத்தை ஒதுக்குங்கள்<br>• வழக்கமாக மாதாந்தக் கட்டணம் இல்லை<br>• உங்களுக்கு வட்டி விகிதங்களை வழங்குகிறது | • செலவு செய்வதற்கான கடன் ஒதுக்குத் தொகை<br>• வங்கியின் பணத்தை கடன் வாங்குவதால் கொள்முதல்களுக்கு வட்டி அறவிடப்படலாம்<br>• பாதுகாப்பற்ற கடன்<br>• செலவு செய்வதில் வரம்பு | • உங்கள் துணைவர், பங்காளர் அல்லது நண்பருடன் திறக்கப்படலாம்<br>• உங்கள் இருவரின் பணத்தையும் அதில் வைத்திருந்து, அதை நீங்கள் இருவரும் பயன்படுத்தலாம்<br>• பங்குதாரர் கணக்கை துஷ்பிரயோகம் செய்தால் அல்லது அதிகமான நிதிகளை எடுத்தால், கணக்கை மூட அல்லது பிரிக்க உதவுமாறு உங்கள் கிளையை தொடர்பு கொள்ளலாம். |

### படி 2: தேவையானதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதும் சரியானதுமான தனிப்பட்ட அடையாளத்தைத் தயார்படுத்தவும்

வழங்கப்பட்ட அனைத்து வகையான அடையாளங்களும் அசலாக இருக்க வேண்டும் (நகல்கள் வேண்டாம்). நீங்கள் வங்கியில் முன்நிலையாக வேண்டும்:

- பட்டியல் A இலிருந்து இரண்டு ஆவணங்கள்
- பட்டியல் A இலிருந்து ஒரு ஆவணமும் பட்டியல் B இலிருந்து ஒரு ஆவணமும்.
- பட்டியல் A இலிருந்து ஒரு ஆவணமும் நீங்கள் யார் என்பதை உறுதிப்படுத்தும் வங்கியின் நம்பகமான வாடிக்கையாளர் ஒருவரும்

| பட்டியல் A | பட்டியல் B |
|---|---|
| கனேடிய அடையாள அட்டையின் ஏதேனுமொரு வடிவம்:<br>• கனேடிய கடவுச்சீட்டு<br>• கனேடிய ஓட்டுநர் உரிமம்<br>• நிரந்தர வதிவிட அட்டை<br>• கனடாவின் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை படிவம்<br>• கனடா அரசு வழங்கிய சமூக காப்பீட்டு எண் (SIN) அட்டை<br>• Service Ontario-விடம் இருந்து உங்கள் கையொப்பம் மற்றும் புகைப்படத்துடனான ஒரு ஆவணம் அல்லது அட்டை | • ஒரு வெளிநாட்டு கடவுச்சீட்டு<br>• சமூகத்தில் நன்கு அறியப்பட்ட ஒரு தொழில் வழங்குநரால் வழங்கப்பட்ட, புகைப்படத்துடனான ஒரு பணியாளர் அடையாள அட்டை<br>• கையொப்பமிடப்பட்ட தானியங்கி வங்கி இயந்திரம் (ABM) அட்டை<br>• கனேடிய கொடுப்பனவு சங்கத்தின் (Canadian Payments Association) உறுப்பினரால் வழங்கப்பட்ட வாடிக்கையாளர் அட்டை |

* சரிபார்ப்புக்கான கூடுதல் வழிமுறைகளுக்கு, நீங்கள் ஒரு கணக்கைத் திறக்க விரும்பும் வங்கியை அணுகவும் *

**படி 3: நீங்களே வங்கிக்குச் செல்ல வேண்டுமா அல்லது தொலைபேசிமூலமோ இணையம் மூலமாகவோ வங்கிக் கணக்கைத் திறக்க முடியுமா என்பதைத் தீர்மானிக்கவும்**

தனிப்பட்ட வங்கிக் கணக்கைத் திறக்க, நீங்கள் வழக்கமாக நேரில் வங்கிக்குச் செல்ல வேண்டும். நீங்கள் தொலைபேசி அல்லது இணையம் மூலம் கூடுதல் கணக்குகளை திறக்கலாம் (ஒவ்வொரு வங்கிக்குமான விதிவிலக்குகளுடன்).

ஒரு வணிக வங்கிக் கணக்கைத் திறக்க, நீங்கள் நேரில் வங்கிக்குச் சென்றாக வேண்டும்.

**படி 4: வங்கிக் கணக்குகளைத் திறப்பது, பயன்படுத்துவது தொடர்பாக உங்கள் உரிமைகளையும் பொறுப்புக்களையும் புரிந்து கொள்ளுங்கள்**

| நீங்கள் | நிதி நிறுவனங்கள் |
|---|---|
| உங்கள் வங்கிக் கணக்கைப் பற்றிய தகவல்களைப் பெற உங்களுக்கு உரிமை உள்ளது. இந்தத் தகவலில் நீங்கள் செலுத்த வேண்டிய கட்டணங்கள், நீங்கள் பெறக்கூடிய வட்டி, ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் நீங்கள் எவ்வாறு தொடர்பு கொள்ளப்படுவீர்கள் என்பது பற்றிய விவரங்களும்  உங்கள் கணக்கு ஒப்பந்தத்தின் நகலும் அடங்கும். இதை நீங்கள் அஞ்சல் மூலம் (அச்சுநகல்) அல்லது மின்னணு முறையில் பெற விரும்புகிறீர்களா என்பதை தீர்மானிக்கலாம். | • உங்கள் கணக்கைத் திறந்த 7 வேலை நாட்களுக்குள் உங்கள் ஒப்பந்தத்தின் நகலை உங்களுக்கு அனுப்புவது நிதி நிறுவனத்தின் பொறுப்பு.<br>• நடைமுறைக்கு வருவதற்கு 30 நாட்களுக்கு முன்னர் கட்டணங்களில் ஏதேனும் அதிகரிப்பு ஏற்பட்டால் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டியது நிதி நிறுவனத்தின் பொறுப்பு. |
| உங்கள் கணக்கைத் திறந்த 14 நாட்களுக்குள் அதனை இலவசமாக மூடுவதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது. | மோசடி அல்லது சட்டவிரோத காரணங்களுக்காக நீங்கள் அதைப் பயன்படுத்துவீர்கள் என்று நினைத்தால், நிதி நிறுவனங்கள் உங்களுக்காக ஒரு வங்கிக் கணக்கைத் திறக்க மறுக்கலாம். |
| | வரி நோக்கங்களுக்காக வட்டி சம்பாதிக்கும் கணக்கைத் திறக்கிறீர்கள் என்றால் (சேமிப்புக் கணக்கிற்கு பொருந்தாது) நிதி நிறுவனங்கள் உங்கள் SIN அட்டையை மட்டுமே பயன்படுத்த முடியும். மற்ற எல்லா பயன்பாடுகளுக்கும், அவர்கள் முதலில் உங்கள் சம்மதத்தைக் கேட்க வேண்டும், அது எழுத்துப்பூர்வமாக வழங்கப்பட வேண்டும்.<br>• கனடா வருவாய் நிறுவனம் (CRA) மற்றும் / அல்லது ஏதேனுமொரு நிதி நிறுவனமும் தொலைபேசியில் உங்கள்  சமூக காப்பீட்டு எண்ணைக் (SIN) கேட்காது. CRA அல்லது உங்கள் வங்கியில் இருந்து வந்ததாகக் கூறி ஒருவரிடமிருந்து அழைப்பு வந்தால் உங்கள் சமூக காப்பீட்டு எண்ணை வழங்க வேண்டாம். |

**படி 5: ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு வங்கிக் கணக்கைத் திறக்கவும்**

.நீங்கள் அனைத்து நடவடிக்கைகளையும் சரியாக செய்திருந்தால், உங்கள் வங்கிக் கணக்கைத் திறந்து இலவசமாகப் பயன்படுத்தலாம்.

# வங்கி

## கடன் மதிப்பெண்கள்

### கடன் மதிப்பெண்களும் அறிக்கைகளும்

**கடன் மதிப்பெண் என்றால் என்ன?**
கடன் மதிப்பெண் என்பது உங்களுக்கு கடன் கொடுக்கும் ஆள் அல்லது நிறுவனத்திற்கு, நீங்கள் அக்கடனை திருப்பிச் செலுத்தும் சாத்தியம் எவ்வளவு என்பதைக் காட்டும் எண் ஆகும். அதன் அடிப்படையில் உங்களுக்கு கடன் வழங்கலாமா, வேண்டாமா என்பதை அவர்கள் தீர்மானிப்பார்கள். வீட்டு அடமானம் அல்லது கார்கள், குடியிருப்புகளை குத்தகைக்கு விடுவது போன்ற கடன்களுக்கு நீங்கள் விண்ணப்பிக்கும் போது உங்களின் கடன் மதிப்பெண் பார்க்கப்படுகிறது. உங்களின் முந்தைய கடன் பெற்ற வரலாற்றைப் பார்த்து இது தீர்மானிக்கப்படுகிறது: அதாவது திறந்த கணக்குகளின் எண்ணிக்கை, கணக்கு நிலுவைகள், வரம்புகள், திருப்பிச் செலுத்திய வரலாறு, மொத்த கடன் நிலைகள் போன்றவை.

**கடன் மதிப்பெண் வழங்கல்**
இது 300 முதல் 900 வரையிலான மதிப்பெண்ணாக வழங்கப்படுகிறது. அதிக மதிப்பெண், உங்கள் கடன்களை நீங்கள் திருப்பிச் செலுத்துவதற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்துகிறது. எனவே, அதிக கடன் மதிப்பெண் கடன்களைப் பெறுவதை எளிதாக்குகிறது. உதாரணத்திற்கு, வங்கிக் கடனைப் பெற, நீங்கள் 650 அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.

**உங்கள் கடன் மதிப்பெண்ணைச் சரிபார்ப்பது**
உங்கள் கடன் அறிக்கையை ஈக்விஃபாக்ஸ் Equifax மற்றும் டிரான்ஸ்யூனியன் TransUnion மூலம் கோரி பெற்றுக்கொள்ளலாம். வருடத்திற்கு ஒரு முறை அவ்வாறு இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும். கடன் அறிக்கை உங்களின் கடன் மதிப்பெண்ணை உள்ளடக்கி இருக்காது. ஈக்விஃபாக்ஸ் அல்லது டிரான்ஸ்யூனியன் மூலம் உங்கள் கடன் மதிப்பெண்ணைப் பெற நீங்கள் ஒரு கணக்கை உருவாக்க வேண்டும். இந்த சேவையைப் பயன்படுத்த உங்களிடம் சந்தா கட்டணம் வசூலிக்கப்படும். உங்கள் சொந்த கடன் மதிப்பெண்ணை சரிபார்ப்பது எந்த வகையிலும் தீங்கு விளைவிக்காது. உங்கள் கிரெடிட் ஸ்கோரை சரிபார்த்து, சில திறன்பேசிச் செயலிகளில் (Smartphone apps) இலவசமாக அறிக்கை செய்யலாம்.

***கடன் அறிக்கைகள் ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு மொழிகளில் மட்டுமே கிடைக்கின்றன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம், எனவே அறிக்கையின் உள்ளடக்கங்களை உங்களுக்கு விளக்குவதற்கும் மொழிபெயர்ப்பதற்கும் உங்களுக்கு நம்பகமான ஒருவரின் உதவி தேவைப்படலாம். ***

**கடன் மதிப்பெண்களையும் அறிக்கைகளையும் யார் பார்க்கிறார்கள்?**
உங்கள் கடன் அறிக்கையை வாடகை, வேலைவாய்ப்பு அல்லது காப்பீட்டு நோக்கங்களுக்காக பார்வையிடுவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட தேவை உள்ள எவருக்கும் முடியும்.

**ஆண்டுதோறும் உங்கள் கடன் அறிக்கையைச் சரிபார்ப்பதன் அவசியம்**
உங்கள் நிதிகளை சிறந்த முறையில் கையாளவும், கடன்களுக்கும் வாடகைகளுக்கும் தகுதி பெறவும் உங்கள் கடன் மதிப்பெண்ணை நீங்கள் இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் வைத்திருக்க வேண்டும். யாராவது உங்கள் அடையாளத்தைத் திருடி, உங்கள் கணக்குகளைப் பயன்படுத்தி பொருட்களை வாங்குகிறார்களா அல்லது உங்கள் பெயரில் சட்டவிரோத செயல்களைச் செய்கிறார்களா என்பதையும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும். உங்கள் அறிக்கையில் ஏதேனும் பிழைகள் காணப்பட்டால், கடன்-அறிக்கை நிறுவனம், உங்கள் நிதி நிறுவனம் ஆகியவற்றை உடனடியாக தொடர்பு கொள்ள நீங்கள் ஒரு தீர்வு ஆலோசகர் அல்லது நம்பகமான நபரின் (ஆங்கில மொழிப்புலமை கொண்டவர்) உதவியை நாட வேண்டும்.

# வரிகள்

*கனடாவில், உங்கள் வருமான வரி கடமைகள் வதிவிட நிலையை அடிப்படையாகக் கொண்டது, உங்களின் குடியுரிமை அல்லது குடியேற்ற நிலையைப் பொருத்தது அல்ல.*

**நிரந்தர குடியிருப்பாளர்கள் மற்றும் குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வந்த எவரும்** (சாசனத்தின் படியான அகதிகள், “கொள்கையளவில்” ஒப்புதல் உள்ளவர்கள் இதில் அடங்குவர்)

நீங்கள் ஒரு சாசனத்தின் படியான அகதி, பாதுகாக்கப்பட்ட நபர் அல்லது அகதி அந்தஸ்து கோருபவராக இருந்தாலும், நீங்கள் கனடாவிற்குள் நுழைந்த நாளில் இருந்து CRA ஆல் வரி நோக்கங்களுக்காக ஒரு வதிவிடவாளராகக் கருதப்படுவீர்கள்.

முதல் ஆண்டில், அந்த ஆண்டில் நீங்கள் சம்பாதித்த உலகளாவிய வருமானத்திற்கு (world income) வரி விதிக்கப்படும். உலகளாவிய வருமானம் என்பதில் கனடாவுக்கு உள்ளேயும் வெளியேயும் நீங்கள் சம்பாதித்த எந்தவொரு வருமானமும் அடங்கும். நீங்கள் வசித்த நாட்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் உங்கள் வருமானம் மதிப்பிடப்படும்.

விதிவிலக்கு: நீங்கள் கனடாவில் வசிக்காதபோது உங்கள் வருமானத்தில் 90% சம்பாதித்திருந்தால், உங்களுக்கு வரி விதிக்கப்படாது. இருப்பினும், நீங்கள் உங்கள் வரிகளை தாக்கல் செய்ய வேண்டும்!

## வரி அறிக்கைகள்

### வருமான வரி அறிக்கையை நீங்கள் ஏன் தாக்கல் செய்ய வேண்டும்?

- உங்களிடம் நிலுவைத் தொகை இருந்தால் (ஆண்டு முழுவதும் உங்கள் வருமானத்திற்கு போதுமான வரி செலுத்தவில்லை என்பதால்), இந்த தொகையை நீங்கள் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டும். உங்கள் வரிகளை செலுத்தத் தவறினால், இந்த நிலுவைத் தொகையின் காரணமாக மாதாந்த வட்டி அறவிடப்படும்.
- அரசாங்கம் உங்களுக்கு பணம் தரவேண்டியிருந்தால் (மீளளிப்பு), அதைப் பெறுவதற்கு நீங்கள் வரிகளை அறிக்கையிட வேண்டும்.
- வரிகளை செலுத்துவது சமூக உதவிக்கு விண்ணப்பிக்கும்போது மற்றும் அடமானம் பெறும்போது நீங்கள் பயன்படுத்தக்கூடிய வருமானத்திற்கான சான்றுகளை வழங்குகிறது.
- வரிகளை செலுத்துவது பண்டம் மற்றும் சேவைகள் வரி / ஒத்திசைவான விற்பனை வரி (GST/HST) கடன் போன்ற சலுகைகளைப் பெற உங்களை அனுமதிக்கிறது. GST/HST கடன் என்பது வரி இல்லாத கட்டணமாகும், இது உணவு, உடைகள் போன்ற பொருட்களுக்கு நீங்கள் செலுத்தும் GST/HST வரியினை முழுமையாகவோ அல்லது பகுதியளவாகவோ இரத்து செய்யும். காலாண்டுக்கு ஒரு முறை இதனை நீங்கள் பெறுவீர்கள். குறைந்த அல்லது மிதமான வருமானம் பெறும் நபர்களுக்கு இது கிடைக்கிறது.

### வருமான வரி அறிக்கையை நான் எவ்வாறு தாக்கல்செய்ய முடியும்?

உங்களுக்கு வழக்கமாக T4 வருமான சீட்டு தேவைப்படும், அது உங்கள் தொழில் வழங்குநரால் உங்களுக்கு அனுப்பப்படும். ஒரு T4 வருமான சீட்டு என்பது ஒரு வரி ஆண்டில் செலுத்தப்பட்ட வருமானம், இந்த வருமானத்தில் எவ்வளவு வரி கழிக்கப்பட்டது என்பவற்றை கூறி உங்கள் முதலாளி உங்களுக்கு வழங்கிய தகவல் சீட்டு ஆகும். நீங்கள் வரிவிதிப்புகளுக்கு தாக்கல் செய்யும்போது இந்த சீட்டு CRA க்கு வழங்கப்படுகிறது. நீங்கள் வேலையில்லாமல் இருந்தால், அதை உங்கள் வரிக் கோப்பில் தெரியப்படுத்துகிறீர்கள். வரி தாக்கல் செய்வதற்கான காலக்கெடு பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 30 ஆகும். காலக்கெடுவிற்குள் உங்கள் வரிகளை தாக்கல் செய்யத் தவறினால், நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவையில் 5% தொகையில் CRA ஆல் தண்டம் விதிக்கப்படும். ஒவ்வொரு கூடுதல் மாதத்திற்கும் உங்கள் நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்தத் தவறினால், அதிகபட்சம் 12 மாதங்களுக்கு ஒரு சதவீதம் சேர்க்கப்படும்.

**உங்கள் வரிகளைத் தாக்கல் செய்வதற்கான உதவிக்கு, இலவச வருமான வரி நிலையத்தின் உதவியை நீங்கள் பெறலாம். உங்களுக்கு அருகிலுள்ள ஒரு இலவச வரி செலுத்தும் நிலையத்தைக் கண்டுபிடித்து, நீங்கள் சேவைகளைப் பெற விரும்பும் மொழியைத் தெரிவு செய்ய, இந்த இணைப்பிற்குச் செல்லவும்:**
**https://www.canada.ca/en/revenue-agency/campaigns/free-tax-help.html#fat.**

# வளங்கள்

**Settlement Services**
**Greater Toronto Area (GTA)**
**Arab Community Centre of Toronto (ACCT)**
555 Burnhamthorpe Rd #209,
Etobicoke, ON M9C 2Y3
Tel: (416) 231-7746
https://www.acctonline.ca/

**Centre for Immigrant and Community Services (CICS)**
2330 Midland Avenue, Toronto, ON, M1S 5G5
Tel: (416) 292-7510
https://www.cicscanada.com/en/

**Centre for Education and Training**
50 Burnhamthorpe Rd W #300,
Mississauga, ON L5B 3C2
Tel: (905) 949-0049
https://www.tcet.com/nu/

**COSTI Immigrant Services**
1710 Dufferin Street, Toronto, ON M6E 3P2
Tel: (416) 658-1600
http://www.costi.org/index.php

**FCJ Refugee Centre**
208 Oakwood Ave., Toronto, ON M6E 2V4
Tel: (416) 469-9754
https://www.fcjrefugeecentre.org/

**Newcomer Women's Services Toronto**
745 Danforth Avenue, Suite 401,
Toronto, ON, M4J Jl4
Tel: (416) 469-019
6https://www.newcomerwomen.org/

**Polycultural Immigrant and Community Services**
17 Four Seasons Pl Suite 102,
Etobicoke, ON M9B 6E6
Tel: (416) 233-1655
http://www.polycultural.org/

**Punjabi Community Health Services (PCHS)**
2980 Drew Road, Unit # 241,
Mississauga, ON L4T 0A7
Tel: (905) 677-0889
http://pchs4u.com/

*Services offered in English and/or Punjabi, Hindi, Urdu, Malayalam, and Arabic (with exceptions).*

**Settlement Assistance and Family Support Services (SAFSS)**
1200 Markham Rd., Suite #214,
Toronto, ON M1H 3C3
Tel: (416) 431-4847
https://www.safss.org/index.html

**South Asian Women's Centre (SAWC)**
800 Lansdowne Ave #1, Toronto, ON M6H 4K3
Tel: (416) 537-2276
http://www.sawc.org/

*Settlement services available in 10+ languages.*

**West Neighbourhood House**
248 Ossington Avenue, Toronto, ON M6J 3A2
Tel: (416) 532-4828
http://www.westnh.org/

**London**
**Cross-Cultural Learner Centre (CCLC)**
505 Dundas Street London, ON N6B 1W4
Tel: (519) 432-1133
https://www.lcclc.org/

**Islamic Centre of Southwest Ontario**
951 Pond Mills Rd, London, ON N6N 1C3
Tel: (519) 668-2269
https://www.facebook.com/icswo/

**London Public Library**
251 Dundas St, London, ON N6A 6H9
Tel: (519) 661-4600
http://www.londonpubliclibrary.ca/

**LUSO Community Services**
1193 Oxford Street East, Unit 2,
London, ON
Tel: (519) 452-1466
http://www.lusocentre.org/

**South London Neighbourhood Resource Centre**
1119 Jalna Blvd., London Ontario, N6E 3B3
Tel: (519) 686-8600
http://www.slnrc.org/

**YMCA of Southwestern Ontario**
165 Elmwood Avenue East,
London, ON N6C 0A8
Tel: (519) 645-7553
http://ymcawo.ca/

**Online Resources**
**Settlement.org**
(Website providing information for newcomers on topics such as: Immigration & Citizenship | Housing | Health | Employment | Legal Services

**Services for Women Experiencing Violence & Abuse**
**GTA**
**Barbra Schlifer Commemorative Clinic**
489 College St, Toronto, ON M6G 1A5
Tel: (416) 323-9149
https://schliferclinic.com/

*Services offered for free to women who experienced abuse, with interpreters speaking 200+ languages.*

**East Metro Youth Services (EMYS)**
1200 Markham Road, Suite 200,
Scarborough, ON
Tel: (416) 438-3697
http://emys.on.ca/

*Free counselling services in multiple languages.*

**Family Services Association of Toronto**
355 Church Street, Toronto, ON M5B 1Z8
Tel: (416) 595-9230
https://familyservicetoronto.org/

*English, Tamil, Farsi, Spanish, Tagalog & French interpreters available*

**Family Services of Peel- Domestic Violence Prevention Program**
2155 Leanne Boulevard, Suite 216,
Mississauga, ON L5K 2K8
Tel: (905) 855-8028
https://fspeel.org/

**Rexdale Women's Centre**
21 Panorama Ct #23, Etobicoke, ON M9V 4E3
Tel: (416) 745-0062
http://www.rexdalewomen.org/

**Scarborough Centre for Healthy Communities**
629 Markham Rd Unit 2, Scarborough, ON M1H 2A4
Tel: (416) 642-9445
https://www.schcontario.ca/

*Services available for all with or without immigration status or OHIP coverage. NO cost. Interpreters available.*

**Canadian Centre for Victims of Torture**
194 Jarvis St 2nd floor, Toronto, ON M5B 2B7
Tel: (416) 363-1066
http://ccvt.org/

*Services offered in Arabic, French, Spanish, & Tamil.*

**London**

**Changing Ways (London) Inc.**
388 Dundas Street, Suite 302B, London, ON N6B 1V7
Tel: (519) 438-9869
https://www.changingways.on.ca/

**London Abused Women's Centre**
797 York Street – Unit 5, London, Ontario N5W 6A8
Tel: (519) 432-2204
https://www.lawc.on.ca/

**Online Resources**

**Shelter safe**
(Online resource for women and their children seeking safety from violence and abuse across Canada)
https://www.sheltersafe.ca/

## Legal Services and Information

**GTA**

**Advocacy Centre for Tenants Ontario (ACTO)**
55 University Ave Suite 1500, Toronto, ON M5J 2H7
Tel: 1-866-245-4182
https://www.acto.ca/

**Chinese & Southeast Asian Legal Clinic**
123 Edward St Suite 505, Toronto, ON M5G 1E2
Tel: (416) 971-9674
https://csalc.ca/

**Family Law Information Centre (FLIC) in Toronto**
47 Sheppard Ave E, North York, ON M2N 5X5
Tel: (416) 326-1233
Other FLIC locations:
https://www.attorneygeneral.jus.gov.on.ca/english/courts/Court_Addresses/.

**Human Rights Legal Support Centre**
180 Dundas St W, 8th floor, Toronto, ON M7A 0A1
Tel: (416) 597-4900
Toll-free: 1 (866) 625-5179
https://www.hrlsc.on.ca/en/home

**Human Rights Tribunal of Ontario (The Tribunal)**
655 Bay Street, 14th Floor, Toronto, ON M7A 2A3
Tel : (416) 326-1312
Toll Free: 1-866-598-0322
http://www.sjto.gov.on.ca/hrto/

**JusticeNet**
8185 Yonge St., Suite 213, Thornhill, ON L3T 2C6
Tel: (416) 479-0551
Toll-free: 1-866-919-3219
https://www.justicenet.ca/

**Landlord and Tenant Board**
3 Robert Speck Pkwy, Mississauga, ON L4Z 2G5
Tel: (416) 645-8080
Toll-free: 1-888-332-3234
http://www.sjto.gov.on.ca/ltb/

**Legal Aid Ontario**
Tel: 416-979-1446
Toll-free: 1-800-668-8258
www.legalaid.on.ca

**Legal Aid Ontario: Refugee Law Office**
20 Dundas St W, Unit 201, Toronto, ON M5G 2C2
Tel: (416) 977-8111

**Office of the Worker Advisor**
10 Kingsbridge Garden Cir #512, Mississauga, ON L5R 3K6
Tel: (905) 568-2359
http://www.owa.gov.on.ca/en/Pages/default.aspx

**Parkdale Community Legal Services**
1229 Queen Street West, Toronto, ON M6K 1L2
Tel: (416) 531-2411
https://www.parkdalelegal.org/

**Probono Ontario**
393 University Ave Suite 110, Toronto, ON M5G 1E6
Tel: 1-855-255-7256
https://www.probonoontario.org/

**South Asian Legal Clinic of Ontario (SALCO)**
45 Sheppard Avenue East, Suite 106A, Toronto, ON M2N 5W9
Tel: (416) 487-6371
https://salc.on.ca/

**London**

**The Ed Corrigan Law Office**
**383 Richmond St. Suite 902,**
London, Ontario N6A 3C4
Tel: (519) 439-4015
https://www.edcorrigan.ca

**Family Law Information Centre (FLIC) in London**
80 Dundas St, London, ON N6A 6A5
Tel: (519) 660-3001

**Neighbourhood Legal Services (London & Middlesex) Inc. ("NLSLM")**
910 – 383 Richmond St., London, ON N6A 3C4
Tel: (519) 438-2890
https://nlslm.com/

**Online Resources**

**Community Legal Education Ontario (CLEO)**
Tel: (416) 408-4420
https://www.cleo.on.ca/en

**Legalline.ca**
https://www.legalline.ca/

## Health and Mental Health Services

**GTA**

**The Canadian Centre for Refugee & Immigrant Health Care (CCRIHC)**
4158 Sheppard Ave E, Scarborough, ON M1S 1T3
Tel: (647) 267-2176
https://www.healthequity.ca/

*Services offered regardless of insurance or immigration status for free.*

**The Etobicoke Children's Centre (ECC)**
200 Ronson Drive, 4th Floor, Etobicoke, ON M9W 5Z9
Tel: (416) 240-1111
http://www.etobicokechildren.com/

*Free counselling services in multiple languages.*

**Sherbourne Health Centre**
333 Sherbourne Street, Toronto, Ontario M5A 2S5
Tel: (416) 324-4180
https://sherbourne.on.ca/

*Mental health services are provided free of charge in multiple languages*.

**Women's Health in Women's Hands**
2 Carlton Street, Suite 500, Toronto, ON M5B 1J3
Tel: (416) 593-7655
http://www.whiwh.com/

**Yorktown Family Services**
2010 Eglinton Ave. West Suite 300, Toronto, ON M6E 2K3
Tel: (416) 394-2424
https://www.yorktownfamilyservices.com/

*Free counselling services with interpretation services.*

**London**
**London Intercommunity Health Centre**
659 Dundas Street, London, ON N5W 2Z1
Tel: (519) 660-0874
https://lihc.on.ca/

*For other locations in London, check the website. Services offered in a variety of languages.*

**Middlesex-London Health Unit**
355 Wellington St., London, ON
Tel: (519) 663-5317
https://www.healthunit.com/

**Telehealth Ontario**
Tel: +1 866-797-0000
*Services offered in multiple languages upon request.*

## Employment Services

**GTA**
**Times Change Women's Employment Services**
2 Carlton St. Suite 1005 (10th floor), Toronto, Ontario M5B 1J3
Tel: (416) 927-1900
https://www.timeschange.org/

**Toronto Community Employment Services**
150 Eglinton Ave E #807, Toronto, ON M4P 1E8
Tel: (416) 488-0084
https://toronto-jobs.org/

**Workers' Action Centre**
720 Spadina Avenue, 2nd floor, Suite 223, Toronto, Ontario M5S 2T9
Tel: (416) 531-0778
Toll-free: 1-855-531-0778
https://workersactioncentre.org/

**YWCA Toronto Women's Employment Centre**
87 Elm Street, Toronto, ON M5G 0A8
Tel: (416) 961-8100
https://www.ywcatoronto.org/ London

**London**
**London Employment Help Centre**
100-150 Dufferin Ave, London, ON N6A 5N6
Tel: (519) 439-0501
http://www.lehc.ca/

*Services offered in English, Arabic, Turkish, Hebrew, Russian and others.*

**WIL Employment Connections**
The Skill Centre, 141 Dundas Street, 4th Floor, London ON N6A 1G3
Tel: (519) 663-0774
http://www.wil.ca/

## Housing Services & Shelters

**Centre for Equality Rights in Accommodation**
192 Spadina Ave Suite 427, Toronto, ON M5T 2C2
Tel: (416) 944-0087
https://www.equalityrights.org/

**Matthew House Toronto**
981 Dundas St W, Toronto, ON M6J 1W4
Tel: (416) 203-7848
https://www.matthewhouse.ca/

**Nisa Home**
115 Matheson Blvd W, Unit 214, Mississauga, ON, L5R 3L1
Tel: +1 (888) 456-8043
https://www.nisahomes.com/

*Services are available in multiple languages.*

**Ralph Chiodo Family Immigrant Reception Centre (COSTI's)**
100 Lippincott Street, Toronto, ON M5S 2P1
Tel: (416) 922-6688
http://www.costi.org/programs/program_details.php?sid=0&pid=0&id=164

*Free services available for government assisted refugees and refugee claimants referred by the City of Toronto. Services provided in 20+ languages.*

**Sojourn House**
101 Ontario Street, Toronto, ON M5A 2V2
Tel: Shelter: (416) 864-0515
Transitional Housing: (416) 864-9900
Administration: (416) 864-9136
http://www.sojournhouse.org/

**London**
**ANOVA**
225 Horton Street E., London, ON, N6B 1L1
Tel: (519) 642-3003
http://www.anovafuture.org/
24-hrs Emergency shelters addresses:
101 Wellington Road, London, Ontario
450 Clarke Road, London, Ontario

**Unity Project**
717 Dundas Street, London ON N5W 2Z4
Tel: (519) 433-8700
https://unityproject.ca/

## Additional Resources

**Network of Agencies Against Forced Marriage (NAAFM)**
http://www.forcedmarriages.ca/get-connected/naafm-network-of-agencies-against-forced-marriages/

**Scholarships for Post-secondary Education**
**Scholarships Available in Ontario:**
https://scholarship-grants.org/category/scholarships-in-ontario/

**Scholarships Available Specifically for Refugees:The Hegg Hoffet Fund for Graduate Women:**
https://graduatewomen.org/what-we-do/grants-fellowships/hegg-hoffet/

**The World University Service of Canada (WUSC) Student Refugee Program:** https://srp.wusc.ca/